රාජ්‍ය භාෂාවෙන් වෙනම මුද්‍රණය කර ඇත.

# இலங்கை

# அரசியலமைப்பு

(அரசாங்கத்தின் ஆணையின்பேரில் அச்சிடப்பட்டது)

1972

இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, செயலாளர் கருமாலயம், த. பெ. 500, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூ. 3.25 தபாற் செலவு : சதம் 50

# இலங்கை அரசியலமைப்பு

பௌத்த ஆண்டு ஈராயிரத்து ஐந்நூற்றுப் பதினைந்து வைகாசி வளர் பிறை பத்தாந் நாளன்று அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு மே மாதம் இருபத்திரண்டாம் நாள் திங்கட்கிழமையாகிய இன்று இலங்கை மக்களின் அரசியல் நிருணய சபையினால் வகுத்தமைத்துச் சட்டமாக்கப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு.

நொயெல் தித்தவல்ல,
செயலாளர்,
அரசியல் நிருணயசபை.

கொழும்பு, 1972, மே 22.

# இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு

## பொருளடக்கம்


### அத்தியாயம் 1

மக்கள், அரசு, இறைமை

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கைக் குடியரசு | 3 |
| 2. | ஒற்றையாட்சி அரசு | 3 |
| 3. | மக்களின் இறைமை | 3 |
| 4. | தேசிய அரசுப் பேரவை | 3 |
| 5. | அரசதத்துவத்தின் மீயுயர் கருவி | 3 |

### அத்தியாயம் 2

பௌத்தமதம்

| | | |
|---|---|---|
| 6. | பௌத்தமதம் | 4 |

### அத்தியாயம் 3

மொழி

அரசகரும மொழி

| | | |
|---|---|---|
| 7. | அரசகரும மொழி சிங்களம் | 5 |
| 8. | தமிழ் மொழியின் உபயோகம் | 5 |

சட்டவாக்க மொழி

| | | |
|---|---|---|
| 9. | சட்டவாக்க மொழி | 5 |
| 10. | ஆங்கிலத்தில் உள்ள சட்டங்கள் சிங்களத்தில் வெளியிடப்பட்டதும் அவை மேலோங்கி நிற்றல் | 5 |

நீதிமன்றங்களின் மொழி

| | | |
|---|---|---|
| 11 | நீதிமன்றங்களின் மொழி | 6 |

### அத்தியாயம் 4

பொதுவான ஏற்பாடுகள்

| | | |
|---|---|---|
| 12. | இப்போதுள்ள சட்டங்கள் | 8 |
| 13. | குடியரசின் தத்துவங்களும் சிறப்புரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளும் | 9 |
| 14. | குடியரசின் உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் என்பன | 9 |
| 15. | சட்டங்களின் சென்றகாலச் செயற்பாடு, முன்னைய செயல்கள், தவறுகள், முடிவுறுதிருக்கும் வழக்குகள் முதலியன | 9 |

### அத்தியாயம் 5

அரச கொள்கைக் கோட்பாடுகள்

| | | |
|---|---|---|
| 16. | அரசகொள்கைக் கோட்பாடுகள் | 10 |
| 17. | அரசகொள்கைக் கோட்பாடுகள் நீதிமன்ற ஆய்வுக்குட்படாமை | 11 |


2—கே 13039—4100 (5/72)

## அத்தியாயம் 6

### அடிப்படையுரிமைகளும் சுதந்திரங்களும்

பிரிவு

பக்கம்

18. அடிப்படையுரிமைகளும் சுதந்திரங்களும் .. .. .. 12

## அத்தியாயம் 7

### குடியரசின் சனாதிபதி

19. அரசின் தலைவர் .. .. .. .. .. 14
20. சனாதிபதி ஆட்சித் துறைத்தலைவரும் படைத்தலைவருமாதல் .. .. 14
21. சனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும் .. .. .. 14
22. மன்னிப்பு வழங்கல் .. .. .. .. 15
23. சனாதிபதி வழக்குத் தொடரப்படுவதிலிருந்து விடுபாடு உரியவராதல் .. .. 16
24. சனாதிபதியின் சம்பளம் .. .. .. .. 16
25. சனாதிபதியின் நியமனமும் அவர் பதவி ஏற்றலும் .. .. .. 16
26. சனாதிபதியின் பதவிக்காலம் .. .. .. .. 17
27. சனாதிபதி ஆலோசனையின் மீது செயலாற்ற வேண்டுதல் .. .. 17
28. பதில் சனாதிபதி .. .. .. .. .. 18

## அத்தியாயம் 8

### தேசிய அரசுப்பேரவை

### பொதுவான ஏற்பாடுகள்

29. தேசிய அரசுப்பேரவையின் உறுப்பினர் தொகையும் பதவிப் பெயரும் .. 19
30. வெற்றிடமிருப்பினும் தேசிய அரசுப்பேரவை முறைப்படி அமைக்கப்பட்டதாதல் .. 19
31. விசுவாசச் சத்தியம் .. .. .. .. 19
32. சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் என்போர் 19
33. தேசிய அரசுப்பேரவை இருக்கைகளில் தலைமை வகிப்போர் .. .. 20
34. கூட்ட நடப்பெண் .. .. .. .. 20
35. தேசிய அரசுப்பேரவைச் செயலாளர் .. .. .. 20
36. தேசிய அரசுப்பேரவையில் ஆசனம் வெற்றாதல் .. .. .. 21
37. நிலையான கட்டளைகள் .. .. .. .. 21
38. தேசிய அரசுப் பேரவையின் சிறப்புரிமைகளும் உறுப்பினரின் ஊதியமும் .. 22
39. தேசிய அரசுப்பேரவையின் நடவடிக்கைகள் நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டனவாதல் .. .. .. .. .. 22

### தேசிய அரசுப்பேரவையின் காலம்

40. தேசிய அரசுப்பேரவையின் காலம் .. .. .. 23
41. தேசிய அரசுப்பேரவையின் அமர்வுகள் .. .. .. 23

### முதலாவது தேசியஅரசுப் பேரவை

42. முதலாவது தேசியஅரசுப் பேரவை .. .. .. .. 24

### முதலாவது முதலமைச்சர்

43. முதலாவது முதலமைச்சர் .. .. .. .. 25

### தேசிய அரசுப்பேரவையின் சட்டமாக்கற்றத்துவம்

44. தேசிய அரசுப் பேரவையின் சட்டமாக்கற்றத்துவம் .. .. .. 25
45. பிரதான சட்டமாக்கற்றத்துவத்தைக் கையளித்தலாகாது .. .. 25

## அத்தியாயம் 9

### சட்டங்களை ஆக்குவதற்கும் பிரேரணைத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைமுறை


பிரிவு | பக்கம்

46. சட்டமூலத்தை வெளியிடுதலும், நிறைவேற்றுதலும் .. .. .. 27
47. தேசிய அரசுப் பேரவையில் வாக்களித்தல் .. .. .. 27
48. சட்டமூலம் எப்பொழுது சட்டமாகும் .. .. .. 27
49. சபாநாயகரின் அத்தாட்சி .. .. .. .. 27
50. பிரேரணைத் தீர்மானங்கள் .. .. .. .. 28


## அத்தியாயம் 10

### அரசியலமைப்பைத் திருத்தும் சட்டங்களும் அரசியலமைப்போடு ஒத்துவராத சட்டங்களும் தொடர்பிலான விசேட நடவடிக்கைமுறை


51. அரசியலமைப்பைத் திருத்துதல் அல்லது நீக்குதல் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும் .. .. .. .. .. 29
52. அரசியலமைப்போடு ஒத்துப்போகாத சட்டங்களையாக்குதல் .. .. 30


சட்டமூலங்களை ஆராய்தல்


53. வெளியிடப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குள்ள கடமைகள் 30


அரசியலமைப்பு நீதிமன்றம்


54. அரசியலமைப்பு நீதிமன்றம் .. .. .. .. 31
55. அவசரச் சட்டமூலங்கள் .. .. .. .. 32
56. அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வெற்றிடங்கள் .. .. .. 33
57. அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினரின் ஊதியங்கள் .. .. 33


அரிசியலமைப்பு நீதிமன்றத்தின் நடவடிக்கைமுறை


58. அரசியலமைப்பு நீதிமன்றக்கூட்டங்களைக் கூட்டுதல் .. .. .. 34
59. அரசியலமைப்பு நீதிமன்றம் அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குசெய்தல் .. 34
60. தவிசாளர் .. .. .. .. .. 34
61. அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவுகள் .. .. .. 34
62. அரசியலமைப்பு நீதிமன்றங்களின் இருக்கைகள் .. .. .. 34
63. அரசியலமைப்பு நீதிமன்றம் வாதங்களைக் கேட்டலும் யார் அதன் முன்னர் தோன்றலாம் என்பதும் .. .. .. .. 34
64. அரசியலமைப்பு நீதிமன்ற அவமரியாதை .. .. .. 35
65. அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவுகளும் காரணங்களும் எக்காலத்திலுள் தரப்படல் வேண்டும் என்பது .. .. .. .. 35


## அத்தியாயம் 11

### தேசிய அரசுப்பேரவையின் அமைப்பு

வாக்குரிமை


66. வாக்களிக்கும் வயது .. .. .. .. 36
67. பிரசாவுரிமைச் சட்டங்கள் .. .. .. .. 36
68. உறுப்பினரைத் தெரிபவர்க்கான தகுதியீனங்கள் .. .. .. 36
69. தேசிய அரசுப்பேரவை உறுப்பாண்மைக்கான தகுதி .. .. .. 38
70. தேசிய அரசுப்பேரவை உறுப்பாண்மைக்கான தகுதியின்மை .. .. 39
71. தகுதியற்றவராயுள்ளபோது தேசிய அரசுப்பேரவையில் அமர்ந்திருப்பதற்கும் வாக்களிப்பதற்குமான தண்டம் .. .. .. .. 40

தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் தேர்தல்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 72. | தேர்தல் சுதந்திரமானதும் இரகசியமானதுமாதல் .. .. .. | 41 |
| 73. | தேர்தல்கள் சம்பந்தமாகத் தேசிய அரசுப்பேரவைக்குள்ள தத்துவங்கள் .. | 41 |
| 74. | தேர்தல்காலத்தின் போது அரச அலுவலர் பணி புரியலாகாது .. .. | 41 |
| 75. | தேர்தல் தொடர்பாக அப்போதுள்ள சட்டங்கள் தொடர்ந்திருத்தல் .. .. | 42 |


தேர்தல் மாவட்டங்களை வரையறுத்தல்


| | | |
|---|---|---|
| 76. | தேர்தல் மாவட்டங்களை வரையறுத்தல் .. .. .. | 42 |
| 77. | தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவைத் தாபித்தல் .. .. | 42 |
| 78. | தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் கடமைகள் .. .. | 42 |
| 79. | தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் முடிபுகள் .. .. | 44 |
| 80. | தேர்தல் மாவட்டங்களை அறிவித்தல் .. .. .. | 44 |
| 81. | தேர்தல் மாவட்டங்களை மீளப்பகுத்தல் .. .. .. | 44 |


தேர்தல்கள் ஆணையாளர்


| | | |
|---|---|---|
| 82. | தேர்தல்கள் ஆணையாளர் .. .. .. .. | 45 |
| 83. | தேர்தல்கள் ஆணையாளரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன .. | 45 |


**அத்தியாயம் 12**

நிதிக் கட்டுப்பாடு


| | | |
|---|---|---|
| 84. | பகிரங்க நிதிகள் மீது தேசிய அரசுப் பேரவையின் கட்டுப்பாடு .. .. | 46 |
| 85. | திரட்டு நிதி .. .. .. .. .. | 46 |
| 86. | திரட்டு நிதியிலிருந்து பணத்தொகைகளை மீளப் பெறுதல் .. .. | 46 |
| 87. | எதிர்பாராச் செலவு நிதி .. .. .. .. | 47 |
| 88. | பகிரங்க வருமானங்களைப் பாதிக்கும் சட்டமூலங்கள் பற்றிய சிறப்பேற்பாடுகள் .. | 47 |
| 89. | கணக்காய்வாளர் தலைமையதிபதி .. .. .. .. | 47 |
| 90. | கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளும் பணிகளும் .. .. | 48 |


**அத்தியாயம் 13**

நிர்வாக ஆட்சி

சனாதிபதியும் அமைச்சரவையும்


| | | |
|---|---|---|
| 91. | நிர்வாகத்துறைபற்றிச் சனாதிபதிக்குள்ள பொறுப்பு .. .. | 49 |
| 92. | அமைச்சரவை .. .. .. .. | 49 |
| 93. | முதலமைச்சர் ஒருவரை நியமிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் .. .. | 49 |
| 94. | அமைச்சர்களும் அவர்களின் விடயங்கள், பணிகள் என்பனவும் .. .. | 49 |
| 95. | பிரதி அமைச்சர்கள் .. .. .. | 50 |
| 96. | அமைச்சர்களதும் பிரதி அமைச்சர்களதும் பதவிக்காலம் .. .. | 50 |
| 97. | தேசிய அரசுப்பேரவை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில் அமைச்சரவை .. | 50 |
| 98. | அமைச்சரவையைக் கலைத்தல் .. .. .. | 51 |
| 99. | முதலமைச்சர் எப்பொழுது விலகிவிட்டதாகக் கொளப்படுதல் வேண்டும் | 51 |
| 100. | முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டவராகக் கொள்ளப்படக்கூடிய வேறு சந்தர்ப்பங்கள் .. .. .. .. | 51 |
| 101. | பதில் அமைச்சரும் பதில் பிரதி அமைச்சரும் .. .. .. | 52 |

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 102. | அமைச்சர் அவையின் செயலாளர் .. .. .. .. | 52 |
| 103. | அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் .. .. .. .. | 52 |
| 104. | சத்தியத்தின் மாதிரி .. .. .. .. | 52 |
| | **அரச அலுவலர்கள்** | |
| 105. | அரச அலுவலர் என்பதன் வரைவிலக்கணம் .. .. .. | 53 |
| 106. | அமைச்சரவையின் பொறுப்பு .. .. .. .. | 53 |
| 107. | அரச அலுவலர்களின் பதவிக்காலம் .. .. .. | 54 |
| 108. | சனாதிபதியால் நியமிக்கப்படும் அரச அலுவலர்கள் .. .. .. | 54 |
| 109. | ஓய்வூதியங்களும் பணிக்கொடைகளும் .. .. .. | 55 |
| 110. | 111—120 ஆம் பிரிவுகளின் ஏற்புடைமை .. .. .. | 55 |
| | **அரச சேவைகள் ஆலோசனைச் சபை** | |
| 111. | அரச சேவைகள் ஆலோசனைச் சபை .. .. .. .. | 55 |
| | **அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபை** | |
| 112. | அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபை .. .. .. .. | 57 |
| | **அரச அலுவலர் நியமனம்** | |
| 113. | திணைக்களத்தலைவர்கள் நியமனங்களும் விதிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்களும் .. | 58 |
| 114. | ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் .. .. .. | 58 |
| 115. | நியமனஞ் செய்யும் தத்துவங்களைக் கையளித்தல் .. .. .. | 59 |
| 116. | அரச அலுவலர்களாற் செய்யப்படும் நியமனங்கள் .. .. .. | 59 |
| | **அரச அலுவலர்களை வேலை நீக்கம் செய்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும்** | |
| 117. | அரச அலுவலர்களுக்கெதிரான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு .. .. | 59 |
| 118. | ஒழுக்காற்றுத் தத்துவங்களை அமைச்சருக்குக் கையளித்தல் .. .. | 59 |
| 119. | அரச அலுவலர்க்கு ஒழுக்காற்றுத் தத்துவங்களைக் கையளித்தல் .. .. | 60 |
| | **அரச அலுவலர்களை இடம்மாற்றுதல்** | |
| 120. | அரச அலுவலர்களை இடம்மாற்றுதல் .. .. .. .. | 61 |


## அத்தியாயம் 14

### நீதி நிருவாகம்


| | **நீதிமன்றங்களை உருவாக்கல்** | |
|---|---|---|
| 121. | தேசிய அரசுப்பேரவை நீதிமன்றங்களை உருவாக்கல் .. .. .. | 62 |
| | **மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உயர் நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்** | |
| 122. | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உயர் நீதிமன்றத்தினதும் நீதிபதிகள் .. | 63 |
| 123. | பருவ நீதிமன்ற ஆணையாளர்கள் .. .. .. | 63 |
| | **நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம்** | |
| 124. | நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம், இடமாற்றம், வேலைநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன .. .. .. | 63 |
| 125. | நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை .. .. .. .. | 64 |
| 126. | நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம் .. | 66 |

நீதிபதிகளதும், நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் வேலை நீக்கமும் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடும்


பிரிவு — பக்கம்

127. நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச்சபை .. .. .. .. 66
128. தீயொழுக்கத்துக்காக பதவியிலிருந்து அகற்றப்படல் .. .. .. 67
129. நீதிபதிகளையும் நீதி நிருவகிக்கும் அரச அலுவலர்களையும் பதவியிலிருந்து அகற்றுதல் .. 67

நீதிபதிகளையும், நீதி நிருவாகஞ் செய்யும் ஏனைய அரச அலுவலர்களையும் இடமாற்றஞ் செய்தல்

130. நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் அரச அலுவலர்களதும் இடமாற்றங்கள் .. 68

நீதியை நிருவகிக்கும் ஆட்களின் சுதந்திரம்

131. நீதிபதிகளினதும் நீதி நிருவகிக்கும் அரச அலுவலர்களினதும் சுதந்திரம் .. 69

அத்தியாயம் 15

நீதிபதிகளும் பகிரங்க ஊழியரும் மற்றையோரும் சேவையில் தொடர்திருந்துவரல்

132. நீதிபதிகளும் பகிரங்க ஊழியர்களும் ஏனையோர்களும் சேவையில் தொடர்ந்திருந்துவரல் .. 70
133. அரச அலுவலர்களும் ஏனையோர்களும் விசுவாசச் சத்தியம் செய்யவேண்டுதல் .. 70

அத்தியாயம் 16

பொதுமக்கள் பாதுகாப்பு

134. பொதுமக்கள் பாதுகாப்பு .. .. .. .. 71

# இலங்கை அரசியலமைப்பு

## சுவத்தி

இலங்கை மக்களாகிய நாங்கள் இலங்கை மக்களிடமிருந்து அதன் முழு வலுவினையும் அதிகாரத்தினையும் பெறுவதூஉம், குடிமக்கள் எல்லோரதும் அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் என்பன உள்ளிட்ட சமதர்ம சனநாயகமொன்றின் குறிக்கோள்களை எய்துவதற்கு உறுதிபூண்ட சுதந்திரமும், இறைமையும் தன்னுதிக்கமும் கொண்டுள்ள குடியரசொன்றாக இலங்கையை அமைப்பதூஉம் இலங்கையின் அடிப்படைச் சட்டமாக அமைவதூஉம் ஆன அரசியலமைப்பொன்றை இந்நாட்டு மக்களாகிய எமக்குள்ள சுதந்திரத்தையும் சுய ஆதிக்கத்தையும் கொண்டு எமக்களித்துக் கொள்ளும் தீர்மானமுடையோமாதலால், நாமே தாபித்த அரசியல் நிருணயசபை மூலம் செயலாற்றி பௌத்த ஆண்டு ஈராயிரத்து ஐந்நூற்றுப் பதினைந்து வைகாசி மாதம் வளர் திங்கள் பத்தாந் நாளன்று அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு மே மாதம் இருபத்திரண்டாந் நாள் திங்கட்கிழமையாகிய இன்று இவ்வரசியலமைப்பை வகுத்தமைத்துச் சட்டமாக்கி எமக்களித்துக் கொள்கிறோம்.

# அத்தியாயம் 1

## மக்கள், அரசு, இறைமை

**1.** இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு குடியரசாகும். *இலங்கைக் குடியரசு.*

**2.** இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சி அரசொன்றாகும். *ஒற்றையாட்சி அரசு.*

**3.** இலங்கைக் குடியரசில் இறைமை மக்களிடத்துள்ளதாயும் பராதீனப்படுத்த முடியாததாயும் இருக்கும். *மக்களின் இறைமை.*

**4.** மக்களின் இறைமை, மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தேசிய அரசுப்பேரவை மூலம் பிரயோகிக்கப்படும். *தேசிய அரசுப் பேரவை.*

**5.** தேசிய அரசுப்பேரவை குடியரசின் அரச தத்துவத்தின் மீயுயர் கருவியாகும். தேசிய அரசுப்பேரவை— *அரசதத்துவத் தின் மீயுயர் கருவி.*

(அ) மக்களின் சட்டமாக்கற்றத்துவத்தைப் பிரயோகிக்கும் ;

(ஆ) இலங்கையின் பாதுகாப்பு உட்பட மக்களின் ஆட்சித்துறைத் தத்துவத்தை சனாதிபதி மூலமும் அமைச்சர் அவை மூலமும் பிரயோகிக்கும், அத்துடன்

(இ) தேசிய அரசுப்பேரவையினால் அதன் தத்துவங்கள், சிறப் புரிமைகள் சம்பந்தமானவற்றில் சட்டத்துக்கிணங்க நேரடியாகப் பிரயோகிக்கப்படக்கூடிய விடயங்களில் தவிர, மக்களின் நீதிமுறைத் தத்துவத்தைச் சட்டத்தி னால் தோற்றுவிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலமும் வேறு நிறுவனங்கள் மூலமும் பிரயோகிக்கும்.

## அத்தியாயம் 2

### பௌத்தமதம்

பௌத்தமதம்.

**6.** இலங்கைக் குடியரசு பௌத்தமதத்துக்கு முதன்மைத் தானம் வழங்குதல் வேண்டும் என்பதுடன் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லாச் சமயங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில் பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாதலும் வேண்டும்.

# அத்தியாயம் 3

## மொழி

### அரச கரும மொழி

7. இலங்கையின் அரசகருமமொழி 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும். அரசகருமமொழி சிங்களம்.

8. (1) தமிழ்மொழியின் உபயோகம் 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற் கிணங்கவிருத்தல் வேண்டும். தமிழ்மொழியின் உபயோகம்.

(2) 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுள்ளதாயிருந்துவந்த, தமிழ்மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்குவிதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்ருக எவ்வகையாகவேனும் பொருள் கொள்ளப்படலாகாது ; ஆனல் 12 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் கீழ் இப்போதுள்ள எழுத்திலான சட்டமாகத் தொடர்ந் திருந்துவரும் துணைநிலைச் சட்டவாக்கமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

### சட்டவாக்க மொழி

9. (1) சட்டங்கள் யாவும் சிங்களத்தில் சட்டமாக்கப்படல் வேண் டும் அல்லது இயற்றப்படல் வேண்டும். சட்டவாக்க மொழி.

(2) அவ்விதம் சட்டமாக்கப்படும் அல்லது இயற்றப்படும் ஒவ் வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பொன்றும் இருத்தல் வேண்டும்.

10. (1) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுடையனவாயிருந்த, துணைநிலைச் சட்டவாக்கம் உட்பட்ட எழுத்திலான எல்லாச் சட்டங்களும் நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் இயன்ற அளவு விரைவாகச் சிங்களத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள சட்டங்கள் சிங்களத்தில் வெளியிடப்பட்டதும் அவை மேலோங்கி நிற்றல்.

(2) அவ்விதம் வெளியிடப்படும் சட்டம் அத்தகைய வெளியீட்டுத் தேதியை உடனடுத்து நிகழும் தேசிய அரசுப் பேரவைக் கூட்டத்தில் தேசிய அரசுப் பேரவையின் முன்னர் வைக்கப்படல் வேண்டும்.

(3) தேசிய அரசுப்பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தா லொழிய இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் சிங்களத்தில் வெளியிடப்படும் சட்டம், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, அச்சட்டமாகக் கொள்ளப்படல் வேண்டும் என் பதோடு ஆங்கிலத்தில் உள்ள நேரொத்த சட்டத்தினை மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

## நீதிமன்றங்களின் மொழி

நீதிமன்றங்களின் மொழி.

11. (1) நீதியை நிருவகிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப் பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாயசபைகள் என்பனவற்றின தும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள், ஏனைய நிறுவனங்கள் என்பன வற்றினதும், 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகளினதும் மொழி இலங்கை எங்கணும் சிங்களமாதல் வேண்டும்; அதற் கிணங்க வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும் நீதிமுறைச் செயல்கள், சட்ட நிருவாகச் செயல்கள் பற்றிய பதிவேடுகளுமுட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிங்களத் திலிருத்தல் வேண்டும் :

எனினும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயா திக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நீதி மன்றங்கள், நியாயசபைகள், வேறு நிறுவனங்கள் என்பவற்றின் விடயத்திலும், 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகள் விடயத் திலும், தேசிய அரசுப் பேரவை அதனது சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வேறுவகையில் ஏற்பாடு செய்யலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானவை அவ்வுட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினது நியாயாதிக்கத்திறேைடு அல்லது பணியோடு நேரொத்த அல்லது பெருமளவில் ஒத்த நியாயாதிக்கத்தினை அல்லது பணியினை ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் கீழ் உடையதாயிருக்கும் ஏதேனும் நிறுவனத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் முசுலிம் திருமண, மணநீக்க சட்டத்தின் கீழ் காதிமார் முன்பு வரும் நடவடிக்கை களிலும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னருள்ள கட்சிக்காரர்கள், விண்ணப்பகாரர்கள் என்போரும் அத்தகைய கட்சிக்காரர்களை அல்லது விண்ணப்பகாரர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமை கொண்ட ஆட்களும்,

(அ) அவர்களது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணை கள், மனுக்கள் என்பனவற்றைத் தமிழில் சமர்ப்பிக்க லாம்; அத்துடன்,

(ஆ) அந்நடவடிக்கைகளில் தமிழில் பங்கு கொள்ளலாம்.

அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிங்கள மொழிபெயர்ப் பொன்று இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய நீதிமன்றத்தினுல் அல்லது நியாயசபையினுல் அல்லது வேறு நிறுவனத்தினுல் அதன் பதிவேடுகளின் பொருட்டுத் தயாரிக்கப்படச் செய்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிமன்றம் ஒன்றில் அல்லது நியாய சபை ஒன்றில் அல்லது வேறு நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் மொழியை அங்கு எடுபடும் நடவடிக்கைகளை அறிந்து அவற்றில் பங்குபற்றக்கூடிய அளவில் அறிந்திராத கட்சிக்காரர், விண்ணப் பகாரர், நீதிபதி, யூரிமார் அல்லது நியாயசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் இப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அந்நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னருள்ள நடவடிக்கைகளை விளங்கிக்கொண்டு அவற்றில் பங்குபற்றுவதனை அவர்க்கு இயலச் செய்வதற்காக அரசினுல் ஏற்பாடு செய்யப்படும் பேச்சு மொழிபெயர்ப்பையும் சிங்களத்தில் அல்லது தமிழிலான மொழிபெயர்ப்பையும் பெறும் உரித்துடையவராதல் வேண்டும்.

அத்தகைய ஆள் சட்டத்திற்கிணங்கபெறற்குரிமையுள்ள அப்பதி வேட்டின் அத்தகைய ஏதேனும் பாகத்தைச் சிங்களத்தில் அல்லது தமிழில் பெறும் உரிமையையும் உடையவராதல் வேண்டும்.

(5) கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் ஒருவரைப்பிரதிநிதித் துவம் வகிக்கச் சட்டப்படி உரிமைகொண்டுள்ள ஆள் ஒருவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட எதுவேனும் நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறுநிறுவனத்தில் எடுபடும் நடவடிக்கைகளில் சிங்களத்தில் அல்லது தமிழில் பங்குகொள்ளலாம் என்பதுடன் அந்நோக்கத் துக்கென அரசினுல் ஏற்பாடு செய்யப்படும் சிங்களத்தில் அல்லது தமிழிலான பேச்சு மொழிபெயர்ப்புக்கு உரிமையுடையவராதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த உட்பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற் பாடுகளுக்கமைய நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறுநிறுவனம் ஒன்றின் நீதிபதி அல்லது நீதி நிரு வகிக்கும் வேறு அரச அலுவலர் அல்லது ஆங்கு தோன்றும் வாதாடுநர் ஒருவர் சிங்களம் அல்லது தமிழ் அல்லாத மொழி யைப் பயன்படுத்துவதை அனுமதிக்கும் கட்டளைகள், பணிப்புகள், அறிவுறுத்துரைகள் என்பவற்றை அமைச்சர் அவையின் ஒருப் பாட்டோடு வழங்கலாம். ஒவ்வொரு நீதிபதியும் நீதிநிருவகிக்கும் வேறு அரச அலுவலரும் இவ்வுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகள், பணிப்புகள், அறிவுறுத்துரைகள் என்பவற்றைச் செயற் படுத்தக் கட்டுப்படுத்தப்பட்டவராதல் வேண்டும்.

## அத்தியாயம் 4

### பொதுவான ஏற்பாடுகள்

இப்போதுள்ள சட்டங்கள்.

**12. (1)** தேசிய அரசுப்பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுள்ளனவாயிருந்துவந்த, "அ" என்னும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன தவிரவுள்ள, எழுத்திலுள்ளனவும் எழுத்தில் இல்லாதனவும் ஆன எல்லாச் சட்டங்களும், ஏற்ற மாற்றங்களுடனும், அரசியலமைப்பில் வேறு வகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிரவும், தொடர்ந்து வலுவுள்ளனவாயிருந்து வரல் வேண்டும். அவ்விதம் தொடர்ந்து வலுவிலுள்ளனவாயிருந்து வரும் சட்டங்கள் இவ்வரசியலமைப்பில் "இப்போதுள்ள சட்டங்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றன.

அவ்விதம் வலுவுள்ளனவாகத் தொடர்ந்து இருந்துவரும் துணைநிலைச்சட்டவாக்கங்கள் உட்படவுள்ள எழுத்திலான எல்லாச் சட்டங்களும், இவ்வரசியலமைப்பில் "இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றன.

**(2)** அரசியலமைப்பில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத்தவிர, இப்போதுள்ள சட்டங்கள் இவ்வரசியலமைப்பின் ஏற்பாடுகளல்ல என்பதுடன் அவை அவ்வித ஏற்பாடுகளாம் என எம்முறையாகவாயினும் கொள்ளப்படலும் ஆகா.

**(3)** இப்போதுள்ள எழுத்திலான எதுவேனும் சட்டத்தின் அல்லது அரசியலமைப்பின் எதுவேனும் ஏற்பாடு தேசிய அரசுப் பேரவை வேறு வகையில் ஏற்பாடு செய்யும் வரை அல்லது ஏற்பாடு செய்தாலொழியத் தொடர்ந்து வலுவுடையதாகவிருந்து வரல்வேண்டும் என அரசியலமைப்பு ஏற்பாடு செய்யுமிடத்து, அவ்விதம் ஏற்பாடு செய்யும் எதுவேனும் தேசிய அரசுப்பேரவைச் சட்டம் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படலாம்.

**(4)** ஏதேனும் இப்போதுள்ள எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு எதுவேனும் தேசிய அரசுப்பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்யும் வரை அல்லது செய்தாலொழிய வலுவுடையதாகத் தொடர்ந்திருந்து வரல்வேண்டும் என அரசியலமைப்பு ஏற்பாடு செய்கின்றவிடத்து, குறிப்பிட்ட இப்போதுள்ள எழுத்திலான சட்டம் துணைநிலைச்சட்ட வாக்கத்தையும் உள்ளடக்கியதாயிருப்பின், அத்தகைய இப்போதுள்ள எழுத்திலான சட்டம் தேசிய அரசுப்பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்யும்வரையும் செய்தாலொழியவும் தொடர்ந்து வலுவுடையதாயிருந்துவரல் வேண்டும் என்ற ஏற்பாடு, அத்தகைய துணைநிலைச் சட்டவாக்கத்தை ஆக்கவும் ஆக்கியபின்னர் அதனைத் திருத்தவும், வேறுபடுத்தவும், அழிக்கவும், நீக்கவும் உள்ள தத்துவம் எவ் ஆளுக்கு அல்லது குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அவ் ஆளின் அல்லது குழுவின் அவ்விதம் வழங்கப்பட்ட

தத்துவத்தை தேசிய அரசுப்பேரவை வேறுவிதமாக ஏற்பாடு செய்யும் வரை அல்லது செய்தாலொழியப் பிரயோகிப்பதற்கு அவருக்கு அல்லது அதற்குள்ள தத்துவத்தை எவ்வகையிலா யினும் ஆற்றல் குன்றச் செய்வதாகக் கொள்ளப்படலாகாது.

குடியரசின் தத்துவங்களும் சிறப்புரிமைகளும், கடமைகளும், கடப்பாடுகளும்.

**13.** தேசிய அரசுப்பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தா லொழிய, இலங்கையின் அரசியும் அவரது ஏனைய இராச்சியங்கள், ஆள்புலங்கள் என்பவற்றது அரசியும், பொது நலவரசுத் தலை வியுமான இரண்டாம் எலிசபெத்து உடையவராயிருந்துவந்த, பிரயோகித்துவந்த அல்லது பிரயோகிக்கக்கூடியனவாயிருந்த எவ் வகையானவுமான தத்துவங்கள், சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமை கள், உரிமைகள் என்பன யாவற்றையும் இலங்கைக் குடியரசு உடையதாயிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும்; அத்துடன் அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு நேர்முன்னர் இலங் கையின் அரசியும் அவரது ஏனைய இராச்சியங்கள், ஆள்புலங்கள் என்பவற்றது அரசியும், பொது நலவரசுத் தலைவியுமான இரண்டாம் எலிசபெத்து அவர்களுக்கு உள்ளனவாயிருந்த அத் தகைய எல்லாக் கடப்பாடுகள், கடமைகள் என்பனவற்றை, அவை எவ்வகையில் எழுந்தனவாயினும் சரி, அது உள்ளதாதலும் வேண்டும்.

குடியரசின் உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் என்பன.

**14.** அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் இருந்து வந்தனவும் இலங்கை அரசாங்கத்தினவுமான எல்லா உரிமைகளும், எல்லாக் கடமைகள் அல்லது கடப்பாடுகளும், அவை எவ்வகையில் எழுந்தனவாயினும் சரி, அரசியலமைப்பின் கீழான இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் உரிமைகளும், கடமைகள், கடப்பாடுகள் என்பனவும் ஆதல் வேண்டும்.

சட்டங்களின் சென்றகாலச் செயற்பாடு, முன்னைய செயல்கள், தவறுகள், முடிவுறுதிருக்கும் வழக்குகள் முதலியன.

**15.** (1) அரசியலமைப்பு வேறு வகையில் ஏற்பாடு செய்தாலொ ழிய, அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்னர் வலுவுள்ளதா யிருந்த ஏதேனும் சட்டத்தின் சென்ற காலச் செயற்பாடு அல்லது அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் வலுவுள்ளதாக விருந்த எதுவேனும் சட்டத்தின் கீழ் முறைப்படி செய்யப்பட்ட அல் லது செய்யவிடப்பட்ட எதுவும் அல்லது புரியப்பட்ட தவறு எதுவும் அல்லது பெறப்பட்ட அல்லது அடையப்பட்ட உரிமை, விடுதலை, கடப்பாடு அல்லது தண்டம் எதுவும் அரசியலமைப்பு வலுவுள்ளதாக வருவதன் காரணமாக எவ்வகையினும் பாதிக்கப்படலாகாது அல்லது பாதிக்கப்படுவதாகக் கொள்ளப்படலாகாது.

(2) இப்போதுள்ள எதுவேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் உட்பட, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் நடைபெற்றுக்கொண்டிருந்த அல்லது முடிவுறுதிருந்த எல்லா வழக்குகள், குற்ற வழக்குகள், நடவடிக்கைகள், காரியங்கள், அல்லது விடயங்கள் யாவும் அரசியல மைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் ஏற்ற மாற்றங்களுடனும் தொடர்ந்திருந்து வருவனவாகக் கொள்ளப்படல்வேண்டும் என்ப துடன் அரசியலமைப்புத் தொடங்கியதன் பின்னர் கொண்டு நடாத்தப்பட்டு முடிவாக்கப்படலாம்.

# அத்தியாயம் 5

## அரச கொள்கைக் கோட்பாடுகள்

அரசகொள்கைக் கோட்பாடுகள்.

16. (1) இலங்கையை ஆளுவதிலும் சட்டங்களையாக்குவதிலும் பின்வரும் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள அரச கொள்கைக் கோட்பாடுகள் வழிகாட்டுதல் வேண்டும்.

(2) சமதரும சனநாயகமொன்றை இலங்கையில் தாபிப்பதற்கான முற்போக்குள்ள முன்னேற்றத்தினை முற்கொண்டு செல்ல குடியரசு உறுதி பூண்டுள்ளது ; அதன் குறிக்கோள்களுள் பின் வருவனவும் அடங்கும் :—

(அ) அந்த அந்த மக்கள் தொகுதிகளின் உரிமைகள் உட்பட பிரசைகளின் எல்லா உரிமைகளையும், சுதந்திரங்களையும் பூரணமாக அனுபவித்தல் ;

(ஆ) வேலைசெய்யும் வயதையடைந்துள்ள எல்லாப் பிரசைகளுக்கும் பூரணமான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் ;

(இ) முழு நாட்டினையும் துரிதமாக அபிவிருத்திசெய்தல் ;

(ஈ) பிரசைகளிடையே சமூக விளைவை, நியாயமான முறையில் பங்கீடு செய்தல் ;

(உ) மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்துக்கு முடிவுகாணும் வகையில் உற்பத்தி, பங்கீடு, மாற்று என்னும் மார்க்கங்களில் கூட்டுறவுச் சொத்து, அரசுக்குரிய சொத்துப் போன்ற கூட்டு முறைச் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் ;

(ஊ) மக்களது ஒழுக்கப்பண்பு, கலாசார தரங்கள் என்பனவற்றை உயர்த்தல் ; அத்துடன்

(எ) நல்லதொரு வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்காகத் தனியாகவும், கூட்டுமுறையிலும் மானிடத் திறமைகள் பூரணமாக மலர்ச்சியடையும் வண்ணம் சமுதாயத்தை ஒழுங்கமைத்தல்.

(3) இலங்கையின் தன்னுதிக்கம், இறைமை, ஐக்கியம், பிரதேச முழுமை என்பவற்றை அரசு பாதுகாத்தல் வேண்டும்.

(4) இனச் சார்பானவும், சமயச் சார்பானவும் ஏனையவுமான தொகுதியினர் உட்பட, இலங்கை மக்களின் எல்லாப் பிரிவினரிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதன் மூலம், தேசிய ஐக்கியத்தை வலுவூன்றச் செய்வதற்கு அரசு முயலுதல் வேண்டும்.

(5) பொருளாதார, சமூக ரீதியான சிறப்புரிமைகளை நீக்கி ஒப்பின்மையையும் சுரண்டலையும் அகற்றி, எல்லாப் பிரசைகளுக்கும் சம சந்தர்ப்ப வாய்ப்புகளை அரசு உறுதி செய்ய முயலுதல் வேண்டும்.

(6) தேசிய வாழ்வின் எல்லாத் தரங்களிலும், குடியியல் நிருவாகம், நீதி நிருவாகம் உட்பட அரசாட்சியிலும் மக்கள் பங்குபெறச் சாத்தியமான எல்லாச் சந்தர்ப்பங்களையும் அளிப்பதன் மூலம் மக்களது சனநாயக உரிமைகளையும், அரசாங்கத்தின் சனநாயக அமைப்பையும், அரசு பலப்படுத்தி விரிவாக்குதல் வேண்டும்.

(7) மக்களின் கலாசாரங்களையும், மொழிகளையும், அபிவிருத்தி செய்ய அரசு உதவிபுரிதல் வேண்டும்.

(8) சமூகப் பாதுகாப்பு, இன்னலம் என்பவற்றை உறுதிப் படுத்த அரசு முயலுதல் வேண்டும்.

(9) தமது சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, ஒரு வாழ்க்கை முறையைப் பின்பற்றி வருதல் எல்லாச் சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இயல்வதாயிருக்கும் வகையில், தேவையான பொருளாதார, சமுதாய சூழலை அரசு அமைப்பதற்கு முயலுதல் வேண்டும்.

(10) சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு என்பனவற்றை அரசு விருத்திசெய்தல் வேண்டும்.

**அரசகொள்கைக் கோட்பாடுகள் நீதிமன்ற ஆய்வுக்குட்படாமை.**

**17.** பதினாறும் பிரிவின் ஏற்பாடுகள் சட்ட உரிமைகளை வழங்குவனவல்ல; அத்துடன் அவை சட்ட நீதிமன்றம் எதிலும் வலியுறுத்தப்படக்கூடியனவுமல்ல; அன்றியும் அத்தகைய ஏற்பாடுகள் தொடர்பிலான ஒவ்வாமை பற்றிய கேள்வி எதுவும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னராயினும் வேறு எந்த நீதிமன்றத்தின் முன்னராயினும் எழுப்பப்படலுமாகாது.

## அத்தியாயம் 6

### அடிப்படையுரிமைகளும் சுதந்திரங்களும்

அடிப்படையுரிமைகளும் சுதந்திரங்களும்.

**18.** (1) இலங்கைக் குடியரசிலே—

(அ) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லாரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கும் உரிமையுடையவர்கள்;

(ஆ) சட்டத்தின் பிரகாரமாக அன்றி, ஆள் எவரும் அவரது உயிரையோ, சுதந்திரத்தையோ, சொந்தப் பாதுகாப்பினையோ இழத்தலாகாது;

(இ) சட்டத்தின் பிரகாரமாக அன்றி, பிரசை எவரும் கைது செய்யப்படவோ, கட்டுக்காவலில் வைக்கப்படவோ, சிறையில் இடப்படவோ, தடுத்து வைக்கப்படவோ கூடாது;

(ஈ) சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன சார்பான உரிமை ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டும். தான் விரும்பும் சமயம் அல்லது நம்பிக்கையொன்றை உடையவராயிருத்தல், அல்லது மேற்கொள்ளுதல் சார்பான சுதந்திரமும், தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும், அந்தரங்கமாகவேனும், தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை, வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், செயற்பாட்டிலும், போதிப்பிலும் வெளிக்காட்டுதல் சார்பான சுதந்திரமும் இந்த உரிமையில் அடங்கும்;

(உ) ஒவ்வொரு பிரசைக்கும், தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்த கலாசாரத்தை அனுபவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் உரிமையுண்டு;

(ஊ) அமைதி வாய்ந்த முறையிலே ஒன்று கூடுவதற்கும், ஒருங்கு சேர்வதற்குமான சுதந்திரம் சார்பான உரிமை எல்லாப் பிரசைகளுக்குமுண்டு;

(எ) பேச்சுச் சுதந்திரம், வெளியிடுதல் உட்படக் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் என்பன சார்பான உரிமை ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டும்;

(ஏ) மத்திய அரசாங்க சேவை, உள்ளூர் ஆட்சிச் சேவை, பகிரங்கக் கூட்டுத்தாபனச் சேவை என்பனவற்றிலும் இவை போன்ற பிற சேவைகளிலும் நியமனம் பெறுவதற்கு ஏனைய விதத்தில் தகைமை வாய்ந்த எந்தப்

பிரசைக்கும் இனம், சமயம், சாதி அல்லது பால் காரணமாக அத்தகைய நியமனம் தொடர்பில் வேறுபாடு காண்பிக்கப்படுதலாகாது :

எனினும், அத்தகைய சேவைகளின் நன்மை கருதிக் குறிப்பிடப்பட்ட பதவிகள் அல்லது பதவி வகைகள் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கென ஒதுக்கப்படலாம் ;

(ஐ) இலங்கை முழுவதும் தடையின்றிப் பிரயாணஞ் செய்வதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம் ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகித்தலும் செயற்படுத்தலும் ஆகியவை தேசிய ஐக்கியமும் ஒருமையும், தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொது மக்கள் பாதுகாப்பு, பொது மக்கள் ஒழுங்கு, பொது மக்கள் சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றின் பாதுகாப்பு அல்லது மற்றவர்களின் உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றின் பாதுகாப்பு அல்லது 16 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள அரச கொள்கைக் கோட்பாடுகளுக்குப் பயன்கொடுத்தல் என்பனவற்றின் அக்கறை கருதிச் சட்டம் விதிக்கும் அத்தகைய மட்டுப்பாடுகளுக்கமைந்திருத்தல் வேண்டும்.

(3) இப்போதுள்ள சட்டம் யாவும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளோடு ஒவ்வாமை எதுவேனுமிருப்பினும், நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

# அத்தியாயம் 7

## குடியரசின் சனாதிபதி

அரசின் தலைவர்.

**19.** இலங்கைக் குடியரசின் சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராவர்.

சனாதிபதி ஆட்சித் துறைத்தலைவரும் படைத்தலைவருமாதல்.

**20.** சனாதிபதி ஆட்சித்துறைத் தலைவரும், ஆயுதந்தாங்கிய படைகளின் படைத்தலைவருமாவர்.

சனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும்.

**21.** சனாதிபதி பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் உடையர் :—

(அ) அவர் போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனஞ் செய்வார் ;

(ஆ) அவர் தேசிய சபையைக் கூட்டுவார், அமர்வு நிறுத்துவார் அத்துடன் கலைப்பார் ;

(இ) அவர் முதலமைச்சரையும் அமைச்சரவைக்கான ஏனைய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிப்பார் ;

(ஈ) அவர் 122 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நீதிபதிகளையும் அரசியலமைப்பின் கீழ் அல்லது ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்படக்கூடிய ஏனைய அரச அலுவலர்கள், ஆணையாளர்கள் என்போரையும் நியமிப்பார் ;

(உ) அவர் அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசப் பிரதிநிதிகள், ஏனைய இராசதந்திர முகவர்களை ஏற்று அங்கீகரிப்பார், நியமித்துப் பொறுப்பளிப்பார் ;

(ஊ) அவர் தேசிய அரசுப் பேரவையின் சடங்குமுறையான இருக்கையில் தலைமைதாங்குவார் ;

(எ) அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் விதிக்கப்பட்டனவான இலங்கையின் சனாதிபதிப் பதவிக்குரிய அத்தகைய வேறு பணிகளையும், அரசியலமைப்புக்கும் வேறேதேனும் சட்டத்துக்கும் அமையப் பல்நாட்டு வழக்க முறைப்படி அரசின் தலைவரால் புரியப்படும் அத்தகைய பணிகளையும் அவர் புரிவார் ; அத்துடன்,

(ஏ) இலங்கைக் குடியரசின் பகிரங்க இலச்சினையைக் காப்பில் வைத்திருந்து, இலங்கைக் குடியரசிற்கு உரித்தாக்கப்பட்டனவும் சனாதிபதியால் சட்டப்படி வழங்கப்படக் கூடியனவுமான அத்தகைய நிலங்களையும் அசைவற்ற

ஆதனங்களேயும் பகிரங்க இலச்சினேயின் கீழ் நன்கொடை வழங்கியும் கையளித்தும் நிறைவேற்றுவார், அத்துடன் அவ்விலச்சினேபொறிக்கப்படுவதற்கு ஏற்ற எல்லா ஆவணங்களிலும் அதனேப் பொறிப்பார்.

22. (1) இலங்கைக் குடியரசினுள் தவருளர் விளங்கப்படக் கூடிய தவறு எதுவேனும் புரியப்பட்டுள்ளவிடத்து, பிரதான தவருளருக்கு அல்லது ஒருவர்க்கு மேற்பட்டவராயின் அத்தகைய பிரதான தவருளர்களுள் எவர் ஒருவர்க்கேனும் குற்றத்தீர்ப்பளிக்க உதவக்கூடிய அத்தகைய தகவலினேத் தந்துதவுபவரும் அத்தவறினேக் கூடிப்புரிந்தவருமான எவரேனும் தவருளருக்குச் சனுதிபதி மன்னிப்பு அளிக்கலாம். மன்னிப்பு வழங்கல்.

(2) இலங்கைக் குடியரசினுள் அமைந்துள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் தவறு எதற்கும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் தவருளரின் விடயத்தில் சனுதிபதி—

(அ) நிபந்தனேயற்ற மன்னிப்பை அல்லது சட்டமுறையான நிபந்தனேகளோடு கூடிய மன்னிப்பை வழங்கலாம்; அல்லது

(ஆ) அத்தகைய தவருளருக்கு விதிக்கப்பட்டுள்ள ஏதேனும் தண்டனேத் தீர்ப்பு நிறைவேற்றப்படுவதனேச் சனுதிபதி தகுந்தது என எண்ணும் அத்தகைய காலத்துக்கு அல்லது எல்லேயின்றிக் காலந்தாழ்த்தி வைக்கலாம்; அல்லது

(இ) அத்தகைய தவருளருக்கு விதிக்கப்பட்ட தண்டனேக்குப் பதிலாகக் கடுமை குறைந்த வேறு ஒரு தண்டனேயைப் பதிலிடலாம்; அல்லது

(ஈ) விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனேயை அல்லது அத்தகைய தவறின் வகையால் குடியரசுக்கு வேறுவகையில் சேர்மதியாகவுள்ள ஏதேனும் குற்றவிறுப்பை அல்லது சொத்திழப்பை முற்றுக அல்லது பகுதியளவில் தளர்த்தலாம்:

எவ்வாறுயினும், தவருளர் எவரேனும் நீதிமன்றம் எதனதும் தண்டனேத் தீர்ப்பினுல் மரணதண்டனேக்காளாகியிருக்குமிடத்து சனுதிபதி, அவ்வழக்கை விளங்கிய நீதிபதியால் தமக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படச் செய்தல் வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட தத்துவங்களேப் பிரயோகிப்பது சம்பந்தமாகச் சனுதிபதிக்கு ஆலோசனேயளிக்கவேண்டியது எவ் அமைச்சரின் பணியோ அவ்வமைச்சருக்கு அவ்வறிக்கையைச் சட்டத்துறைத் தலேமையதிபதியின் ஆலோசனேயோடு சேர்த்து அனுப்புதல் வேண்டும் என்ற பணிப்புரையுடன் அத்தகைய அறிக்கையைச் சட்டத்துறைத்தலேமையதிபதியின் ஆலோசனேக்கென அவர் அனுப்புதல் வேண்டும்.

சனாதிபதி வழக்குத் தொடரப்படுவதிலிருந்து விடுபாடு உரியவராதல்.

**23.** (1) ஆள் ஒருவர் இலங்கைக் குடியரசின் சனாதிபதியாகப் பதவி வகிக்கின்றபோது, அவரது அலுவலகமுறையில் அல்லது தனிப்பட்ட தன்மையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எக்கருமத்தையிட்டும் அவருக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படுதலோ தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது.

(2) ஆள் எவருக்குமெதிராக, எவ்விவரணத்தைக் கொண்டதுமான வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான கால எல்லையை மட்டுப்படுத்தி ஏதேனும் சட்டத்தினால் ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் காலத்தைக் கணிப்பதில் ஆள் ஒருவர் இலங்கைக் குடியரசின் சனாதிபதியாகப்பதவிவகித்த காலம் கணக்கில் எடுக்கப்படுதலாகாது.

சனாதிபதியின் சம்பளம்.

**24.** தேசிய அரசுப் பேரவையினால் பிரேரணைத் தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளத்தையும் படிகளையும் அத்துடன் இளைப்பாறலின் மேல் அத்தகைய ஓய்வூதியத்தையும் அல்லது பணிக்கொடையையும் சனாதிபதி பெறுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சம்பளம், படிகள், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை திரட்டு நிதியில் பொறுப்பிக்கப்படலும் வேண்டும். சனாதிபதியின் சம்பளம், படிகள், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை அவருக்குப் பாதகமாகும் விதத்தில் மாற்றப்படுதல் ஆகாது.

சனாதிபதியின் நியமனமும் அவர் பதவி ஏற்றலும்.

**25.** தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினரைத் தெரியும் நோக்கத்துக்கான தேர்தல் ஒன்றில் தேருநரொருவராதற்குத் தகுதியுடைய பிரசை எவரும் இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவிக்கு முதலமைச்சரால் பெயர் குறிப்பிடப்படலாம். அவ்விதம் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் மிகவுயர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற முதன்மை நீதிபதி முன்னர் அல்லது அந்நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் முன்னர் பின்வரும் சத்தியம் செய்து கொள்வதன்மேல் இலங்கைக் குடியரசின் சனாதிபதியாகப் பதவி மேற்கொள்வார் :—

"........................ ஆகிய யான் இலங்கைக் குடியரசுக்கு நம்பிக்கையுள்ளவராகவும் உண்மையான விசுவாசம் கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கைக்குடியரசின் அரசியலமைப்பைப் போற்றி ஒழுகுவேன் எனவும், இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவியின் கடமைகளையும் பணிகளையும் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்க நம்பிக்கைக்குரிய வகையில் புரிவேன் எனவும், பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்." :

எவ்வாறாயினும், இலங்கைக் குடியரசின் முதலாவது சனாதிபதி அப்போது சமுகமாயிருக்கும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் முன்னிலையில் அச்சத்தியத்தைச் செய்யதல் வேண்டும்.

சனாதிபதியின் பதவிக் காலம்.

**26.** (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி நாலாண்டு காலத்துக்குச் சனாதிபதிப் பதவி வகிப்பார் :

ஆயினும், இக்கால எல்லை கழியினும்கூட, அடுத்துவரும் சனாதிபதி அவரது பதவியை ஏற்கும்வரை சனாதிபதி தொடர்ந்து பதவியிலிருந்து வருதல் வேண்டும்.

(2) இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவி —

(அ) சனாதிபதி இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) முதலமைச்சருக்கு முகவரியிடப்பட்ட எழுத்துமூலம் சனாதிபதி தமது பதவிலிருந்து விலகுமிடத்து ; அல்லது

(இ) உளப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாகச் சனாதிபதி அவரது பதவியின் பணிகளைப் புரிய இயலாதவராகிவிட்டார் என முதலமைச்சர் தீர்மானிக்குமிடத்து ; அல்லது

(ஈ) முதலமைச்சராற் பிரேரிக்கப்படுவதான, சனாதிபதிக் கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைத் தீர்மானம் ஒன்றைத் தேசிய அரசுப் பேரவை நிறைவேற்றுமிடத்து ; அல்லது

(உ) தேசிய அரசுப் போரவை உறுப்பினரின் மொத்தத் தொகையில் ஆகக்குறைந்தது அரைப்பங்கினர்க்குக் குறையாதோரால் கையொப்பமிடப்பட்டதும் எவரேனும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டு சபாநாயகருக்கு முகவரியிடப்பட்டதுமான எழுத்திலான அறிவித்தல் ஒன்றின்மூலம் கொண்டுவரப்படும் சனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைத் தீர்மானம் ஒன்றை (சமூகமாயிராதோருட்பட) தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் மொத்தத் தொகையில் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குக் கொண்டேனும் தேசிய அரசுப்பேரவை நிறைவேற்றுமிடத்து,

வெற்றானதாகும்.

சனாதிபதி ஆலோசனையின் மீது செயலாற்ற வேண்டுதல்.

**27.** (1) அரசியலமைப்பினால் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, எப்பொழுதும் சனாதிபதியானவர் முதலமைச்சரின் ஆலோசனை மீது அல்லது வேறு அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் குறிப்பான பணியின்மீது சனாதிபதிக்கு ஆலோசனையளிக்குமாறு முதலமைச்சர் அதிகாரமளித்துள்ள அத்தகைய வேறு அமைச்சரின் ஆலோசனையின் மீது செயலாற்றுதல் வேண்டும்.

(2) சனாதிபதியினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எதுவாயினும் பற்றி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இணங்கி ஒழுகப்படவில்லை என்ற காரணத்தின்மீது, நீதியை நிருவகிக்கும் எதுவேனும் நிறுவனமேனும் அவ்வகையே வேறு நிறுவனம், ஆள் அல்லது அதிகாரியேனும், விசாரணை செய்யவோ கருத்துரை, தீர்ப்பு வெளியிடவோ எவ்விதமாகவேனும் கேள்வி எழுப்பவோ தத்துவம் அல்லது நியாயாதிக்கம் உடையதாதலாகாது.

பதில் சனுதிபதி.

28. (1) சனுதிபதி உடனலமின்மையினுல் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினுல் தமது பதவியின் கடமைகளைப் புரிய முடியாதவராயிருக்கும்போது அல்லது இலங்கையில் இல்லாதிருக்கும்பொழுது அல்லது இலங்கைக் குடியரசின் சனுதிபதிப் பதவி வேறுவகையில் வெற்றிடமாகவிருக்கும் ஏதேனும் காலத்தின் பொழுது முதலமைச்சர் பெயர் குறித்து நியமிக்கக்கூடிய வேறு எவரேனும் ஆள் அல்லது அத்தகைய நியமனம் இல்லாவிடில், மிகவுயர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதியின் பணிகளைச் சட்டமுறையாக அக்காலத்துப் புரியும் ஆள் இலங்கைக் குடியரசின் சனுதிபதிப் பதவியில் செயலாற்றுதல் வேண்டும். அத்தகைய ஆள் பதவியேற்கும் முன்னர் 25 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள படிவத்திலும் அம்முறையாகவும் உறுதியுரை ஒன்றை அல்லது சத்தியத்தைச் செய்து அதற்கு ஒப்பமிடலும் வேண்டும்.

(2) சனுதிபதி அல்லது சொல்லப்பட்ட அப்பதவியில் செயலாற்றுவதற்கு முதன்மையான உரிமையுள்ள வேறு ஆள் ஒருவர் சொல்லப்பட்ட அப்பதவியை ஏற்றுள்ளார் அல்லது திரும்பவும் வகிக்கத் தொடங்கியுள்ளார் அல்லது ஏற்கப்போகிருர் அல்லது வகிக்கப்போகிருர் என அறிவித்தால், குடியரசின் சனுதிபதிப் பதவியிற் செயலாற்றும் எவரேனும் ஆள், அப்பதவியில் தொடர்ந்து செயலாற்றுதலாகாது.

(3) சனுதிபதி தொடர்பாயுள்ள அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அவை பிரயோகிக்கப்படக்கூடிய அவ்வளவுக்கு, பதில் சனுதிபதி ஒருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

# அத்தியாயம் 8

## தேசிய அரசுப்பேரவை

### பொதுவான ஏற்பாடுகள்

தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் தொகையும் பதவிப்பெயரும்.

**29.** 77 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு ஒன்று அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கும் அத்தகைய எண்ணினரான தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் தேசிய அரசுப் பேரவை கொண்டதாயிருத்தல் வேண்டும். தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் எனப் பதவிப்பெயர் பெறுதல் வேண்டும்.

வெற்றிடமிருப்பினும் தேசிய அரசுப்பேரவை முறைப்படி அமைக்கப் பட்டதாதல்.

**30.** தேசிய அரசுப் பேரவை அதன் உறுப்பினர்க்கிடையில் எதுவேனும் வெற்றிடமிருப்பினும் முறைப்படி அமைக்கப்பட்டதாகக் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அது செயலாற்றத் தத்துவம் கொண்டதாதலும் வேண்டும். அத்துடன், தேசிய அரசுப் பேரவையில் அமர்ந்திருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது வேறு வகையில் தேசிய அரசுப் பேரவையின் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு உரிமையில்லாத எவரேனும் ஆள் அவ்விதம் செய்துள்ளார் எனப் பின்னர் காணப்படினும், தேசிய அரசுப் பேரவையின் நடவடிக்கைகள் எவையும் செல்லுபடியானவையாதல் வேண்டும்.

விசுவாசச் சத்தியம்.

**31.** அரசியலமைப்புக்குத் தாம் விசுவாசம் பூண்டொழுகுவார் எனப் பின்வரும் சத்தியத்தைத் தேசிய அரசுப் பேரவை முன்னர் செய்து கொண்டாலன்றி, தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் எவரும் தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகரைத் தெரிவு செய்யும் நோக்கத்துக்காகவே தவிர, தேசிய அரசுப் பேரவையில் அமர்ந்திருக்கவோ வாக்களிக்கவோ கூடாது :—

"....................ஆகிய யான் இலங்கைக் குடியரசுக்கு நம்பிக்கையுள்ளவராகவும் உண்மையான விசுவாசம் கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பைப் போற்றி யொழுகுவேன் எனவும் பயபக்தியாக வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்.".

சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் என்போர்.

**32.** (1) பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் நடைபெறும் தேசிய அரசுப் பேரவையின் முதற் கூட்டத்தில் சபாநாயகர் ('பிரதிச் சபாநாயகர்' என இதனகத்து இதன் மேல் குறிப்பிடப்படும்) பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் ஆனவர், குழுக்களின் பிரதிச் தவிசாளர் ஆகியோராகவிருத்தற்கென மூன்று உறுப்பினர்களைத் தேசிய அரசுப் பேரவை தெரிவு செய்தல் வேண்டும்.

(2) தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராக அல்லது பிரதிச் சபாநாயகராக அல்லது குழுக்களின் பிரதித்தவிசாளராகப் பதவி தாங்கும் உறுப்பினர் ஒருவர் அவர் முன்னரே பதவியிலிருந்து விலகினால் ஒழிய அல்லது உறுப்பினராதல் ஒழிந்தாலொழிய தேசிய அரசுப் பேரவை கலைக்கப்படும் பொழுது பதவியை வெற்றுக்குதல் வேண்டும்.

(3) தேசிய அரசுப் பேரவை கலைக்கப்படுவதன் காரணமாக அல்லாது வேறு வகையில், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் பதவி எதுவேனும் வறிதாகுமிடத்து, அவ்வெற்றிடம் ஏற்பட்டதற்கு அடுத்து நிகழும் முதற் கூட்டத்தில் தேசிய அரசுப் பேரவை சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளராகவிருப்பதற்கென, விடயத்துக்கேற்ப, வேறு உறுப்பினரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(4) தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்ட பின்னர், 40 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் மீள அழைக்கப்பட்டால், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட உறுப்பினருள் ஒவ்வொருவரும், அதன் கண் உள்ளது எது எவ்விதமிருப்பினும், அந்த தேசிய அரசுப்பேரவை தொடர்ந்து அமர்வில் இருக்கும்பொழுது அவரவர் பதவியை மீளப்பெற்றுத் தாங்கி வருதல் வேண்டும்.

தேசிய அரசுப் பேரவை இருக்கைகளில் தலைமை வகிப்போர்.

**33.** சபாநாயகர் அல்லது அவர் வராதவிடத்து பிரதிச் சபாநாயகர் அல்லது அவர்கள் (இருவரும்) வராதவிடத்து குழுக்களின் பிரதித் தவிசாளர் தேசிய அரசுப் பேரவையின் இருக்கைகளுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். அவர்களுள் எவரேனும் வராதிருக்குமிடத்து, அவ்விருக்கைக்கெனத் தேசிய அரசுப் பேரவையினால் தெரியப்பட்ட உறுப்பினர் ஒருவர் தேசிய அரசுப் பேரவையின் இருக்கைக்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

கூட்ட நடப்பெண்.

**34.** தேசிய அரசுப் பேரவைக் கூட்டமொன்று நடந்து கொண்டிருக்கும் பொழுது எந்நேரத்திலாயினும் இருபது உறுப்பினர்களுக்குக் குறைந்தவர்களே சமூகமாயிருக்கின்றனர் என்பது தலைமை வகிக்கும் ஆளின் கவனத்துக்கெடுத்துக்காட்டப்பட்டால் தலைமை வகிக்கும் அந்த ஆள், தேசிய அரசுப் பேரவையின் நிலையான கட்டளை எதற்கும் அமைய, வாக்கெடுப்புக்கு விடாமல் அவ்விருக்கையை ஒத்திப் போடுதல் வேண்டும்.

தேசிய அரசுப் பேரவைச் செயலாளர்.

**35.** (1) தேசிய அரசுப் பேரவைச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தேசிய அரசுப்பேரவைச் செயலாளரின் பணியாட்டொகுதி உறுப்பினர் சபாநாயகரின் அங்கீகாரத்தோடு தேசிய அரசுப் பேரவைச் செயலாளரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(3) தேசிய அரசுப் பேரவையின் வேண்டுகோளின் பேரில் சனாதிபதி அகற்றினாலேயே அல்லாது தேசிய அரசுப் பேரவைச் செயலாளர் அவரது பதவியிலிருந்து அகற்றப்படலாகார்.

(4) தேசிய அரசுப்பேரவைச் செயலாளர் ஓய்வுபெறும் வயது தேசிய அரசுப் பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய அறுபது ஆண்டு ஆதல் வேண்டும்.

தேசிய அரசுப் பேரவையில் ஆசனம் வெற்றுதல்.

**36.** (1) தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவரின் ஆசன மானது—

(அ) அவர் இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) தேசிய அரசுப் பேரவைச் செயலாளருக்கு முகவரியிட்டுத் தன் கைப்படவுள்ள எழுத்துமூலம் அவர் தமது ஆசனத்தை விட்டு நீங்குமிடத்து ; அல்லது

(இ) 68 ஆம் பிரிவிலும் 70 ஆம் பிரிவிலும் குறிப்பிடப்பட்ட தகுதியீனங்களுள் எதற்கேனும் அவர் ஆட்பட்டால் ; அல்லது

(ஈ) அரசுச் சேவையில் ஓர் உறுப்பினரானல் அல்லது அரசுச் சேவையில் உறுப்பினராயிருந்து அவர் தேசிய அரசுப் பேரவையில் அமர்வதற்கு முன்னர் அத்தகைய சேவையின் உறுப்பினராதலிலிருந்து நீங்காதிருந்தால் ; அல்லது

(உ) தேசிய அரசுப் பேரவையின் அனுமதியை முன்னரே பெருது மூன்று மாத காலத்துக்குத் தொடர்பாகப் பேரவையின் இருக்கைகளுக்கு அவர் வராதிருந்தால் ; அல்லது

(ஊ) தேசிய அரசுப் பேரவை உறுப்பினரான அவரின் தேர்தல் அல்லது முதல் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினரான அல்லது தேசிய அரசுப் பேரவை உறுப்பினரான அவரின் தேர்தல் அக்காலத்து வலுவுள்ளதாயிருக்கும் சட்டத்தின் கீழ் வெற்றுனதென வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(எ) தேசிய அரசுப் பேரவை கலேக்கப்படுமிடத்து,

வெற்றுனதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஊ), பந்தி (எ) என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழல்லாது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவரின் ஆசனம் வெற்றுனதாகும்பொழுது தேசிய அரசுப் பேரவைச் செயலாளர் சனதிபதிக்கு அதுபற்றி அறிவித்தல் வேண்டும். சனதிபதியவர்களும் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காகத் தேர்தல் நடைபெறவேண்டுமெனக் கசற்றிலான அறிவித்தல் மூலம், ஒரு மாதத்தினுள் கட்டளையிடுதல் வேண்டும்.

நிலையான கட்டளைகள்.

**37.** (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையத் தேசிய அரசுப் பேரவை பிரேரணைத் தீர்மானத்தின் மூலம் அல்லது நிலையான கட்டளை மூலம்—

(அ) சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் என்போரைத் தெரிவு செய்வதற்கும் அவர்கள் ஒய்வு பெறுவதற்குமாகவும் ; அத்துடன்

(ஆ) அதன் அலுவல்களை ஒழுங்கு செய்தல், அதன் இருக்கைகளில் ஒழுங்கு கடைப்பிடித்தல், அத்துடன் அரசியலமைப்பினால் அவ்விதம் ஆக்கும்படி தேவைப்படுத்தப் பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் அலுவலுக்குமாகவும்,

ஏற்பாடு செய்யலாம்.

(2) தேசிய அரசுப் பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்யும் வரை, அரசியலமைப்புத் தொடங்குவதன் நேர்முன்னர் நடைமுறையில் இருந்துவந்த பிரதிநிதிகள் சபையின் நிலையான கட்டளைகள் ஏற்ற மாற்றங்களுடன், தேசிய அரசுப் பேரவையின் நிலையான கட்டளைகளாகத் தொடர்ந்து வலுவுடையனவாக இருந்துவரல்வேண்டும்.

தேசிய அரசுப் பேரவையின் சிறப்புரிமைகளும் உறுப்பினரின் ஊதியமும்.

38. (1) தேசிய அரசுப் பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்யும்வரை, தேசிய அரசுப் பேரவையினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் ஆகியன அரசியலமைப்புத் தொடங்குவதன் நேர்முன்னர் பிரதிநிதிகள் சபைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இருந்த அவையேயாதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பாராளுமன்றத் (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டம் ஏற்புடையதாகும் அளவுக்கும் ஏற்ற மாற்றங்களுடனும், வலுவுடையதாகவிருந்துவரல் வேண்டும்.

(2) அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் என்போர்க்குத் தேசிய அரசுப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய ஊதியமும் படிகளும் வழங்கப்படலாம்.

(3) தேசிய அரசுப் பேரவை அவ்விதம் ஏற்பாடு செய்யும்வரை அமைச்சர்கள், சபாநாயகர், பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், தேசிய அரசுப் பேரவையின் ஏனைய உறுப்பினர் என்போர்க்கு வழங்கப்படவேண்டிய ஊதியம் அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் பிரதிநிதிகள் சபையின் அமைச்சர்கள், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர், பிரதிநிதிகள் சபையின் ஏனைய உறுப்பினர் என்போர்க்குக் கொடுக்கப்பட்ட அவ் ஊதியங்கள் ஆதல் வேண்டும். தேசிய அரசுப் பேரவை வேறுவிதமாக ஏற்பாடு செய்யும்வரை, தேசிய அரசுப் பேரவையின் பிரதி அமைச்சர்களுக்கு, பிரதிநிதிகள் சபையின் பாராளுமன்றச் செயலாளருக்கு அரசியலமைப்புத் தொடங்குவதன் நேர்முன்னர் கொடுக்கப்பட்ட அவ் ஊதியங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

தேசிய அரசுப் பேரவையின் நடவடிக்கைகள் நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டனவாதல்.

39. (1) அரசியலமைப்பில் வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, நீதிநிருவாகம் செய்யும் எந்த நீதிமன்றமாயினும் வேறு நிறுவனமாயினும், தேசிய அரசுப் பேரவையின் நடவடிக்கை தொடர்பாக அல்லது தேசிய அரசுப் பேரவையினால் அல்லது தேசிய அரசுப் பேரவையில் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகவோ செய்யாது விடப்பட்டதாகவோ கருதப்படும் ஏதேனும் தொடர்பாக தத்துவம் அல்லது நியாயாதிக்கம் உடையதாயிருத்தலாகாது.

(2) தேசிய அரசுப் பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் செயற்பாட்டினைப் பாதித்தலாகா.

### தேசிய அரசுப் பேரவையின் காலம்

**40.** (1) இவ்வரசியலமைப்பின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தேசிய அரசுப் பேரவையும் அது முன்னரே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதற் கூட்டத்தேதிலிருந்து ஆறு ஆண்டு காலத்துக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும், அதற்கு மேற்படலாகாது. அந்த ஆறு ஆண்டு கழிவதே தேசிய அரசுப் பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல் வேண்டும். தேசிய அரசுப் பேரவையின் காலம்.

(2) தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டதன் பின்னர் எக்காலத்திலாயினும் 134 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவசர காலநிலைமை வெளிப்படுத்தப்பட்டால், அவசரகால நிலைமையை வெளிப்படுத்தும் பிரகடனம், பிரகடனத்தின் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாததாகவிருக்கவேண்டிய முன்னைய தேதி ஒன்றைக் கூட்டத்துக்கென அப்பிரகடனம் நியமித்திருந்தாலொழிய, அத்தகைய பிரகடனத்திலிருந்து பத்தாந் நாளன்று கூடும்படி, தேசிய அரசுப் பேரவையை அழைப்பதாகச் செயற்படுதல் வேண்டும். அவ்விதம் அழைக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவை அவசரகாலம் முடிவுறும்வரை அல்லது பொதுத் தேர்தல் முடியும்வரை, இவற்றுள் எது முன்னர் நிகழுமோ அதுவரை, அமர்வில் வைத்திருக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் மேல் கலைந்ததாதலும் வேண்டும்.

**41.** (1) ஆண்டுக்கு ஒரு முறையேனும் கூடும்படி தேசிய அரசுப் பேரவை அழைக்கப்படுதல் வேண்டும். தேசிய அரசுப் பேரவையை அழைத்தல் சனாதிபதியின் பிரகடனத்தின் மூலமாதல் வேண்டும். தேசிய அரசுப் பேரவையின் அமர்வுகள்.

(2) நாலு மாதங்களுக்கு மேற்பட்ட எக்காலத்துக்கும் தேசிய அரசுப்பேரவை அமர்வு நிறுத்தப்பட்டிருத்தலாகாது. அத்துடன் அடுத்த அமர்வுக்கான தேதி தேசிய அரசுப் பேரவையின் அமர்வு நிறுத்தும் அப்பிரகடனத்தில் தரப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) தேசிய அரசுப் பேரவை அமர்வு நிறுத்தப்படுமிடத்து, அவ்விதம் அமர்வு நிறுத்தப்படுமுன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏதேனும் சட்டமூலம் அவ்விதம் அமர்வு நிறுத்தப்பட்டதனை உடன் அடுத்துவரும் அமர்வின் போது தொடர்ந்து கையாளப்படலாம்.

(4) தேசிய அரசுப் பேரவை அமர்வு நிறுத்தப்பட்டிருக்கும் எக்காலத்திலும், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னரான தேதியில், ஆனால் அத்தகைய முன்னரான தேதி பிரகடனத்தின் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்னராகாத தேதியில், சனாதிபதி பிரகடனத்தின் மூலம் தேசிய அரசுப் பேரவையைக் கூடும்படி அழைக்கலாம்.

(5) தேசிய அரசுப் பேரவை அமர்வு நிறுத்தப்பட்டிருக்கும் எக்காலத்திலும், தேசிய அரசுப் பேரவை கலைக்கப்படலாம்.

(6) தேசிய அரசுப் பேரவை கலைக்கப்படுமிடத்து, தேசிய அரசுப் பேரவை எந்தப் பிரகடனத்தினால் கலைக்கப்படுகின்றதோ அப் பிரகடனம், தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் தெரிவுக்கான ஒரு தேதியை அல்லது தேதிகளை நிச்சயித்துக் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் அப்பிரகடனத் தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் புதிய தேசிய அரசுப் பேரவையைக் கூடுமாறு அப்பிரகடனம் அழைத்தலும் வேண்டும்.

(7) தேசிய அரசுப் பேரவை ஒன்றுக்கு நிச்சயிக்கப்பட்ட ஆறுண்டுக் காலம் முடிவதன் காரணமாகத் தேசிய அரசுப் பேரவை கலைக்கப் பட்டதாயிருக்குமிடத்து அக்கலைப்பின் தேதியிற்றொடங்கும் நாலு மாதங்கள் முடிவடையும் முன்னர் தேசிய அரசுப் பேரவை யுறுப்பினர் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதற்கான நியதிச் சட்டப் பணிப்பாக அக்கலைப்புச் செயற்பட வேண்டும். சனாதிபதியும் முதலமைச்சருடனான ஆலோசனையின் பின்னர் தேர்தல்கள் நடை பெறுவதற்கும் புதிய தேசிய அரசுப் பேரவை கூடுவதற்குமான தேதிகளை அக்காலத்தினுள் நிச்சயித்தல் வேண்டும்.

### முதலாவது தேசிய அரசுப் பேரவை

முதலாவதுதேசிய அரசுப் பேரவை.

42. (1) முதலாவது தேசிய அரசுப் பேரவையின் உறுப்பி னர்கள்—

(அ) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் அரசி யல் நிருணயசபையின் உறுப்பினராகவிருந்த ஆட்களும்;

(ஆ) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தெரிவுசெய்யப்படக்கூடிய அத்தகைய ஆட்களும்,

ஆதல் வேண்டும்.

(2) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் இருந்து வந்தனவான பிரதிநிதிகள் சபை சம்பந்தமான தேர்தல் மாவட்டங் கள் முதல் தேசிய அரசுப் பேரவை சம்பந்தமான தேர்தல் மாவட்டங்களாதல் வேண்டும்.

(3) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் இருந்து வந்த பிரதிநிதிகள் சபைத் தேர்தல் மாவட்டமொன்றை முதல் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவர் பிரதிநிதித்துவம் வகித்துவருமிடத்து அவர் முதல் தேசிய அரசுப் பேரவையின் அத்தேர்தல் மாவட்டத்துக்கான உறுப்பினராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) முதல் தேசிய அரசுப் பேரவை சம்பந்தமான ஏதேனும் தேர்தல் மாவட்டம் முதல் தேசிய அரசுப் பேரவையில் பிரதி நிதித்துவம் பெறாதிருக்கின்றவிடத்து முதல் தேசிய அரசுப் பேரவை உறுப்பாண்மையில் வெற்றிடமொன்றிருப்பதாகக் கொள் ளப்படல் வேண்டும் என்பதுடன் அக்காலத்துக்கென வலுவுள்ள தாயுள்ள தேசிய அரசுப் பேரவைத் தேர்தல் சம்பந்தமான சட்டத்துக்கிணங்க அத்தகைய வெற்றிடம் நிரப்பப்படலும் வேண் டும்.

(5) முதற்றேசிய அரசுப் பேரவையானது முன்னரே கலைக் கப்பட்டாலொழிய, அரசியல் நிருணயசபை இவ்வரசியலமைப்பினை ஆக்கிக்கொள்ளும் தேதியிற்றொடங்கும் ஐந்து ஆண்டு காலத் துக்குத் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

(6) அரசியல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தெரிவுசெய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை ஒன்று தொடர்பிலான அரசியலமைப்பின் ஏற்பாடுகள் முதல் தேசிய அரசுப் பேரவை தொடர்பாக அரசியலமைப்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளமை காரணமாக அத்தகைய ஏற்பாடுகளுள் எதுவேனும் ஏற்புடையதாகாதிருப்பினன்றி, முதல் தேசிய அரசுப் பேரவைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## முதலாவது முதலமைச்சர்

43. அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் முதல் அமைச்சர் பதவியை வகிப்பவர் அரசியலமைப்பின் கீழ் முதலாவது முதலமைச்சராதல் வேண்டும். அவர் பின்வரும் சத்தியத்தை அந்நேரத்தில் சமுகமாயிருக்கும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் முன்னர் செய்து கொள்வதன் மீது முதலமைச்சராகப் பதவி மேற்கொள்வார் :- முதலாவது முதலமைச்சர்.

" .................... ஆகிய யான் இலங்கைக் குடியரசுக்கு நம்பிக்கையுள்ளவராகவும் உண்மையான விசுவாசம் கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பைப் போற்றி ஒழுகுவேனெனவும், முதலமைச்சர் பதவியின் கடமைகளையும் பணிகளையும் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்க நம்பிக்கைக்குரிய வகையில் புரிவேன் எனவும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன். ".

## தேசிய அரசுப் பேரவையின் சட்டமாக்கற்றத்துவம்

44. தேசிய அரசுப் பேரவையின் சட்டமாக்கற்றத்துவம் மிகவும் உயர்ந்ததாதலோடு— தேசிய அரசுப் பேரவையின் சட்டமாக்கற்றத்துவம்.

(அ) அரசியலமைப்பை முற்றாக அல்லது பகுதியளவில் நீக்குவதற்கு அல்லது திருத்துவதற்கும் ;

(ஆ) அரசியலமைப்பை மாற்றீடு செய்வதற்கெனப் புதிய அரசியலமைப்பொன்றைச் சட்டமாக்குவதற்கும்,

உள்ள தத்துவத்தையும் உள்ளடக்கும் :

எவ்வாறாயினும், அத்தகைய தத்துவம்—

(i) அரசியலமைப்பின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் நடைமுறையை இடை நிறுத்துவதற்கான தத்துவத்தையும்;

(ii) அதனை மாற்றீடு செய்வதற்கெனப் புதியதோர் அரசியலமைப்பினைச் சட்டமாக்காது அரசியலமைப்பினை நீக்குவதற்கான தத்துவத்தையும்,

உள்ளடக்காது.

45. (1) தேசிய அரசுப் பேரவை அதன் சட்டமாக்கற்றத்துவத்தைத் துறத்தலாகாது, கையளித்தலாகாது அல்லது எவ்விதமாகவேனும் பராதீனப்படுத்தலுமாகாது. அல்லாமலும், துணைநிலைச் சட்டவாக்கங்களை ஆக்கும் தத்துவம் தவிர, வேறு சட்டமாக்கற்றத்துவங் கொண்ட அதிகாரம் ஒன்றை நிறுவுதலுமாகாது. பிரதான சட்டமாக்கற்றத்துவத்தைக் கையளித்தலாகாது.

(2) தேசிய அரசுப் பேரவையானது—

(அ) தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்று, நடைமுறைக்கு வரவேண்டிய அல்லது செயற்பாடு ஒழியவேண்டிய தேதியை நியமிப்பதற்கென ஏதேனும் அதிகாரத்துக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் ஏற்பாடு ;

(ஆ) தேசிய அரசுப்பேரவையினாலாக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தை அல்லது அதன் பாகத்தை கட்டளை மூலம் ஏதேனும் பிரதேசத்துக்கு அல்லது ஆட்கள் வகுப்புக்கு ஏற்புடையதாக ஆக்குவதற்கென ஏதேனும் அதிகாரத்துக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் ஏற்பாடு ;

(இ) கட்டளை ஒன்றன் மூலம் அல்லது சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல் ஒன்றன் மூலம் சட்டவழியான ஆட்களைத் தோற்றுவித்தற்கு ஏதேனும் அதிகாரத்துக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் ஏற்பாடு ;

என்பவற்றை உள்ளடக்கிய எதுவேனும் சட்டத்தை ஆக்குதல் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளை மீறுவதாக அமையாது.

(3) (அ) விதிக்கப்பட்ட நோக்கங்களுக்கெனத் துணைநிலைச் சட்டவாக்கங்களாக்கும் தத்துவத்தைத் தேசிய அரசுப் பேரவை சட்டத்தினால் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு வழங்கலாம்.

(ஆ) விதிக்கப்பட்ட நோக்கங்களுக்குத் துணைநிலைச் சட்டவாக்கங்களை ஆக்குவதற்கான தத்துவத்தை எவரேனும் ஆள் மீது அல்லது எதுவேனும் குழு மீது இப்போதுள்ள எழுத்திலான சட்டத்திலுள்ள ஏற்பாடு எதுவும் வழங்குகின்றவிடத்து, அத்தகைய தத்துவங்கள் தேசிய அரசுப் பேரவையின் சட்டமொன்றினால் வழங்கப்பட்டுள்ளனவாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஒரு புறநடையாக, அவசரகால நிலைமையின்பொழுது, பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் அப்போதுள்ள சட்டத்திற்கிணங்கவும், அவசரகாலம் தொடர்ந்திருக்கும் அளவுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப்பேணுதல், படைக்கலகம், கலகம், உள்நாட்டுக் கலவரம், என்பவற்றை அடக்குதல் என்பனவற்றில் அக்கறை கொண்ட அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கான அவசரகால ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவத்தைத் தேசிய அரசுப்பேரவை சனாதிபதிக்குக் கையளிக்கலாம். அத்தகைய அவசரகால ஒழுங்கு விதிகளையாக்குவதற்குள்ள தத்துவம், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் தவிர்ந்த, ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் செயற்பாட்டை மீறிச் செல்லும், திருத்தும் அல்லது இடைநிறுத்தும் சட்டப்பயனுடைய ஒழுங்கு விதிகளையாக்குவதற்குள்ள தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

# அத்தியாயம் 9

## சட்டங்களை ஆக்குவதற்கும் பிரேரணைத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைமுறை

**46.** (1) ஒரு சட்டத்துக்கான சட்ட மூலம் ஒவ்வொன்றும் தேசிய அரசுப்பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் சிங்களத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டும். **சட்டமூலத்தை வெளியிடுதலும், நிறைவேற்றுதலும்.**

(2) சட்ட மூலம் ஒன்று தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்படுதல் தேசிய அரசுப்பேரவையின் நிலையான கட்டளைகளுக்கும் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் இணங்கவிருத்தல் வேண்டும்.

(3) நிலையான கட்டளைகளில் விதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் தேசிய அரசுப்பேரவை நிலையான கட்டளைகளின் செயற்பாட்டை இடைநிறுத்தி வைக்கலாம்.

**47.** விசேட பெரும்பான்மை ஒன்று **51, 52** ஆகிய பிரிவுகளினால் விதிக்கப்பட்டிருக்கும் விடயத்தில் தவிர, தேசிய அரசுப் பேரவையின் முடிவுக்கு எடுத்துரைக்கப்பட்ட கேள்வி எதுவும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் வாக்குப் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படல் வேண்டும். சபாநாயகர் முதல் சந்தர்ப்பத்தில் வாக்களித்தலாகாது. ஆனால் வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் அறுதியிடும் வாக்கொன்றைப் பிரயோகித்தல் வேண்டும். **தேசிய அரசுப் பேரவையில் வாக்களித்தல்.**

**48.** (1) தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்படும் சட்டமூலம் 49 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தாட்சி அதன் மீது புறக்குறிப்பிடப்பட்டதும் தேசிய அரசுப்பேரவையின் சட்டமாதல் வேண்டும். அத்தகைய சட்டம் அதன் எல்லா ஏற்பாடுகளும் அல்லது ஏதேனும் ஏற்பாடு கடந்த காலத்தையும் உள்ளடக்கும் செயற்பாட்டுக்கு அல்லது அச்சட்டம் அல்லது அதன் ஏதேனும் பாகம் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியை நியமித்தற்கு ஏற்பாடு செய்யலாம். **சட்டமூலம் எப்பொழுது சட்டமாகும்.**

(2) நீதியை நிருவகிக்கும் எதுவேனும் நிறுவனமேனும் அவ்வகையே வேறு நிறுவனமேனும், ஆள் அல்லது அதிகாரியேனும், தேசிய அரசுப் பேரவையின் ஏதேனும் சட்டத்தின் செல்லுபடியான தன்மையைப்பற்றி விசாரணை செய்யவோ கருத்துரை, தீர்ப்பு வெளியிடவோ வேறெவ்வகையிலாயினும் கேள்வியுட்படுத்தவோ தத்துவம் அல்லது நியாயாதிக்கமுடையதாதலாகாது.

**49.** (1) தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்படும் சட்டமூலம் ஒவ்வொன்றின் மீதும் சபாநாயகர் அல்லது சபாநாயகர் அவரது பதவியின் பணிகளைப் புரிய இயலாதவராகவிருக்குமிடத்து பிரதிச்சபாநாயகர் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் விதிக்கப்பட்டுள்ள அத்தாட்சியைப் புறக்குறிப்பிடுதல் வேண்டும். **சபாநாயகரின் அத்தாட்சி.**

3—கே 13039 (5/72)

(2) சபாநாயகரால் அல்லது விடயத்துக்கேற்பப் பிரதிச்சபா நாயகரால் ஒப்பமிடப்படவேண்டிய அத்தாட்சி பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும் :—

" ..............(சட்டத்தின் சுருக்கப்பெயரை இங்கு தருக) என்னும் இச்சட்டம், தேசிய அரசுப்பேரவையினால் முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளது.".

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான அத்தாட்சி எல்லா நோக்கங்களுக்கும் முற்றுனதாதல் வேண்டும். அத்துடன், நீதியை நிருவகிக்கும் நிறுவனம் எதுவேனும் அவ்வகையே வேறு நிறுவனம், ஆள் அல்லது அதிகாரியேனும் அத்தகைய அத்தாட்சி எதனையும் பற்றி விசாரணை செய்யவோ அதன் மீது கருத்துரை, தீர்ப்பு வழங்கவோ எவ்வகையிலாயினும் கேள்வியுட்படுத்தவோ தத்துவம் அல்லது நியாயாதிக்கம் உடையதாதலாகாது.

பிரேரணைத் தீர்மானங்கள்.

**50.** அரசியலமைப்பின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரேரணைத் தீர்மானங்கள் உட்படத் தேசிய அரசுப் பேரவையின் பிரேரணைத் தீர்மானங்கள் யாவும் தேசிய அரசுப் பேரவையின் நிலையான கட்டளைகளால் அதற்கென விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நிறைவேற்றப்படலாம்.

# அத்தியாயம் 10

## அரசியலமைப்பைத் திருத்தும் சட்டங்களும் அரசியலமைப் போடு ஒத்துவராத சட்டங்களும் தொடர்பிலான விசேட நடவடிக்கைமுறை

அரசியலமைப் பைத் திருத்துதல் அல்லது நீக்குதல் வெளிப்படையான தாக இருத்தல் வேண்டும்.

51. (1) நீக்கப்படவுள்ள அல்லது திருத்தப்படவுள்ள ஏற்பாடும் விளைவாந்தன்மையான திருத்தங்கள் எவையேனுமிருப்பின் அவையும், அச்சட்ட மூலத்திலேயே வெளிப்படையாகத் தரப் பட்டும், அச்சட்ட மூலத்தின் நீண்ட தலைப் பெயரில் அச்சட்டமூலம் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதாகும் என வெளிப்படை யாகக் குறிப்பிடப்பட்டும் இருந்தாலொழிய, அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்குவதற்கான அல்லது திருத்துவதற் கான சட்ட மூலம் எதுவும் தேசிய அரசுப்பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படலாகாது.

(2) அரசியலமைப்பை நீக்குவதற்கான சட்டமூலம், நீக்கப்பட வுள்ள அரசியலமைப்புக்குப் பதிலாக மாற்றீடு செய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டதாயும், அச்சட்ட மூலத்தின் நீண்ட தலைப் பெயர் அச்சட்டமூலம் அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமுரியதாகும் என வெளிப்படையாகக் குறிப்பிடுவதா யும் இருப்பினன்றி அரசியலமைப்பை நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும் தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படலாகாது.

(3) சபாநாயகரின் அபிப்பிராயப்படி அல்லது சபாநாயகர் அவரது பதவியின் பணிகளைப் புரிய இயலாதவராகவிருக்குமிடத்து, பிரதிச்சபாநாயகரின் அபிப்பிராயப்படி சட்டமூலம் ஒன்று, இப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் நிபந்தனைகளைத் திருப்தி செய்யவில்லையாயின், தேவையான நிபந் தனைகளைத் திருப்திசெய்யும் விதமாக அத்தகைய சட்டமூலம் திருத்தப்பட்டாலொழிய, அது தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படலாகாதெனச் சபாநாயகர் பணித்தல் வேண்டும்.

(4) எச்சட்டத்தின் எவ் ஏற்பாடேனும் அரசியலமைப்பின் ஏற் பாடு எதனையேனும் உட்கிடை வழியாக நீக்கும் அல்லது திருத்தும் சட்டப்பயனுள்ளதாதலாகாது.

(5) அரசியலமைப்பை மாற்றியிடுவதற்கான, நீக்குவதற்கான அல்லது திருத்துவதற்கான சட்ட மூலமெதுவும், தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் மொத்தத் தொகையில் (சமுகமாயிரா தோருட்பட) ஆகக் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரால் அதற்குச் சாதகமாக வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டாலன்றி 49 ஆம் பிரிவின் கீழ் அது அத்தாட்சிப்படுத்தப்படலாகாது.

அரசியலமைப் போடு ஒத்துப் போகாத சட்டங் களை யாக்குதல்.

52. (1) ஏதேனும் விடயத்தில் அல்லது விவரத்தில் அரசியலமைப்பிலுள்ள ஏதேனும் ஏற்பாட்டோடு ஒத்துப்போகாத சட்டமொன்று, அத்தகைய சட்டமானது அரசியலமைப்பைத் திருத்துவதற்கான பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுமானால், அரசியலமைப்பின் அத்தகைய ஏற்பாட்டைத் திருத்தாமலேயே அல்லது நீக்காமலேயே தேசிய அரசுப்பேரவையினால் சட்டமாக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிறைவேற்றப்படும் சட்டம் ஒன்று அது அரசியலமைப்பின் எந்த ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாதிருக்கின்றதோ அவற்றைத் திருத்துவதாகப் பொருள் கொள்ளப்படலாகாது.

## சட்டமூலங்களை ஆராய்தல்

வெளியிடப்பட்ட சட்ட மூலங்கள் தொடர்பில் சட்டத் துறைத் தலைமை யதிபதிக்குள்ள கடமைகள்.

53. (1) 51 ஆம், பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் தேவைப்பாடுகளுள் எதுவேனும் மீறப்பட்டுள்ளதா என்பதற்காகவும், அரசியலமைப்பினால் விதிக்கப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டல்லாது செல்லுபடியாகக் கூடியவிதமாக நிறைவேற்றப்படமுடியாத ஏதேனும் ஏற்பாடுள்ளதா என்பதற்காகவும், ஒவ்வொரு சட்டமூலத்தையும் ஆராய்ந்து பார்த்தல் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். இந்த உட்பிரிவின் கீழும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குள்ள கடமையைப் புரிவதில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவியளிக்கும் எவரேனும் அலுவலர்க்கு அவரது கடமைகளைப் புரிவதற்குத் தேவையான எல்லா வசதிகளும் அளிக்கப்படலும் வேண்டும்.

(2) சட்டமூலம் ஒன்று 51 ஆம் பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளின் தேவைப்பாடுகளுள் எதனையேனும் மீறியுள்ளது என அல்லது சட்ட மூலத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்பினால் விதிக்கப்பட்ட விசேட பெரும்பான்மைகொண்டல்லாது செல்லுபடியாகக் கூடியவிதமாக நிறைவேற்றப்படமுடியாது எனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டால், சட்டத்துறைத் தலைமை அதிபதி அத்தகைய அபிப்பிராயத்தைச் சபாநாயகருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) சட்டமூலம் ஒன்று 51 ஆம் பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளின் தேவைப்பாடுகளுள் எதனையேனும் மீறுகின்றதா என்னும் கேள்வியை அல்லது சட்டமூலம் ஒன்றிலுள்ள எதுவேனும் ஏற்பாடு அரசியலமைப்பில் விதிக்கப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டல்லாது செல்லுபடியாகக் கூடிய விதமாகச் சட்டமாக்கப்பட முடியாதா என்னும் கேள்வியைச் சபாநாயகர் அரசியல் அமைப்பு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டால், அவர் அத்தகைய அபிப்பிராயத்தை சபாநாயகருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குள்ள கடமை, சட்டமூலம் ஒன்றுக்கு முன் மொழியப்படும் எல்லாத் திருத்தங்களை ஆராயும் கடமையினையும் அச்சட்ட மூலம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கெனத் தேசிய அரசுப் பேரவைக்கு விடப்படத் தயாராகவிருக்கும் அந்நிலையிலும் அவரின் அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தும் கடமையினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

## அரசியலமைப்பு நீதிமன்றம்

**54.** (1) அரசியலமைப்பினால் அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளைப் புரிவதற்கென அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்றிருத்தல் வேண்டும். நாலாண்டு காலத்துக்கு அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினராக விருத்தற்கென ஐந்து ஆட்களைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும். இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 55 ஆம் பிரிவின் கீழ் எழும் ஏதேனும் விடயத்தினைத் தீர்மானிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமிடத்தெல்லாம் அரசியலமைப்பு நீதிமன்ற விதிகளுக்கிணங்கத் தெரிந்தெடுக்கப்படும் அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினர் மூவர் அத்தகைய விடயத்தைத் தீர்மானித்தல் வேண்டும். **அரசியலமைப்பு நீதிமன்றம்.**

(2) சட்ட மூலத்தின் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒத்துப்போகாததா எனும் கேள்வி எதுவும்—

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி 53 ஆம் பிரிவின் கீழ் தனது அபிப்பிராயத்தைச் சபாநாயகருக்கு அறிவித்தால் ; அல்லது

(ஆ) அச்சட்ட மூலம் தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டதிலிருந்து ஒரு கிழமையினுள், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற்கட்சியின் தேசிய அரசுப் பேரவையிலுள்ள தலைவரால் ஒப்பமிடப்பட்டதான அத்தகைய கேள்வியொன்றை எழுப்பும், எழுத்திலான அறிவித்தல் ஒன்றைச் சபாநாயகர் பெற்றால் ; அல்லது

(இ) தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் அச்சட்ட மூலம் சேர்க்கப்பட்டதிலிருந்து ஒரு கிழமையினுள் தேசிய அரசுப் பேரவையின் கூட்ட நடப்பெண்ணாக அமையும் அத்தகைய எண்ணினரான தேசிய அரசுப் பேரவை உறுப்பினராலேனும் ஒப்பமிடப்பட்டுள்ளதும் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்டுள்ளதுமான எழுத்திலான அறிவித்தல் ஒன்றுமூலம் அக்கேள்வி எழுப்பப்பட்டால் ; அல்லது

(ஈ) அத்தகைய கேள்வியுண்டெனச் சபாநாயகர் அல்லது சபாநாயகர் அவரது பதவியின் பணிகளைப் புரியவியலாதவராகவிருக்குமிடத்துப் பிரதிச் சபாநாயகர் கருத்துக் கொண்டால் ; அல்லது

(உ) தேசிய அரசுப்பேரவையின் நிகழ்ச்சி நிரலில் அச்சட்டமூலம் சேர்க்கப்பட்டதிலிருந்து ஒரு கிழமையினுள் பிரசை எவராலும் பணிந்து வேண்டப்படுமிடத்து, அரசியலமைப்பு நீதிமன்றம் அத்தகைய கேள்வியுண்டெனச் சபாநாயகருக்கு ஆலோசனையளித்தால்,

ஒரு முடிவுக்கென அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு சபாநாயகரால் அல்லது சபாநாயகர் அவரது பதவியின் பணிகளைப்புரியவியலாதவராகவிருக்குமிடத்துப் பிரதிச் சபாநாயகரால் அனுப்பப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 55 ஆம் பிரிவின் கீழ் அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சட்டமூலம் ஒன்று தொடர்பில் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு அல்லது 55 ஆம் பிரிவின் கீழான அதன் அபிப்பிராயம் தரப்படும்வரை தேசிய அரசுப்பேரவையில் எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(4) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான அனுப்புகை ஒன்றின் மீதான அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு சபாநாயக்ரைக் கட்டுப்படுத்துவதாதல் வேண்டும் என்பதோடு எல்லா நோக்கங்களுக்கும் முற்றுனதுமாதல் வேண்டும். நீதிநிருவகிக்கும் எந்த நிறுவனமேனும் அவ்வகையாகவே வேறு நிறுவனம், ஆள் அல்லது அதிகாரியேனும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவைப்பற்றி விசாரணை செய்யவோ அதன்மீது கருத்துரை, தீர்ப்பு வழங்கவோ எவ்வகையிலாயினும் கேள்வியுட்படுத்தவோ தத்துவம், அல்லது நியாயாதிக்கம் உடையதாதலாகாது.

அவசரச் சட்ட மூலங்கள்.

55. (1) அமைச்சரவையின் நோக்கத்தின்படி, தேசிய நலனைக் கருதி அவசரமானதாயும் அவ்வித பயன் குறிக்கும் புறக்குறிப்பையுடையதாயும் உள்ள சட்ட மூலத்தின் விடயத்தில் 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும், 54 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதலாகா.

(2) அத்தகையதொரு சட்டமூலமானது சபாநாயகரால் அல்லது சபாநாயகர் அவரது பதவியின் பணிகளைப் புரியவியலாதவராகவிருக்குமிடத்துப் பிரதிச் சபாநாயகரால் அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அந்நீதிமன்றம்—

(அ) அதன் அபிப்பிராயப்படி அச்சட்ட மூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் ஒத்துப்போகின்றன என ; அல்லது

(ஆ) அதன் அபிப்பிராயப்படி அச்சட்ட மூலம் அல்லது அதிலுள்ள எதுவேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒத்துப்போகவில்லை என ; அல்லது

(இ) அச்சட்டமூலம் அல்லது அதிலுள்ள எதுவேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒத்துப்போகின்றதா என்பது பற்றி அதற்குச் சந்தேகம் உண்டு என

சபாநாயகருக்கு அறிவுரை வழங்கல் வேண்டும். அரசியலமைப்பு நீதி மன்றம் இயன்றளவு விரைவாக, ஆனாலும் எவ்விடயத்திலேனும் அந்நீதிமன்றக் கூட்டம் கூடியதிலிருந்து 24 மணித்தியாலங்களுள், அதன் அறிவுரையைச் சபாநாயகருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய சட்டமூலமானது இப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அரசியலமைப்பு நீதி மன்றத்தின் அறிவுரையை அதனிடமிருந்து பெறும்வரை தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படலாகாது.

(4) அச்சட்டமூலம் அல்லது அதிலுள்ள எதுவேனும் ஏற்பாடு அரசியலமைப்பினுடன் ஒத்துபோகாதுள்ளது என அல்லது அச் சட்ட மூலம் அல்லது அதிலுள்ள ஏற்பாடு எதுவேனும் அரசிய லமைப்புடன் ஒத்துப்போகின்றதா என்பதுபற்றி அதற்குச் சந் தேகம் உண்டு என அரசியலமைப்பு நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவுரை வழங்கினுல், அச்சட்டமூலம், அரசியலமைப்பைத் திருத் துவதற்குத் தேவையான விசேட பெரும்பான்மை கொண்டல் லாது சட்டமாக நிறைவேற்றப்படலாகாது.

**அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வெற்றிடங்கள்.**

**56.** (1) (அ) உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) சனுதிபதிக்கு முகவரியிடப்படும் எழுத்தொன்றன் மூலம் உறுப்பினர் ஒருவர் விலகுமிடத்து ; அல்லது

(இ) உடனலமின்மை அல்லது உடல் அல்லது உளப்பலவீனம் காரணமாக உறுப்பினர் ஒருவர் சனுதிபதியால் அகற்றப்படுமிடத்து ; அல்லது

(ஈ) நீதிமன்ற உறுப்பினர் எக்காலத்துக்கென நிய மிக்கப்பட்டனரோ அக்காலம் முடிவடையுமிடத்து,

அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினர்க்கிடையில் வெற்றிடம் ஏற்பட்டதாதல் வேண்டும்.

(2) அத்தகைய வெற்றிடம் எதுவும் 54 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நிரப்பப்படலாம்.

(3) அரசியலமைப்பு நீதிமன்றத்தின் உறுப்பினர் ஒருவர் இலங்கையில் இல்லாதிருக்குமிடத்து, அவரவ்விதம் இல்லாதிருக் கும் காலத்தில் நீதிமன்ற உறுப்பினராயிருக்கும்படி சனுதிபதி ஆள் ஒருவரை நியமிக்கலாம்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விதத்தில் தவிர, அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்று எக்காலத்துக்கு நியமிக்கப்பட்டதோ அக்காலத்தினுள் அதனுறுப்பினர் தொடர்பில் எம்மாற்றமும் செய்யப்படலாகாது.

**அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினரின் ஊதியங்கள்.**

**57.** அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு முன்னர் அதன் உறுப்பினர்க்குக் கொடுக்கப்படு வதற்கான ஊதியத்தைத் தேசிய அரசுப்பேரவை நிச்சயித்தல் வேண்டும். அவ்விதம் நிச்சயிக்கப்பட்ட ஊதியம், அதன் காலம் முழுவதுள்ளும் மாற்றப்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் திரட்டு நிதியின்மீது பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

## அரசியலமைப்பு நீதிமன்றத்தின் நடவடிக்கைமுறை

அரசியலமைப்பு நீதிமன்றக்கூட்டங்களைக் கூட்டுதல்.

**58.** தேசிய அரசுப் பேரவைச் செயலாளரே அரசியலமைப்பு நீதிமன்றத்தின் பதிவாளராகவிருக்கவேண்டும் என்பதுடன் அவரே அரசியலமைப்பு நீதிமன்றத்தைக் கூட்டுதலும் வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றம் அதன் நடவடிக்கை முறையை ஒழுங்கு செய்தல்.

**59.** (1) அரசியலமைப்பு நீதிமன்றம், காலத்துக்காலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசியலமைப்பு நீதிமன்றத்தின் செயல்முறை, நடவடிக்கைமுறை என்பனவற்றைப் பொதுவில் ஒழுங்குபடுவதற்கென நீதிமன்ற விதிகளை ஆக்கலாம்.

(2) நீதிமன்ற விதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று, அல்லது அத்தகைய விதியில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழாக்கப்பட்ட நீதிமன்ற விதிகள் யாவும் அவை கசற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனத் தேசிய அரசுப்பேரவையின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்விதம் அங்கீகரிக்கப் படாத அத்தகைய விதி எதுவும் அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து ஆனால் அதன் முன்னர் அதன்கீழ்ச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கஞ் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

தவிசாளர்.

**60.** எச்சந்தர்ப்பத்துக்காயினுஞ்சரி அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தவிசாளர் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் விதிகளுக்கிணங்கத் தெரியப்படல் வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவுகள். ?

**61.** (1) அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு பெரும்பான்மை வாக்குகளாற் பெறப்படவேண்டும்.

(2) அமர்வொன்றில் சமூகமாயிருக்கும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் உறுப்பினர் எவரும் வாக்களிக்காது விடலாகாது.

அரசியலமைப்பு நீதிமன்றங்களின் இருக்கைகள்.

**62.** அரசியலமைப்பு நீதிமன்றத்தில் நிகழும் நடவடிக்கைகள் யாவும் பொதுமக்கள் சமூகமாயிருத்தற்குரியவனவாதல் வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றம் வாதங்களைக் கேட்டலும் யார் அதன் முன்னர் தோன்றலாம் என்பதும்.

**63.** (1) எல்லாவிடயங்கள் மீதும் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதி அவரது வாதம் கேட்கப்படும் உரிமையுடைய வராதல் வேண்டும்.

(2) 54 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ், அதற்கு அனுப்பிவைக்கப்பட்ட ஏதேனும் கேள்வியைக் கையாள்வதன் முன்னர் அரசியல் நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி அந்நீதிமன்றத்துக்கு அவசியமானதெனத் தோன்றும் அத்தகைய வாதங்களை எடுத்துரைக்க ஆள் எவர்க்கேனும் அனுமதியளிக்கலாம்.

(3) அரசியலமைப்பு நீதிமன்றம் தேவையானது அல்லது உசிதமானது என அது எண்ணினுல் சாட்சிகளுக்கு கட்டளை விட்டழைத்து அவர்களை விளங்கலாம்; அத்துடன் எதேனும் ஆவணம் அல்லது வேறு பொருள் அதன் முன்னர் காண்பிக்கப்படக் கட்டளையிடலாம்.

(4) தேசிய அரசுப்பேரவையுறுப்பினர் எவரும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னர் வழக்குரைஞராக அல்லது வழக்கறிஞரா கத் தோற்றுதலாகாது.

அரசியலமைப்பு நீதிமன்ற அவமரியாதை.

**64.** (1) அரசியலமைப்பு நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட நிந்தைத்தவறு எதனையும் கவனத்தில் எடுத்துக் கொள்வதற்கும் சுருக்க முறையில் தவருளரை விளங்குவதற்கும் தவருளர்க்கெதிராக குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து அவர் தமது நிந்தைக்குக் கழுவாய் தேடும்வரை அல்லது நீதிமன்றம் தகுந்தது எனக்காணும் அத்தகையதொரு காலத்துக்கு அவரைச் சிறையிலிடவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்; அத்துடன், அந்நீதிமன்றம் பணிக்கும் விதமாக அச்சிறைத் தண்டனை சாதாரணமானதாக அல்லது கடூழியமானதாக விருத்தல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தின் தற்றுணிபின்படி தவருளர்க்கு அதனுடன் அல்லது அதற்குப்பதிலாக ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றும் செலுத்தும்படி தண்டனையளிக்கவும்படலாம்.

(2) உயர்நீதிமன்றத்திஞல் அதற்கான நிந்தை தொடர்பான நியாயாதிக்கத்தின் கீழ்ச் செய்யப்பட்ட கட்டளைகளைச் செயற்படுத்தும் அல்லது நிறைவேற்றும் அரச அலுவலர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அரசியலமைப்பு நீதிமன்றத்திஞல் செய்யப்பட்ட கட்டளைகளை அதே விதமாகச் செயற்படுத்துதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவுகளும் காரணங்களும் எக்காலத்தினுள் தரப்படல் வேண்டும் என்பது.

**65.** அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு, முடிவுகாண்பதற்கான விடயம் அதற்கு அனுப்பப்பட்டதிலிருந்து இரண்டு கிழமைகளுள் அம்முடிவுக்கான காரணங்களுடன் அறிவிக்கப்படல்வேண்டும். ஒருப்படாத அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினர் எவரும் அவரின் வேறுபாட்டுக்கான காரணங்களைத் தெரிவிக்கலாம். இவையும் பெரும்பான்மையினரின் முடிவுடனும் காரணங்களுடனும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

# அத்தியாயம் 11

## தேசிய அரசுப்பேரவையின் அமைப்பு

### வாக்குரிமை

வாக்களிக்கும் வயது.

**66.** பதினெட்டு வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள பிரசை ஒவ்வொருவரும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிதமாகத் தகுதியற்றவரானுல் ஒழிய, தேசிய அரசுப் பேரவைக்கான தேர்தல்களில் தேருநர் ஒருவராதற்குத் தகுதியுடையவராவர்.

பிரசாவுரிமைச் சட்டங்கள்.

**67.** தேசிய அரசுப்பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்தால் ஒழிய, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுள்ளனவாயிருந்து வந்த பிரசாவுரிமையும் பிரசைகளின் உரிமைகளும் தொடர்பான அத்தகைய சட்டங்கள் ஏற்ற மாற்றங்களுடன் தொடர்ந்து வலுவுள்ளனவாயிருந்துவரல் வேண்டும் :

ஆயினும், தேசிய அரசுப் பேரவையின் சட்டம் எதுவும் வமிசாவழிப்பிரசையொருவரின் இலங்கைப் பிரசை அந்தஸ்தினைப் பறித்தல் ஆகாது.

உறுப்பினரைத் தெரிபவர்க்கான தகுதியீனங்கள்.

**68.** ஆள் எவரேனும், பின்வரும் தகுதியீனங்களுள் எதற்கேனும் ஆட்பட்டவராயிருந்தால், அவையாவன :

(அ) அவர் இலங்கைப் பிரசை ஒருவரல்லாதவராயிருந்தால், அல்லது

(ஆ) அவர் இலங்கையில் வலுவுடையதாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் புத்திசுவாதீனமற்றவரெனத் தீர்மானிக்கப்பட்டவராயிருந்தால் அல்லது வெளிப்படுத்தப் பட்டவராயிருந்தால் ; அல்லது

(இ) இரண்டாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டதொரு காலத்துக்கான சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கு ஆறுமாதத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு (எவ்வித பெயர்கொண்டு அழைக்கப்படுவதாயினுமான) சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவராயிருந்தால் அல்லது நேரேமுன்சென்ற ஏழு ஆண்டுக் காலத்தினுள் அனுபவித்தவராயிருந்தால் அல்லது மரணதண்டனை விதிக்கப்பட்டவராயிருந்தால் அல்லது அத்தகைய ஏதேனும் தண்டனைத் தீர்ப்பு நிறைவேற்றப்படுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட ஆறு மாத காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்டதொரு காலத்துக்கு ஆன சிறைத்தண்டனையை அனுபவிப்பவராயிருந்தால் அல்லது நேரே முன்சென்ற ஏழு ஆண்டுக்காலத்தினுள் அனுபவித்து முடிந்தவராயிருந்தால் :

ஆயினும், இப்பந்தியின்கீழ் தகுதியற்றவராக்கப்பட்ட ஆள் எவரேனும் நிபந்தனையற்ற மன்னிப்பளிக்கப்பட்டால் அத்தகைய தகுதியீனம் அம்மன்னிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிந்ததாதல் வேண்டும் ; அல்லது

(ஈ) அவர்—

(i) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளையின் 52 (1) அல்லது 53 ஆகிய பிரிவுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு அல்லது சொல்லப்பட்ட இரண்டு பிரிவு களுள் ஏதாவதொன்றன் கீழான தவறென்றேடு நேரொத்ததாகவிருக்கக்கூடிய, தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் தேர்தலோடு அக்காலத் துத் தொடர்புபட்ட சட்டத்தின் கீழான அத்த கைய தவறுக்கு, இறுதியாகக் குற்றத் தீர்ப்பளிக் கப்பட்ட அத்தேதியிலிருந்து ; அல்லது

(ii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் கீழான ஓர் ஊழற்பழக்கத்துக்கு அல்லது சொல் லப்பட்ட ஊழற் பழக்கத்தோடு நேரொத்ததாக விருக்கக்கூடிய தேசிய அரசுப்பேரவை உறுப் பினர்கள் தேர்தலோடு அக்காலத்துத் தொடர் புள்ள சட்டத்தின் கீழான அத்தகைய தவற்றுக் குத் தகுதிவாய்ந்தநீதிமன்றம் ஒன்றினால் இறு தியாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அத்தேதியிலி ருந்து ; அல்லது

(iii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளையின் கீழான அல்லது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் தேர்தல் சம்பந்தமாக அக்காலத்துள்ள ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் ஊழற்பழக்கத்துக்கு அவரைக் குற்றவாளியாகக் காணும் தேர்தல் நீதிபதியினாற்செய்யப்பட்ட அறிக்கையின், இவ்வர சியலமைப்புத் தொடங்குவதற்குப் பின்னரான தேதியாகவுள்ள இறுதியான அத்தேதியிலிருந்து; அல்லது

(iv) கைலஞ்சச் சட்டத்தின் அல்லது அதற்கு நேரொத் ததாகவிருக்கும் எதுவேனும் எதிர்காலச் சட்டத் தின் ஏற்பாடுகளின் கீழ் அவர் எந்தத் தீர்ப்பளிக் கப்பட்ட அல்லது குற்றவாளியாகக் காணப்பட்ட தேதி எதுவேனும் இருப்பின், அதன் இறுதித் தேதியிலிருந்து

ஏழாண்டு காலம் கழியாதிருந்தால் ; அல்லது

(உ) (i) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் சட்டத்தின் கட்டளை 77 முதல் 82 வரை (இரண்டுமுட்பட) உள்ள பிரிவு களின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு அல்லது சொல்லப்பட்ட பிரிவின் கீழான ஏதேனும் தவறுக்கு நேரொத்ததாக இருக்கக்கூடிய ஏதேனும்

எதிர்காலத்திய சட்டத்தின் கீழான அத்தகைய தவறுக்கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட இறுதியான அத்தேதியிலிருந்து ; அல்லது

(ii) பகிரங்கக் குழுக்கள் (ஊழற்றடுப்பு) கட்டளைச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறுக்கு அல்லது சொல்லப்பட்ட தவறுக்கு நேரொத்ததாக இருக்கக்கூடிய ஏதேனும் எதிர்காலத்திய சட்டத்தின் கீழான அத்தகைய தவறுக்கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட இறுதியான அத்தேதியிலிருந்து ; அல்லது

(iii) பகிரங்கக் குழுக்கள் (ஊழற்றடுப்பு) கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அவ்வுட்பிரிவிற்கு நேரொத்ததாகவிருக்கக்கூடிய ஏதேனும் எதிர்காலச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விசாரணை ஆணைக்குழுவொன்றினுல் அவருக்கெதிராகக் காணப்பட்ட தீர்ப்பு ஒன்று கசற்றில் வெளியிடப்பட்டதிலிருந்து

ஐந்தாண்டுக் காலம் கழியாதிருந்தால் ; அல்லது

(ஊ) (i) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளையின் கீழான சட்ட விரோதமான பழக்கம் ஒன்றுக்கு அல்லது சொல்லப்பட்ட சட்டவிரோதமான பழக்கத்தோடு நேரொத்ததாகவிருக்கக்கூடிய தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் தேர்தலோடு அக்காலத்துச் சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழான தவறுக்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினுல் அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட இறுதியான அத்தேதியிலிருந்து ; அல்லது

(ii) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப்பேரவைக் கட்டளையின் கீழான அல்லது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் தேர்தல் தொடர்பில் அக்காலத்துள்ள ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் சட்டவிரோதமான பழக்கத்துக்கு அவரைப் குற்றவாளியாகக் காணும் தேர்தல் நீதிபதியினுற் செய்யப்பட்ட அறிக்கையின் தேதிகளுள் அரசியலமைப்புத் கொடங்கும் தேதிக்குப் பின்னராகவுள்ள தேதியான இறுதியான அத்தேதியிலிருந்து,

மூன்றுண்டு காலம் கழியாதிருந்தால்,

தேசிய அரசுப்பேரவைக்கான உறுப்பினர் தேர்தலில் அவர் தேருநராகவிருத்தற்குத் தகுதியுடையவராதல் ஆகாது.

தேசிய அரசுப் பேரவை உறுப் பாண்மைக்கான தகுதி.

**69.** தேருநராதற்குத் தகுதியுடையவரான ஆள் ஒவ்வொருவரும், 70 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவர் தகுதியற்றவராயிருந்தாலொழிய, தேசிய அரசுப் பேரவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

70. (1) ஆள் எவரேனும்—

தேசிய அரசுப் பேரவை உறுப் பாண்மைக்கான தகுதியின்மை.

(அ) அவர் 68 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள தகுதியீனங் களுள் எதற்கேனும் ஆட்பட்டவரானல் ; அல்லது

(ஆ) அவர்—

(i) பொதுத் தேர்தல் ஒன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களுக்கான தேர்தல் அபேட்சக ராக பெயர் குறிக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(ii) தேர்தல் மாவட்டமொன்றுக்கான தேர்தல் அபேட் சகராகப் பெயர் குறிக்கப்பட்டு அத்தேர்தல் மாவட் டத்துக்கான தேர்தல் முடிவுறு முன்னர் ஏதே னும் வேறு தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்தல் அபேட்சகராகப் பெயர் குறிக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(iii) தேசிய அரசுப்பேரவை உறுப்பினராயிருந்துகொண்டு எதுவேனும் தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்தல் அபேட்சகராகப் பெயர் குறிக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(இ) அவர்—

(i) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதியாக அல்லது வேறு அரச அலுவலராக இருந்தால் ; அல்லது

(ii) தேசிய அரசுப்பேரவையின் செயலாளராக அல் லது அவரின் பணியாட்குழு உறுப்பினர் ஒருவராக இருந்தால் ; அல்லது

(iii) தேர்தல்கள் ஆணையாளராயிருந்தால் ; அல்லது

(iv) கணக்காய்வாளர் தலைமையதிபதியாயிருந்தால் ; அல்லது

(v) அப்பதவியின் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக் கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபா வுக்குக் குறையாத சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்ட ஏதேனும் பதவியை வகிக்கும் அரச அலுவலர் ஒருவராயிருந்தால் ; அல்லது

(vi) அப்பதவியின் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக் கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவுக்குக் குறையாத சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்கக் கூட்டுத் தாபன அலுவலராயிருந்தால் ; அல்லது

(vii) நிலையான தரைப்படை, நிலையான கடற்படை அல்லது நிலையான வான்படை உறுப்பினர் ஒரு வராயிருந்தால் ; அல்லது

(viii) பொலிசுலுவலர் ஒருவராக அல்லது பொலிசுப் பணிகளைப்புரியும் அரச அலுவலர் ஒருவராயிருந்தால்; அல்லது

(ஈ) அவர், தேசிய அரசுப்பேரவையின் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய, அரசினுல் அல்லது அதன் சார்பில் அல்லது பகிரங்க கூட்டுத் தாபனத்தினுல் அல்லது அதன் சார்பில் செய்து கொள்ளப்பட்ட, அத்தகைய ஒப்பந்தத்தில் அத்தகைய எதுவேனும் அக்கறையுடையவராயிருந்தால் ; அல்லது

(உ) அவர் வங்குரோத்தானவர் அல்லது கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டவராயிருந்து அந்நிலையிலிருந்து விடுவிக்கப்படாதவராயிருந்தால் ; அல்லது

(ஊ) அவர் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினராகவுள்ள அவரின் "சிந்தனையாற்றலை"ப் பாதிக்கும் நோக்கத்துடன் வழங்கப்பட்ட கைலஞ்சத்தை அல்லது அவாநிறைவை ஏற்றுள்ளார் எனத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினுல், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் அல்லது தேசிய அரசுப் பேரவையின் அங்கீகாரத்தோடு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினுல் அல்லது தேசிய அரசுப் பேரவையின் குழுவொன்றினுல், நேர் முன்சென்ற ஏழாண்டுகளுள் அவர் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்,

அவர் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது தேசிய அரசுப் பேரவையில் அமர்ந்திருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகுதியுடையவராதலாகார்.

(2) அரசியலமைப்பின் நோக்கங்களுக்கென "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது நன்கொடை, கடன் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினுல் முழுவதாக அல்லது பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட மூலதனம் கொண்டு, கம்பனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு எதுவேனும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட எதுவேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப்பொருள்படும்.

(3) ஏதேனும் தொழிற்சங்கத்தினுல் அல்லது வேறு தாபனத்தினுல் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் ஒருவர்க்கு தனியே அவரின் சீவியத்துக்கெனக் கொடுக்கப்பட்ட ஏதேனும் படியை அல்லது கொடுப்பனவை அவர் ஏற்றல், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கெனக் கைலஞ்சம் அல்லது அவாநிறைவை ஏற்றலாகக் கொள்ளப்படலாகாது.

தகுதியற்றவராயுள்ளபோது தேசிய அரசுப் பேரவையில் அமர்ந்திருப்பதற்கும் வாக்களிப்பதற்குமான தண்டம்.

71. (அ) தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவராயும் ஆனுல் அத்தகைய தேர்தல் நேரத்தில் அவ்விதம் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுள்ளவராயிராதவராயுமிருந்து தேசிய அரசுப் பேரவையில் அமர்ந்திருக்கின்ற அல்லது வாக்களிக்கின்ற ஆள் எவரேனும் ; அல்லது

(ஆ) அவ்விதம் தாம் தகுதியற்றவராகிவிட்டார் அல்லது விடயத்துக்கேற்பத் தமது ஆசனம் வெற்ருனதாகிவிட்டது என்பதனை அறிந்து கொண்டு அல்லது அறிவதற்கு நியாயமான ஏதுக்கள் உடையவராயிருந்து கொண்டு தேசிய அரசுப்பேரவையின்கண் அவரது ஆசனம் வெற்ருனதாகி விட்டபின்னர் அல்லது அதன் கண் அமர்ந்திருக்க அல்லது வாக்களிக்கத் தகுதியற்றவராகிவிட்டபின்னர் தேசியசபையில் அமர்ந்திருக்கின்ற அல்லது வாக்களிக்கின்ற ஆள் எவரேனும்,

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியினுல் தொடரப்படும் வழக்கொன்றின் மூலம் குடியரசுக்குள்ள கடனென்றுபோல அறவிடப்படக்கூடியதும், அவரவ்விதம் அமர்ந்திருந்து வாக்களிக்கும் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபா வீதமானதுமான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

### தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் தேர்தல்

**72.** தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்க்கான, தேர்தல், சுதந்திரமானதாகவும் இரகசிய வாக்குச் சீட்டின் மூலமாகவும் நடைபெறல் வேண்டும்.

தேர்தல் சுதந்திரமானதும் இரகசியமானதுமாதல்.

**73.** இவ் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தேசிய அரசுப் பேரவை—

தேர்தல்கள் சம்பந்தமாகத் தேசிய அரசுப்பேரவைக்குள்ள தத்துவங்கள்.

(அ) தேருநர்களைப் பதிவு செய்தல்;

(ஆ) தேருநர் நிரல்களைத் தயாரித்தலும் மீள நோக்குதலும்;

(இ) தேசிய அரசுப்பேரவை உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கை முறை ;

(ஈ) தேர்தல்கள் சம்பந்தமான தவறுகளையும் அவற்றுக்கான தண்டனைகளையும் விதித்துக் கூறல்;

(உ) தேர்தல்களைச் செல்லாதனவாக்கற்கான ஏதுக்கள்; அத்துடன்

(ஊ) தேசிய அரசுப்பேரவைக்கு உறுப்பினரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான அல்லது அதன் இடைநேர்வினைவான அத்தகைய வேறு விடயங்கள்;

ஆகிய தொடர்பில் சட்டத்தினுல் ஏற்பாடு செய்யலாம் :

ஆயின், எவ்வாருயினும், இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் சட்டம் 70 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட தகுதியீனங்களுக்குக் கூடுதலான எதனையும் சேர்த்தலாகாது.

**74.** அரசு அலுவலர் ஒருவர் எதேனும் தேர்தலுககு அபேட்சகராக இருக்கும் பொழுது அவர் அபேட்சகராக நியமனம் பெற்ற தேதியிலிருந்து தேர்தல் முடியும் வரை அவர் விடுமுறையிற் சென்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய அலுவலர் இக்காலத்தின்போது அவரது பதவியின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தலாகாது, புரிதலாகாது அல்லது நிறைவேற்றுதலாகாது.

தேர்தல் காலத்தின் போது அரசு அலுவலர் பணி புரியலாகாது.

தேர்தல் தொடர்பாக இப்போதுள்ள சட்டங்கள் தொடர்ந்திருத்தல்.

**75.** **73** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்காகத் தேசிய அரசுப்பேரவை சட்டத்தினுல் ஏற்பாடு செய்யும்வரை, பாராளுமன்றத்துக்கு உறுப்பினரைத் தெரிவு செய்தல், பிணக்கேற்பட்ட தேர்தல்களை விளங்கித் தீர்த்தல் என்பன தொடர்பாக அல்லது சம்பந்தமாக அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் வலுவுடையனவாயிருந்துவந்த அத்தகைய சட்டங்கள், இவ் அத்தியாயத்திலடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் ஏற்ற மாற்றங்களுடனும், சொல்லப்பட்ட விடயங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## தேர்தல் மாவட்டங்களை வரையறுத்தல்

தேர்தல் மாவட்டங்களை வரையறுத்தல்.

**76.** **77** முதல் **81** வரை (இரண்டுமுட்பட) உள்ள பிரிவுகளின் ஏற்பாடுகள் தேர்தல் மாவட்டங்களை வரையறை செய்தல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக் குழுவைத் தாபித்தல்.

**77.** (1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் முற்றுக்கப்பட்ட முதல் பொதுச் சனத்தொகைக்கணிப்பு முதலாக அடுத்து வரும் ஒவ்வொரு பொதுசனத் தொகைக்கணிப்பும் முற்றுனதிலிருந்து ஓர் ஆண்டுக்குள், சனுதிபதி, தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு ஒன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ்த் தாபிக்கப்படும் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு ஒவ்வொன்றும் சனுதிபதியால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும். சனுதிபதி அரசியலில் நெருங்கிய ஈடுபாடு இல்லாதவரென அவர் திருப்தியடைந்துள்ள ஆட்களையே தெரிவு செய்தல் வேண்டும். சனுதிபதி அத்தகைய ஆட்களுள் ஒருவரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு ஒன்றின் உறுப்பினர் எவரேனும் இறந்தால் அல்லது விலகினுல் அல்லது அத்தகைய உறுப்பினராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்தகைய உறுப்பினர் எவரேனும் ஆற்றலற்றவராகிவிட்டார் என சனுதிபதி திருப்திப்பட்டால், சனுதிபதி இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினிடத்தில் வேறெருவரை நியமித்தல் வேண்டும்.

தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக் குழுவின் கடமைகள்.

**78.** (1) **77** ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேர்தல் மாவட்டவரையறை ஆணைக்குழு ஒவ்வொன்றும் இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்தையும் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிச்சயிக்கப்படும் பல்வேறு தேர்தல் மாவட்டங்களாகப் பகுத்தல் வேண்டும் என்பதோடு அவற்றிற்கான பெயர்களைக் குறித்தலும் வேண்டும்.

(2) இறுதியாக நடந்தேறிய பொதுசனத் தொகை கணிப்பிற்கிணங்க அக்காலத்து மாகாணத்தில் வதியும் ஆட்களின் மொத்தத்தொகை **75,000** க்கு கிட்டியதாக நிச்சயிக்கப்படல் வேண்டும். இத்தொகையில் ஒவ்வொரு **75,000** தொடர்பிலும்

ஒரு தேர்தல் மாவட்டமாக தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக் குழு அம்மாகாணத்திற்குத் தேர்தல் மாவட்டங்களை ஒதுக்குதல் வேண்டும் ; அத்துடன் (அம்மாகாணத்திலுள்ள சதுரமைல்களின் தொகையின் அடிப்படையில் 1,000 க்கு மிகக் கிட்டிய அளவில் கணிக்கப்படும் ஒவ்வொரு 1,000 சதுர மைல் பரப்புக்கும் ஒரு மேலதிகத் தேர்தல் மாவட்ட விகிதத்தில்) பின்வருமாறு மேல திகத் தொகையான தேர்தல் மாவட்டங்களையும் சேர்த்தளித்தல் வேண்டும் :—

| | |
|---|---|
| மேற்கு மாகாணம் | 1 |
| மத்திய மாகாணம் | 2 |
| தென் மாகாணம் | 2 |
| வடக்கு மாகாணம் | 4 |
| கீழ் மாகாணம் | 4 |
| வடமேல் மாகாணம் | 3 |
| வடமத்திய மாகாணம் | 4 |
| ஊவா மாகாணம் | 3 |
| சப்ரகமுவா மாகாணம் | 2 |

(3) இப்பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களுக்கு அமைய மாகாணம் ஒன்றின் தேர்தல் மாவட்டம் ஒவ் வொன்றும் இயலக்கூடிய அண்ணளவாகச் சமதொகையான இலங்கைப் பிரசைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயினும், மாகாணம் ஒன்றைத் தேர்தல் மாவட்டங்களாகப் பகுப்பதில் தேர்தல் மாவட்டவரையறை ஆணைக்குழு ஒவ்வொன்றும் அம் மாகாணத்தில் உள்ள போக்குவரத்து வசதிகளையும், அதன் புவியியல் அமைப்பினையும் அங்கு வாழுநரின் அக்கறை, ஒற்றுமை, வேற்றுமைகளையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(4) இன, சமய அடிப்படையில் அல்லது வேறுவகையில் அக்கறை ஒற்றுமையினால் ஐக்கியப்பட்டுள்ள, ஆனால் அப்பிர தேசத்தில் வாழுநரில் பெரும்பான்மையிலிருந்து இவ்வம்சங்களுள் ஒன்றில் அல்லது அதற்கு மேலானவற்றில் வேறுபடுபவரான இலங்கைப் பிரசைகள், மாகாணத்தின் ஏதேனும் இடத்தில் குறிப் பிடத்தக்க அளவில் நெருக்கமாக வாழ்கின்றனர் எனத் தேர்தல் மாவட்டவரையறை ஆணைக்குழுவுக்குத் தோற்றுமிடத்து, அவ்வக் கறை பிரதிநிதித்துவம் பெறுதலை இயலுவதாக்குவதற்கு அவசிய மாகக் கூடிய அவ்விதமாக அம்மாகாணத்தைத் தேர்தல் மாவட் டங்களாக அவ்வாணைக்குழு பகுக்கலாம். அவ்விதம் பகுக்கும் பொழுது மாகாணத்தின் பல்வேறு தேர்தல் மாவட்டங்களிலும் வாழும் இலங்கைப் பிரசைகளின் தொகையிலான வேறுபாட்டினை மிகச் சிறியதாகக் குறைக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றி ஆணைக்குழு போதிய கவனம் செலுத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரி வில் உள்ளது எது எவ்விதம் இருப்பினும், ஒரு மாகாணத்தி லுள்ள இலங்கைப் பிரசைகளின் இன அடிப்படையிலான சேர்க் கையானது அம்மாகாணத்திலுள்ள இலங்கைப் பிரசைகளில்

பெரும்பான்மையினரிலிருந்து வேறுபடும் இன அக்கறையால் ஒன்று பட்டுள்ளவர்களான அம்மாகாணத்திலுள்ள இலங்கைப் பிரசைகளின் குறிப்பிடத்தக்க ஏதேனும் மக்கள் தொகையினர் பிரதிநிதித்துவம் பெறல் அவர்களுக்கு இயல்வதாகச் செய்தலை விரும்பப்படத்தக்கதாகச் செய்யும் அத்தகையதாகவிருப்பின், ஆணைக்குழு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினரைத் தெரிந்தனுப்பும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களை ஏதேனும் மாகாணத்தில் தோற்றுவித்தற்குத் தத்துவமுடையதாய் இருத்தல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய ஏதேனும் விடயத்தில் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நிச்சயிக்கப்பட்டவாறு அம் மாகாணத்துக்கான தேர்தல் மாவட்டங்களின் தொகையானது அம்மாகாணத்திற்குத் தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினரின் மொத்தத் தொகை அவ்விதம் நிச்சயிக்கப்பட்ட தேர்தல் மாவட்டங்களின் மொத்தத் தொகைக்கு மேற்படாதவாறு குறைக்கப்படுதல் வேண்டும்.

*தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் முடிபுகள்.*

**79.** ஏதேனும் தேர்தல் மாவட்டவரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர்க்கிடையே அபிப்பிராய வேறுபாடு உண்டாகும் சந்தர்ப்பத்தில் அதன் உறுப்பினரில் பெருபான்மையினரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிபாகக் கொள்ளப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வெவ்வேறு அபிப்பிராயம் உடையவராய் இருப்பின், தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிபாதல் வேண்டும்.

*தேர்தல் மாவட்டங்களை அறிவித்தல்.*

**80.** தேர்தல் மாவட்டவரையறை ஆணைக்குழு ஒவ்வொன்றினதும் தவிசாளர் ஆணைக்குழுவின் முடிவுகளைச் சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். சனாதிபதி ஆணைக்குழுவினால் முடிபு செய்யப்பட்டவாறுள்ள தேர்தல் மாவட்டங்களின் பெயர்களையும் எல்லைகளையும் அத்தகைய மாவட்டம் ஒவ்வொன்றினாலும் தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்கள் தொகையையும் பிரகடனத்தின் மூலம் வெளியிடுதல் வேண்டும். அத்துடன் அக்காலத்து வலுவுள்ளதாய் இருக்கும் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்கள் இவ்வரசியலமைப்பினதும் தேசிய அரசுப்பேரவை உறுப்பினரின் தெரிவு தொடர்பாக அக்காலத்து வலுவுள்ளதாய் இருக்கும் ஏதேனும் சட்டத்தினதும் நோக்கங்களுக்காக இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் ஆதல் வேண்டும்.

*தேர்தல் மாவட்டங்களை மீளப் பகுத்தல்.*

**81.** 78 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப்பட்டதான இலங்கையின் மாகாணங்களைத் தேர்தல் மாவட்டங்களாக மீளப் பகுத்தல் எதுவும், அதன் பயனாகத் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் மொத்தத் தொகையில் ஏற்படும் ஏதேனும் மாற்றமும், அவ்வித மீளப்பகுத்தலின் பின்னர் நிகழும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்க்கான பொதுத்தேர்தலில் நடைமுறைக்கு வருதல் வேண்டும், அதற்கு முற்படவல்ல :

ஆயினும், எவ்வாறேனும், 80 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட பிரகடனம் வெளியிடப்படுவதன் முன்னர்த் தேசிய அரசுப்பேரவை கலைக்கப்பட்டால், அத்தகைய கலைப்பின் விளைவான பொதுத் தேர்தல் அத்தகைய கலைப்பின் நேரத்தில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

### தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் ஆணையாளர்.

**82.** (1) தேர்தல்கள் ஆணையாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவர் நன்னடத்தையுடையவராய் இருக்கும் காலத்தின் போது பதவி வகித்தலும் வேண்டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளரின் சம்பளம் தேசிய அரசுப் பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமெனபதோடு திரட்டு நிதியில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும். அது அவரின் பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) தேர்தல்கள் ஆணையாளரின் பதவி—

(அ) அவர் இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்து மூலம் அவர் பதவியிலிருந்து விலகுமிடத்து ; அல்லது

(இ) அவர் அறுபது வயதினை அடையுமிடத்து ; அல்லது

(ஈ) உடனலமின்மை அல்லது உடற்பலவீனம் அல்லது உளப் பலவீனம் காரணமாக சனாதிபதியினால் அவர் பதவி யிலிருந்து அகற்றப்படுமிடத்து ; அல்லது

(உ) தேசிய அரசுப் பேரவையின் விண்ணப்பம் ஒன்றின் மீது சனாதிபதியினால் அவர் அகற்றப்படுமிடத்து,

வெற்றானதாதல் வேண்டும்.

(4) தேர்தல்கள் ஆணையாளர் அவரது பதவியின் பணிகளைப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, தேர்தல்கள் ஆணையாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கென ஆள் ஒருவரைச் சனாதிபதி நிய மிக்கலாம்.

(5) விதிவிலக்கான சூழ்நிலைகளில் சனாதிபதி, அறுபது வயதினையடைந்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் ஒருவரைப் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்குத் தொடர்ந்து பதவி வகிக்க அனுமதிக்கலாம்.

தேர்தல்கள் ஆணையாளரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன.

**83.** தேசிய அரசுப் பேரவைக்கான தேர்தல்கள் தொடர்பில் அக்காலத்து வலுவுள்ளனவான சட்டங்களினால் அல்லது எழுத்தி லான வேறு ஏதேனும் சட்டத்தினால் தேர்தல்கள் ஆணையாளர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவர்க்குரித்தாக்கப்பட்டுள்ள, அல் லது வழங்கப்பட்டுள்ள அத்தகைய எல்லாத் தத்துவங்கள், கடமை கள் அல்லது பணிகள் என்பவற்றை தேர்தல்கள் ஆணையாளர் பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும், அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

# அத்தியாயம் 12

## நிதிக் கட்டுப்பாடு

**பகிரங்க நிதிகள் மீது தேசிய அரசுப் பேரவையின் கட்டுப்பாடு.**

**84.** பகிரங்க நிதிகள் மீது தேசிய அரசுப் பேரவை பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டும். தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்படும் சட்டமொன்றின் அதிகாரத்தினால் அல்லது அதன் கீழல்லாமல் ஏதேனும் உள்ளூராட்சிச் சபையினாலேனும் வேறேதேனும் பகிரங்க அதிகாரியினாலேனும் எந்த வரியாவது, விகித வரியாவது, வேறேதேனும் அறவீடாவது விதிக்கப்படலாகாது.

**திரட்டுநிதி.**

**85.** (1) குறித்த நோக்கங்களுக்கெனச் சட்டத்தினால் ஒதுக்கப்படாத குடியரசின் நிதிகள் ஒரு திரட்டு நிதியாக ஆதல் வேண்டும்; எல்லா வரிகள், விதிப்பனவுகள், விகிதவரிகள், தீர்வைகள் என்பவற்றின் வரவுகளும் குறித்த நோக்கங்களுக்கெனக் குறித்தொதுக்கப்படாத குடியரசின் மற்றெல்லா வருமானங்களும் வரவுகளும் இதனுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கடன் மீதான வட்டி, கடன்தீர் நிதிக் கொடுப்பனவுகள், திரட்டு நிதிக்கான பணங்களைச் சேகரித்தல், அதனை முகாமை செய்தல், அதற்கெனப் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றின் விளைவான செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் என்பனவும், தேசிய அரசுப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செலவுகளும், திரட்டுநிதியின் மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

**திரட்டுநிதியிலிருந்து பணத் தொகைகளை மீளப் பெறுதல்.**

**86.** (1) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் வேறு வகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கைப்படச் செய்யப்பட்ட எழுத்தாணையொன்றன் அதிகாரத்தின் கீழன்றி எப்பணத்தொகையேனும் திரட்டு நிதியிலிருந்து மீளப் பெறப்படுதலாகாது.

(2) எந்த நிதியாண்டின்போது பணம் மீளப் பெறப்படவுள்ளதோ பணம் வேறு விதமாகத் திரட்டுநிதியில் சட்டப்படி பொறுப்பாக்கப்படவுள்ளதோ அந்த நிதியாண்டிற்கான குறிப்பிடப்பட்ட பகிரங்க சேவைகளுக்காகத் தேசிய அரசுப் பேரவையின் பிரேரணைத் தீர்மானத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அப்பணத் தொகை கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

(3) அந்நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சட்டமாக நிறைவேற்றப்படு முன்னர் சனாதிபதி தேசிய அரசுப் பேரவையினைக் கலைக்கின்றவிடத்து, தேசிய அரசுப் பேரவை ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, புதிய தேசிய அரசுப் பேரவை கூடுவதற்கழைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கொண்ட ஒரு காலம் முடிவடையும் வரை, பகிரங்க சேவைகளுக்கு அவசிய

மானவை என சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத் தொகைகளைத் திரட்டுநிதியிலிருந்து வழங்குவதற்கும் செலவிடு வதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

(4) சனாதிபதி தேசிய அரசுப் பேரவையைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்கான தேதியை அல்லது தேதிகளை நிர்ணயிக்கின்ற விடத்து, அதற்கெனத் தேசிய அரசுப் பேரவை ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தாலொழிய, அத்தகைய தேர்தலுக்கு அவசிய மானதெனத் தேர்தல்கள் ஆணையாளருடனான ஆலோசனையின் பின்னர் சனாதிபதி கருதக்கூடிய அத்தகைய பணத் தொகை களைத் திரட்டுநிதியிலிருந்து வழங்குவதற்கும் செலவிடுவதற்கும் சனாதிபதி அதிகாரமளிக்கலாம்.

எதிர்பாராச் செலவு நிதி.

**87.** (1) 85 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் எது எப்படியிருப்பி னும், தேசிய அரசுப்பேரவை அவசரமான, எதிர்பாராச் செலவு களுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்திற்காக எதிர்பாராச் செலவு நிதியொன்றைச் சட்டத்தினால் தோற்றுவிக்கலாம்.

(2) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சர் —

(அ) ஏதேனும் அத்தகைய செலவு தேவையாகி உள்ளது எனவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய செலவுக்கு ஏற்பாடெதுவும் இருக்கவில்லை எனவும்,

திருப்திப்பட்டால், அவர், முதலமைச்சரின் சம்மதத்துடன் எதிர் பாராச் செலவு நிதியிலிருந்து முற்பண மூலம் அதற்கு ஏற்பாடு செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(3) அத்தகைய முற்பணம் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட பின் னர் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, அவ்வாறு முற்பணமாக வழங்கப்பட்ட தொகையைத் திரும்ப இடும் நோக்கத்துக்காகக் குறைநிரப்பு மதிப்பீடொன்று தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க வருமானங்களைப் பாதிக்கும் சட்டமூலங்கள்பற்றிய சிறப் பேற்பாடுகள்.

**88.** திரட்டு நிதியை அல்லது குடியரசின் வேறு நிதிகளைக் கையாளுவதற்கு அல்லது அவற்றின் மீது பொறுப்புகளைச் சுமத் துவதற்கு அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் வரியை நீக்குவ தற்கு, கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டமூலம் அல்லது பிரேரணை எதுவும் அமைச்சர் ஒருவராலல் லாமல் அல்லது அத்தகைய சட்டமூலம் அல்லது பிரேரணை அமைச்சரவையினால் அல்லது அமைச்சரவை அதிகாரமளிக்கும் அத்தகைய முறையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, தேசிய அரசுப்பேரவையில் கொண்டுவரப்படலாகாது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி.

**89.** (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு நன்னடத்தையுடையவராயிருக்கும் காலத்தின்போது அவர் பதவி வகித்தலும் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் தேசிய அரசுப்பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு திரட்டு நிதியில் பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும். அது அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவி—

(அ) அவர் இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்துமூலம் அவர் பதவியிலிருந்து விலகுமிடத்து ; அல்லது

(இ) அவர் அறுபது வயதினை அடையுமிடத்து ; அல்லது

(ஈ) உடனலமின்மை காரணமாக, அல்லது உடற் பலவீனம் அல்லது உளப்பலவீனம் காரணமாக சனாதிபதியால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து ; அல்லது

(உ) தேசிய அரசுப்பேரவையின் விண்ணப்பத்தின் மீது அவர் சனாதிபதியினால் அகற்றப்படுமிடத்து,

வெற்றானதாதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி அவரது பதவியின் பணிகளைப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இடத்தில் செயலாற்றுவதற்கென ஆள் ஒருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்.

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளும் பணிகளும்.

**90.** (1) எல்லா அரசாங்கத் திணைக்களங்களினதும் கணக்குகளையும் உள்ளூரதிகார சபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், எழுத்திலான எதுவேனும் சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட எதுவேனும் தொழில் அல்லது வேறு பொறுப்பு முயற்சி என்பவற்றின் கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்தல் வேண்டும். தேசிய அரசுப்பேரவையின் சட்டத்தினால் விதிக்கப்படும் அத்தகைய கடமைகளையும் பணிகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதி புரிதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கடமைகளைப் புரிவதில்,

(அ) எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள், விவரத் திரட்டுகள், ஏனைய ஆவணங்களைப் பெறுவதற்கும் ;

(ஆ) பண்டசாலைகள், ஏனைய ஆதனங்கள் என்பவற்றை அணுகுவதற்கும் ;

(இ) கணக்காய்வின் நோக்கங்களுக்குத் தேவையாகக்கூடிய அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் பெறுவதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இவ் அரசியலமைப்பின் கீழ் தமது பணிகளைப் புரிதல் தொடர்பில் ஆண்டுதோறும் அத்துடன் அவர் அவசியமானதெனக் கருதும் பொழுதும் கணக்காய்வாளர் தலைமையதிபதி தேசிய அரசுப்பேரவைக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

# அத்தியாயம் 13

## நிர்வாக ஆட்சி

### சனாதிபதியும் அமைச்சரவையும்

**91.** அரசியலமைப்பின் கீழும், அவ்வக்காலத்தில், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான சட்டமுட்படவுள்ள வேறு சட்டத்தின் கீழும் சனாதிபதிப் பதவிக்குள்ள தத்துவங்களையும் பணிகளையும் முறைப்படி நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் சனாதிபதியானவர் தேசிய அரசுப்பேரவைக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும். நிர்வாகத் துறை பற்றிச் சனாதிபதிக்குள்ள பொறுப்பு.

**92.** (1) குடியரசின் ஆட்சியை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்புடைய அமைச்சர்கள் அவையொன்றிருத்தல் வேண்டும்; அது தேசிய அரசுப்பேரவைக்குக் கூட்டாகப் பொறுப்புடையதாதல் வேண்டியதுடன் அது பொறுப்புடைய எல்லாவிடயங்கள் தொடர்பிலும் தேசிய அரசுப்பேரவைக்கு விடையளிக்க வேண்டியதுமாகும். அமைச்சரவை.

(2) அமைச்சர்களுள், அமைச்சரவைக்குத் தலைவராகவிருக்க வேண்டியவரான ஒருவர், முதலமைச்சர் ஆதல் வேண்டும். தேசிய அரசுப்பேரவையின் நம்பிக்கையை மிகக்கூடிய அளவில் பெறக்கூடியவராக விருக்கலாம் எனச் சனாதிபதியின் அபிப்பிராயத்தில் தோன்றும் தேசிய அரசுப்பேரவை உறுப்பினரை சனாதிபதி முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்.

**93.** முதலமைச்சர் இறக்குமிடத்து அல்லது அவர் தமது பதவியை விட்டு நீங்குமிடத்துச் சனாதிபதி முதலமைச்சர் ஒருவரை நியமித்தல் வேண்டும். அவரும் பின்வரும் சத்தியத்தை செய்து கொள்வதன் மீது முதலமைச்சராகப் பதவி மேற்கொள்ளுதல் வேண்டும் :— முதலமைச்சர் ஒருவரை நியமிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள்.

"........................................ஆகிய யான், இலங்கைக் குடியரசுக்கு நம்பிக்கையுள்ளவராகவும் உண்மையான விசுவாசம் கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பைப் போற்றி ஒழுகுவேனெனவும், முதலமைச்சர் பதவியின் கடமைகளையும் பணிகளையும் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்க நம்பிக்கைக்குரிய வகையில் புரிவேன் எனவும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்.".

**94.** (1) அமைச்சர்களதும் அமைச்சுகளதும் தொகையினையும் அத்துடன் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய விடயங்களையும் பணிகளையும் முதலமைச்சர் தீர்மானித்தல் வேண்டும். அமைச்சர்களும் அவர்களின் விடயங்கள், பணிகள் என்பனவும்.

(2) அவ்விதம் தீர்மானிக்கப்பட்ட அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவிருக்கவேண்டிய அமைச்சர்களை தேசிய அரசுப்பேரவை உறுப்பினரிடையேயிருந்து, சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(3) எக்காலத்திலாயினும் விடயங்கள், பணிகள் என்பவற்றை ஒதுக்குவதில் முதலமைச்சர் மாற்றங்களைச் செய்யலாம் என்பதுடன் அமைச்சரவையின் கூட்டமைப்பிலான மாற்றங்களைச் சனாதிபதிக்கு விதப்புரை செய்யலாம். அவ்வித மாற்றங்கள் தேசிய அரசுப் பேரவைக்கு விடைகூற அமைச்சரவை தொடர்ந்து பொறுப்புடைய தாயிருத்தலுட்பட அமைச்சரவை தொடர்ந்திருந்து வருதலைப் பாதித்தலாகாது.

*பிரதி அமைச்சர்கள்.*

**95.** (1) அமைச்சர்கள் தமது தேசிய அரசுப்பேரவைக் கடமைகளையும், திணைக்களக் கடமைகளையும் புரிவதில் அவர்களுக்கு உதவிபுரிவதற்கும், எழுத்திலுள்ள சட்டத்தின் கீழ் அமைச்சர்களுக்கிருக்கும் தத்துவங்களிலும் கடமைகளிலும் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பிரதி அமைச்சர்களுக்குக் கையளிக்கப்படும் அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் தேசிய அரசுப்பேரவை உறுப்பினரிடையேயிருந்து சனாதிபதி பிரதியமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரொருவர், கசற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவரின் பிரதியமைச்சருக்குக் கையளிக்கலாம் ; அத்துடன் அத்தத்துவத்தை அல்லது கடமையை அவ் அமைச்சருக்கு வழங்கும் அல்லது சுமத்தும் அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எதுவேனும் இருப்பினும், இந்த உட்பிரிவின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் பிரதியமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

*அமைச்சர்களதும் பிரதியமைச்சர்களதும் பதவிக்காலம்.*

**96.** அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் ஒருவர்—

(அ) சனாதிபதியின் கைப்படவுள்ள எழுத்தொன்றின் மூலம் அகற்றப்பட்டாலொழிய ; அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்படும் அவர் கைப்படவுள்ள எழுத்தொன்றன்மூலம் அவர் தமது பதவியிலிருந்து விலகினால் ஒழிய ; அல்லது

(இ) 97 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தவிர அவர் தேசிய அரசுப்பேரவையினுறுப்பினராதல் ஒழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முற்றிலும் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

*தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில் அமைச்சரவை.*

**97.** தேசிய அரசுப்பேரவை கலைக்கப்படுவதன் நேர்முன்னர் பணியாற்றி வந்த அமைச்சரவை, தேசிய அரசுப்பேரவை கலைக்கப்படுவதற்கும் பொதுத்தேர்தல் முடிவுறுவதற்கும் இடையேயுள்ள காலத்தின் பொழுது தொடர்ந்து பணியாற்றிவருதல் வேண்டும்.

அமைச்சரவையைக் கலைத்தல்.

**98.** (1) முதலமைச்சர் இறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து விலகுமிடத்து, அல்லது முதலமைச்சர் விலகிவிட்டவராகக் கொள்ளப்படுமிடத்து அமைச்சரவை கலைக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏனைய அமைச்சர்கள் தமது பதவிவகியாதொழிதலும் வேண்டும்.

(2) முதலமைச்சர் இறத்தல் அல்லது அவர் பதவியிலிருந்து விலகுதல் 97 ஆம் பிரிவிற்குறிப்பிடப்பட்ட காலத்தினுள் நிகழ்ந்தால், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் செயற்படா ; அத்துடன் அத்தகைய சந்தர்ப்பத்தில், அமைச்சர் அவை எஞ்சியுள்ள அமைச்சர்களை உறுப்பினராகக்கொண்டு தொடர்ந்து பணியாற்றிவருதல் வேண்டும். அத்தகைய அமைச்சர்களுள் ஒருவரைச் சனாதிபதி முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(3) 97 ஆம் பிரிவிற் குறிப்பிட்ட காலத்தினுள் முதலமைச்சர் இறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து விலகுமிடத்து வேறு அமைச்சர் இல்லாவிட்டால், சனாதிபதி, 97 ஆம் பிரிவின் கீழ் பணியாற்றும் அமைச்சரவைக்குள்ள தத்துவங்களையும் பணிகளையும் பொதுத்தேர்தல் முடிவுறும்வரை பிரயோகித்தல் வேண்டும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

முதலமைச்சர் எப்பொழுது விலகிவிட்டதாகக் கொளப்படுதல் வேண்டும்.

**99.** முதலமைச்சரானவர்—

(1) பொதுத் தேர்தல் ஒன்று முடிவடைந்தவுடன் ; அல்லது

(2) வரவு செலவுத்திட்டச் சட்ட மூலத்தைத் தேசிய அரசுப் பேரவை ஏற்கமறுத்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் ஒன்றைத் தேசிய அரசுப்பேரவை நிறைவேற்றினுல் அல்லது தேசிய அரசுப் பேரவையின் முதலமர்வல்லாத தேசிய அரசுப் பேரவையின் வேறு அமர்வின்போது அரசாங்கக் கொள்கை பற்றிய கூற்றினைத் தேசிய அரசுப்பேரவை ஏற்க மறுத்தால், அத்தகைய எச்சந்தர்ப்பத்திலும் முதலமைச்சர், அத்தகைய வரவுசெலவுத்திட்டச் சட்ட மூலம் ஏற்க மறுக்கப்பட்டதிலிருந்து அல்லது அரசாங்கக் கொள்கை பற்றிய கூற்று ஏற்க மறுக்கப்பட்டதிலிருந்து அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுள், தேசிய அரசுப் பேரவையைக் கலைக்கும்படி சனாதிபதிக்கு ஆலோசனையளிக்காவிட்டால், அத்தகைய நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் கழியுமிடத்து

அவரது பதவியிலிருந்து விலகிவிட்டார் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டவராகக் கொள்ளப்படக் கூடிய வேறு சந்தர்ப்பங்கள்.

**100.** (1) தேசிய அரசுப்பேரவை அதன் முதலாவது அமர்வின் போது அரசாங்கத்தின் கொள்கை பற்றிய கூற்றினை நிராகரித்திருக்குமிடத்து, முதலமைச்சர் அவ்வித நிராகரிப்பிலிருந்து 48 மணித்தியாலங்களுள், தேசிய அரசுப் பேரவையைக் கலைக்குமாறு சனாதிபதிக்கு அறிவுரையளித்தால் சனாதிபதியானவர் அத்தகைய அறிவுரையிருப்பினும் கூட தேசிய அரசுப் பேரவையைக் கலைக்காதுவிட முடிவு செய்யலாம் ; அவ்விதம் சனாதிபதி முடிவு செய்தால் முதலமைச்சர் தமது பதவியிலிருந்து விலகிவிட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தேசிய அரசுப்பேரவை அதன் முதலாவது அமர்வின் போது அரசாங்கத்தின் கொள்கை பற்றிய கூற்றினை நிராகரிக்கு மிடத்து, முதலமைச்சர், அவ்வித நிராகரிப்பிலிருந்து 48 மணித் தியாலங்களுள் தேசிய அரசுப் பேரவையைக் கலைக்குமாறு சனாதிபதிக்கு அறிவுரையளிக்காவிட்டால், அவ்வித 48 மணித்தியாலங்கள் கழிந்ததிலிருந்து முதலமைச்சர் தமது பதவியிலிருந்து விலகிவிட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

பதில் அமைச்சரும் பதில் பிரதியமைச் சரும்.

**101.** அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் ஒருவர் தமது பதவியின் பணிகளைப் புரிய முடியாதிருக்கும் பொழுதெல்லாம் அந்த அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் இடத்தில் செயலாற்றுவதற்கெனத் தேசிய அரசுப்பேரவையுறுப்பினர் எவரையும் சனாதிபதி நியமிக்கலாம்.

அமைச்சரவையின் செயலாளர்.

**102.** அமைச்சரவைக்கென செயலாளர் ஒருவரிருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். செயலாளர், முதலமைச்சரின் பணிப்புகளுக்கமைய, அமைச்சரவை அலுவலகத்துக்குப் பொறுப்புடையவராயிருக்க வேண்டியதுடன், முதலமைச்சரால் அல்லது அமைச்சரவையால் அவருக்கு ஒதுக்கப்படக்கூடிய அத்தகைய கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

அமைச்சுக்களுக்கான செயலாளர்கள்.

**103.** (1) ஒவ்வோரமைச்சுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சின் செயலாளர், அவரின் அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரின் அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத்திணைக்களங்கள் அல்லது வேறு நிறுவனங்கள் மீது மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்கென தேசிய அரசுப்பேரவைச் செயலாளரின் அலுவலகம், தேர்தல் ஆணையாளர் திணைக்களம், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களம், அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம் என்பன அரசாங்கத் திணைக்களங்கள் அல்ல எனக் கொள்ளப்படல் வேண்டும்.

(4) அமைச்சின் செயலாளர் எவரையும் சனாதிபதி அரசுச் சேவையிலுள்ள வேறு எப்பதவிக்கும் இடம் மாற்றலாம்.

சத்தியத்தின் மாதிரி.

**104.** இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பதவி எதற்கும் நியமிக்கப்பட்ட ஆள் எவரும் அவரது பதவிக்கென விதிக்கப்பட்ட விசேட சத்தியத்தை அல்லது அவ்வித சத்தியம் விதிக்கப்பட்டிராத விடத்து "ஆ" என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தை அவர் செய்துகொண்டாலன்றி அவரது பதவியின் கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.

## அரச அலுவலர்கள்

**105.** ஓர் "அரச அலுவலர்" என்பது குடியரசின் சேவையாள் ஒருவராக, ஊதியம் தரும் பதவியை வகிக்கும் எவரேனுமாள் என்று பொருளாகும், ஆனால்— *அரச அலுவலா என்பதன் வரைவிலக்கணம்.*

(அ) சனாதிபதியை ;

(ஆ) அமைச்சரொருவரை அல்லது பிரதி அமைச்சர் ஒருவரை ; அத்துடன்

(இ) உறுப்பினரொருவரென்றமுறையில் ஏதேனும் ஊதியத்தை அல்லது படியை அவர் பெறுகின்றார் என்பதன் காரணமாக மட்டும், தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினரொருவரை,

உள்ளடக்காது.

**106.** **(1)** அரச அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றிற்கு அமைச்சரவை பொறுப்புடையதாயிருத்தல் வேண்டுமென்பதோடு அவை பற்றித் தேசிய அரசுப்பேரவைக்குப் பதிலிறுத்தற்குரியதுமாதல் வேண்டும். *அமைச்சரவையின் பொறுப்பு.*

**(2)** அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சரவை எல்லா அரச அலுவலர்களதும் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமான தத்துவம் உடையதாதல் வேண்டும்.

**(3)** அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, அரசசேவைகளின் அமைப்பு, அரச அலுவலர்களைச் சேர்த்தற்றிட்டங்களையும் அவர்களின் நடத்தைக் கைந்நூல்களையும் உருவாக்குதல், அரச அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பற்றிய தத்துவங்களைப் பிரயோகித்தற்கும் கையளித்தற்குமான நடவடிக்கைமுறை என்பன உட்பட அரச அலுவலர்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்களுக்கும் அமைச்சரவை ஏற்பாடு செய்வதோடு அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

**(4)** இவ் அத்தியாயத்திற் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கையளிப்பு எதுவேனும் இருப்பினும்கூட, அமைச்சரவை அரச அலுவலர்களை நியமித்தல், இடம் மாற்றுதல், பதவி நீக்குதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கு அதற்குள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

**(5)** நீதியை நிருவகிக்கும் நிறுவனம் எதுவாயினும் அரச அலுவலரின் நியமனங்கள், இடமாற்றங்கள், வேலை நீக்கங்கள் அல்லது ஒழுக்காற்று விடயங்கள் சம்பந்தமான எதுவேனும் விடயம் தொடர்பிலான அமைச்சரவையின், ஓர் அமைச்சரின், அரசசேவைகள் ஆலோசனைச்சபையின், அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் அல்லது அரச அலுவலர் ஒருவரின் எதுவேனும் விதப்புரை, கட்டளை அல்லது முடிவினைப்பற்றி விசாரணை செய்யவோ அதன் மீது கருத்துரை, தீர்ப்பு வழங்கவோ எவ்வகையிலாயினும் கேள்வியுட்படுத்தவோ தத்துவம் அல்லது நியாயாதிக்கம் உடையதாதலாகாது.

அரச அலுவலர் களின் பதவிக் காலம்.

**107.** (1) அரசியலமைப்பினுல் வேறுவகையாக வெளிப் படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, ஒவ்வோர் அரச அலுவலரும் சனுதிபதி விரும்பும் காலத்தின் போது பதவி வகித் தல் வேண்டும். எனினும், சனுதிபதி விரும்பும் காலத்துக்குப் பதவி வகிக்கும் அரச அலுவலர் ஒருவர் தொடர்பில் தேசிய அரசுப்பேரவை சமுகமாயிருந்து வாக்களிக்கும் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படும் சட்டத்தின் மூலம் வேறுவகையாக ஏற்பாடுசெய்யலாம்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும், தேசிய அரசுப் பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழியவும் அரசி லமைப்புத் தொடங்குவதற்கு நேரேமுன்னர் இருந்து வரும் இலங்கை அரசாங்கத்தின் சேவைகள் ஏற்ற மாற்றங்களுடன் தொடர்ந்திருந்துவருதல் வேண்டுமென்பதோடு 106 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அமைக்கப்பட்ட அரச சேவைகளாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும், தேசிய அரசுப் பேரவை வேறு வகையாக ஏற்பாடு செய்தாலொழியவும், அரசிய லமைப்புத் தொடங்குவதற்கு நேரே முன்னர் வலுவிலிருந்த இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் சேவைகள் தொடர்பிலான விதிகள், ஒழுங்கு விதிகள், நடவடிக்கைமுறைகள் என்பன அரசியலமைப்பின் ஏற் பாடுகளின் கீழ் அவை ஆக்கப்பட்டாற் போன்று அல்லது செய்யப் பட்டாற் போன்று தொடர்ந்து வலுவிலிருந்து வருவனவாகக் கொள் ளப்படுதல் வேண்டும்.

(4) அரச அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றுக்கான தத்து வத்தினைக் கையளித்தல் தொடர்பில் 106 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் வரை, அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர் அத்தகைய தத்துவங்கள் அர சாங்க சேவை ஆணைக்குழுவினுல் எவ் அதிகாரிகளுக்குக் கையளிக்கப் பட்டிருந்தனவோ அவர்கள் அத்தகைய தத்துவங்களைத் தொடர்ந்தும் பிரயோகித்துவரல் வேண்டும்.

சனுதிபதியால் நியமிக்கப்படும் அரச அலுவலர் கள்.

**108.** பின்வரும் அரச அலுவலர்கள் சனுதிபதியினுல் நியமிக் கப்படுதல் வேண்டும் :—

(அ) சனுதிபதியினுல் நியமிக்கப்படவேண்டுமென அரசியலமைப் பினுல் அல்லது எழுத்திலான சட்டமொன்றின் அதி காரத்தினுல் அல்லது அதன் கீழ்த் தேவைப்படுத்தப் படும் அரச அலுவலர்கள் ;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதி ; அத்துடன்,

(இ) தரைப்படை, கடற்படை, வான்படையினதும் பொலிசுப் படையினதும் தலைவர்கள்.

109. (1) இலங்கை அரசாங்கத்தின் சேவையில் இல்லாதொழிந்துள்ள அல்லது இலங்கைக் குடியரசின் சேவைகளில் இல்லாதொழியும் ஆட்களுக்கு அல்லது அத்தகைய ஆட்களின் கைம்பெண்கள், பிள்ளைகள் அல்லது வேறு தங்கிவாழுநருக்குக் கொடுபடவேண்டிய எல்லா ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் அல்லது அவை போன்ற வேறு படிகள், அவை எழுத்திலான எந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டனவோ எழுத்திலான அந்தச் சட்டத்திறல் அல்லது குறைந்த சாதகமாகவிராத எழுத்திலான ஏதேனும் பிந்திய சட்டத்திறல் ஆளப்படுதல் வேண்டும். ஓய்வூதியங்களும் பணிக்கொடைகளும்.

(2) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், அத்தகைய வேறு படிகள் என்பன யாவும் திரட்டு நிதியின்மீது பொறுப்பாதல் வேண்டும்.

110. (1) இவ்வத்தியாயத்தின் இனிமேல் வரும் பிரிவுகளின் ஏற்பாடுகள் — 111–120 ஆம் பிரிவுகளின் ஏற்புடைமை.

(அ) 35 ஆம் பிரிவிலும் 108 ஆம் பிரிவிலும் குறிப்பீடு செய்யப்பட்ட அரச அலுவலர்கள் ;

(ஆ) அவரது பதவியின் பிரதான கடமை அல்லது கடமைகள் நீதிமுறைத் தன்மையனவான பணிகளைப் புரிதலாகவிருக்கும் அரச அலுவலர் ஒவ்வொருவரும் ;

(இ) தரைப்படை, கடற்படை, வான்படையின் உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஈ) சனாதிபதியின் அலுவலகத்தின் அல்லது அவரின் சொந்தப் பணியாட்டொகுதியுறுப்பினர்,

தவிர்ந்த எல்லா அரச அலுவலர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) தேசிய அரசப் பேரவையின் ஏதேனும் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, பதவியொன்று இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குள் அடங்குகின்றதா அல்லவா என்பது பற்றிய ஏதேனும் பிரச்சினை அமைச்சரவையினால் முடிவு செய்யப்படல் வேண்டும். அத்தகைய முடிவு இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும். நீதியை நிருவகிக்கும் நிறுவனமேனும், அவ்வகையாகவே வேறு நிறுவனம், ஆள் அல்லது அதிகாரியேனும் அத்தகைய எதுவேனும் முடிவைப்பற்றி விசாரணை செய்யவோ, அதன்மீது கருத்துரை, தீர்ப்பு வழங்கவோ எவ்வகையிலாயினும் கேள்வியுட்படுத்தவோ தத்துவம் அல்லது நியாயாதிக்கம் உடையதாதலாகாது.

## அரச சேவைகள் ஆலோசனைச் சபை

111. (1) அரசியலமைப்பின் கீழ் அரச சேவைகள் ஆலோசனைச் சபை புரியவேண்டியுள்ள அத்தகைய தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கென அரச சேவைகள் ஆலோசனைச் சபை ஒன்றிருத்தல் வேண்டும். அரசசேவைகள் ஆலோசனைச் சபை.

(2) அரச சேவைகள் ஆலோசனைச் சபை சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினரைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர் தவிசாளர் எனப் பதவிப்பெயர் வழங்கப்படல் வேண்டும்.

(3) ஆள் எவரும்—

(அ) அவர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவராக விருந்தால் ; அல்லது

(ஆ) அவர் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினராக விருந்தால் ; அல்லது

(இ) அவர் அரச அலுவலர் ஒருவராகவிருந்தால்,

அரச சேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுதலாகாது அல்லது உறுப்பினராகத் தொடர்ந்திருந்துவரலாகாது.

(4) அரச சேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அவரின் நியமனத் தேதியிலிருந்து நாலாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) அரச சேவைகள் ஆலோசனைச் சபை உறுப்பினர் ஒருவரின் பதவி—

(அ) அத்தகைய உறுப்பினர் இறக்குமிடத்து ; அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்தொன்றின் மூலம் அத்தகைய உறுப்பினர் தமது பதவியிலிருந்து விலகுமிடத்து ; அல்லது

(இ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து,

வெற்றானதாதல்வேண்டும்.

(6) அரச சேவைகள் ஆலோசனைச் சபை உறுப்பினர் எவரதும் பதவி வெற்றானதாகுமிடத்து, இறந்துபோன அல்லது பதவியிலிருந்து விலகிவிட்ட, அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினராகவிருப்பதற்கெனச் சனாதிபதி வேறொருவரை நியமித்தல் வேண்டும் ; அவ்விதம் நியமிக்கப்படும் ஆள் இறுதியாகச் சொல்லப்பட்ட உறுப்பினரின் கழியாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) அரசசேவைகள் ஆலோசனைச் சபை உறுப்பினர் எவரேனும், ஏதேனும் காரணமாகத் தற்காலிகமாக அவரது பதவியின் கடமைகளைப் புரியவியலாதுபோகுமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கெனச் சனாதிபதி வேறு ஓராளை நியமிக்கலாம்.

(8) அரசசேவைகள் ஆலோசனைச்சபை உறுப்பினர் ஒரு வருக்குத் தேசிய அரசுப்பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஊதியம் கொடுக்கப்படலாம்; அத்துடன் அத்தகைய எவரேனுமுறுப்பினருக்குக் கொடுபடவேண்டிய ஊதியம் திரட்டு நிதியில் பொறுப்பாக்கப்படல்வேண்டும் என்பதுடன் அவரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படலும் ஆகாது.

(9) அமைச்சரவையால் நியமிக்கப்படும், அரசசேவைகள் ஆலோசனைச்சபையின் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

### அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபை

அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபை.

**112.** (1) அரசியலமைப்பின்கீழ் அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை புரியவேண்டியுள்ள அத்தகைய தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கென அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை ஒன்றிருத்தல் வேண்டும்.

(2) அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினரைக் கொண்டதாக விருத்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர் தவிசாளர் எனப் பதவிப்பெயர் வழங்கப்படல் வேண்டும்.

(3) ஆள் எவரும்—

(அ) அவர் தேசிய அரசுப்பேரவையின் உறுப்பினர் ஒருவராக விருந்தால்; அல்லது

(ஆ) அவர் அரசசேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப் பினராகவிருந்தால்; அல்லது

(இ) அவர் அரச அலுவலர் ஒருவராகவிருந்தால், அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் உறுப்பினராக நியமிக்கப் படுதலாகாது அல்லது உறுப்பினராகத் தொடர்ந்திருந்துவரலாகாது.

(4) அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் உறுப்பினர் ஒவ் வொருவரும் இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைய, அவரின் நியமனத் தேதியிலிருந்து நாலாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினர் ஒருவரின் பதவி—

(அ) அத்தகைய உறுப்பினர் இறக்குமிடத்து; அல்லது

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்தொன்றின் மூலம் அத்தகைய உறுப்பினர் தமது பதவியிலிருந்து விலகுமிடத்து; அல்லது

(இ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து,

வெற்றாதல் வேண்டும்.

(6) அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினர் எவரதும் பதவி வெற்றுனதாகுமிடத்து, இறந்துபோன அல்லது பதவியிலிருந்து விலகிவிட்ட, அல்லது பதவியிலிருந்து அகற்றப் பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினராகவிருப்பதற்கெனச் சனாதிபதி வேறொருவரை நியமித்தல் வேண்டும். அவ்விதம் நியமிக்கப்படும் ஆள் இறுதியாகச் சொல்லப்பட்ட உறுப்பினரின் கழியாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினர் எவரேனும், ஏதேனும் காரணமாகத் தற்காலிகமாக அவரது பதவியின் கடமைகளைப் புரியவியலாது போகுமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கெனச் சனாதிபதி வேறு ஓராளை நியமிக்கலாம்.

(8) அரசசேவைகள் ஒழுக்காற்று சபை உறுப்பினர் ஒரு வருக்குத் தேசிய அரசுப்பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஊதியம் கொடுக்கப்படலாம்; அத்துடன் அத்தகைய எவரேனுமுறுப்பினருக்குக் கொடுபடவேண்டிய ஊதியம் திரட்டு நிதியில் பொறுப்பாக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படலும் ஆகாது.

(9) அமைச்சரவையால் நியமிக்கப்படும் அரசசேவைகள் ஒழுக் காற்றுச் சபையின் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

### அரச அலுவலர் நியமனம்

திணைக்களத் தலைவர்கள் நியமனங்களும் விதிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்களும்.

**113.** (1) அரசியலமைப்பு வேறுவிதமாக ஏற்பாடு செய்துள்ள இடங்களில் தவிர, திணைக்களத் தலைவர் பதவிகளுக்கும் அமைச் சரவையால் விதிக்கப்படக்கூடிய வேறு பதவிகளுக்கும் ஆன நியமனங்கள் அப்பதவிகள் எவ்வமைச்சை அல்லது திணைக்களத் தைச் சேர்ந்தனவோ அந்த அமைச்சுக்கு அல்லது திணைக்களத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையைப் பெற்ற பின்னரே அமைச்சரவையாற் செய்யப்படல் வேண்டும். அத்தகைய விதப்புரை எதுவும், அரசசேவைகள் ஆலோசனைச்சபையைக் கலந் தாலோசித்த பின்னரன்றி அமைச்சர் எவராலும் செய்யப்பட லாகாது.

(2) அத்தகைய நியமனங்களுக்கான விதப்புரை, வேறோர் அமைச்சில் அல்லது திணைக்களத்தில் சேவையிலுள்ள அரச அலுவலர்களிடையிலிருந்து செய்யப்படுவதற்காயின், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அமைச்சரின் விதப்புரை அந்த மற்ற அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னரே செய்யப் படல் வேண்டும்.

ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள்.

**114.** நூற்றிப்பதின்மூன்றும் பிரிவில் அடங்காதனவும் இப்பிரிவின் கீழ் அமைச்சரவையினால் விதிக்கப்படக்கூடியன வுமான பதவிகளுக்கான நியமனங்கள், அப்பதவிகள் எந்த அமைச்சை அல்லது திணைக்களத்தைச் சேர்ந்தனவோ, அந்த அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரூடாக அரசசேவைகள் ஆலோசனைச்சபையின் விதப் புரையைப் பெற்றபின்னர் மட்டுமே அமைச்சரவையால் செய்யப் படலாம்.

**115.** (1) முதலமைச்சரால் விடயங்களும் பணிகளும் ஒதுக்கப் பட்டிருப்பதற்கிணங்கவும், அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், அமைச்சரவை, 113, 114 ஆகிய பிரிவுகளிற் குறிப்பிடப்பட்ட நியமனங்களைச் செய்வதற்கான தத்துவங்களைத் தவிர, 106 ஆம் பிரிவின் கீழ் நியமனஞ் செய்வதற்கு அதற்குள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எவரேனும் அமைச்சருக்குக் கையளிக்க லாம். நியமனஞ் செய்யும் தத்துவங்களைக் கையளித்தல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குக் கையளிக் கப்பட்ட நியமனங்கள் செய்யும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் அமைச்சர் ஒருவர், அரசசேவைகள் ஆலோசனைச்சபையின் விதப் புரையைப் பெற்றபின்னர் மட்டும் அவ்விதம் செய்தல்வேண்டும் என்பதுடன், நியமிக்கப்படவுள்ள ஆள், வேறோர் அமைச்சில் அல்லது திணைக்களத்திலுள்ள அரச அலுவலர் ஒருவராயிருந் தால், அந்த மற்ற அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர்மட்டுமே அவ்விதம் செய்தல் வேண்டும்.

**116.** அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், ஓரமைச்சர், 115 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய அமைச்சருக் குக் கையளிக்கப்பட்டுள்ள நியமனஞ் செய்யும் தத்துவங்களுள் எதனையும், விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய எவரேனும் அரச அலுவலருக்குக் கையளிக்கலாம். அவ்விதக் கையளிப்பு எதுவேனும் இருப்பினும்கூட, அவ்விதம் அரச அலு வலர் ஒருவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் விடயம் தொடர் பில் அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் செயலாற்ற அவ் அமைச்சர் உரிமையுடையவராதல் வேண்டும். அரச அலுவலர்களாற் செய்யப்படும் நியமனங்கள்.

**அரச அலுவலர்களை வேலைநீக்கம் செய்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும்**

**117.** அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபையிடமிருந்து விதப் புரையொன்றை, ஓர் அரச அலுவலர் எந்த அமைச்சை அல்லது திணைக்களத்தைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அதற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சருடாகப் பெற்றபின்னர் மட்டுமே அரச அலு வலரை வேலை நீக்கஞ் செய்வதற்கும் அவரின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான அதன் தத்துவங்களை அமைச்சரவை பிர யோகித்தல் வேண்டும். அரச அலுவலர்களுக் கெதிரான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.

**118.** (1) முதலமைச்சரால் விடயங்களும் பணிகளும் ஒதுக்கப் பட்டிருப்பதற்கிணங்கவும், அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் அமைச்சரவை அரச அலுவலர்களை வேலை நீக்கஞ் செய்வதற்கும் அவர்களின் ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான அதன் தத்துவத்தை அமைச்சர் ஒருவருக்குக் கையளிக்கலாம். ஒழுக்காற்றுத் தத்துவங்களை அமைச்சருக்குக் கையளித்தல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குக் கைய ளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை, அமைச்சர் ஒருவர் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபையிடமிருந்து விதப்புரையொன்றைப் பெற்ற பின்னரே பிரயோகித்தல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழான

அவரின் தத்துவங்களைப் பிரயோகித்து அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளை, அது வேலைநீக்கஞ் செய்வதற்கானதாயிருந்தால் தவிர, இறுதியானதாதல் வேண்டும். அக்கட்டளை வேலைநீக்கஞ் செய்வதற்கானதாயிருந்து, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்க அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படவில்லையாயின் அத்தகைய வேலைநீக்கக் கட்டளை இறுதியானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான வேலைநீக்கக் கட்டளை ஒன்றினல் இடருறும் அரச அலுவலர் ஒருவர், அமைச்சரவையால் தீர்மானிக்கப்படும் நடவடிக்கை முறைக்கமைய அமைச்சரவைக்கு அவ்வேலைநீக்கக் கட்டளைக்கெதிராக ஒரே ஒரு மேன்முறையீடு செய்யும் உரிமையுடையராதல் வேண்டும். அமைச்சரவை அத்தகைய வேலைநீக்கக் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது எவ்வகையிலேனும் வேறுபடுத்தும் தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

அரச அலுவலர்க்கு ஒழுக்காற்றுத் தத்துவங்களைக் கையளித்தல்.

**119.** (1) அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், ஓரமைச்சர், 118 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகையை அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள வேலை நீக்கஞ் செய்வதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தத்துவங்களுள் எதனையும் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய எவரேனும் அரச அலுவலர்க்குக் கையளிக்கலாம். அத்தகைய கையளிப்பு எதுவேனும் இருந்தபோதும், அரச அலுவலர் ஒருவருக்கு அவ்விதம் கையளிக்கப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், அவ் அலுவலர் செயலாற்ற உரித்துடையராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த உட்பிரிவின் கீழ்க் கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ்ச் செய்யப்பட்ட வேலை நீக்கக் கட்டளையுட்படவுள்ள ஒழுக்காற்று விடயம் தொடர்பான கட்டளை ஒன்றினல் இடருறும் அரச அலுவலர், அமைச்சரவையால் தீர்மானிக்கப்படும் நடவடிக்கை முறைக்கமைய, அத்தகைய கட்டளைக் கெதிராக அரசசேவைகள் ஒழுக்காற்றுச் சபைக்கு ஒரேயொரு மேன்முறையீடு செய்யும் உரிமையுடையராதல் வேண்டும். அத்தகைய மேன்முறையீட்டில், அது வேலைநீக்கத்துக்கானதாகவிருந்தால் தவிர அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபையிடும் கட்டளை இறுதியானதாதல் வேண்டும்.

அக்கட்டளை வேலைநீக்கஞ் செய்வதற்கானதாயிருந்து, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்க மேன்முறையீடு செய்யப்படாவிட்டால், அத்தகைய வேலைநீக்கக் கட்டளை இறுதியானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான, அரச சேவைகள் ஒழுக்காற்றுச்சபையின் வேலைநீக்கக் கட்டளையால் இடருறும் அரச அலுவலர் அமைச்சரவையால் தீர்மானிக்கப்படும் நடவடிக்கை முறைக்கமைய இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அமைச்சருக்கு ஒரேயொரு மேன்முறையீடு செய்யும் உரிமையுடையவராதல் வேண்டும். அவ் அமைச்சர் அத்தகைய வேலைநீக்கக் கட்டளையை வேறுபடுத்தும் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

### அரச அலுவலர்களை இடம்மாற்றுதல்

**120.** (1) அமைச்சரவையால் விதிக்கப்படும் நடவடிக்கைமுறைக் கிணங்க, அரச அலுவலர்களை இடம்மாற்றுவதற்கு அதற்குள்ள தத்துவங்களை அமைச்சரவை பிரயோகித்தல் வேண்டும். அரச அலுவலர்களை இடம்மாற்றுதல்.

(2) அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அமைச்சரவை இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் அமைச்சர் ஒருவருக்குக் கையளிக்கலாம்.

(3) அமைச்சர் ஒருவர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுள் எதனையும் எவரேனும் அரச அலுவலர்க்குக் கையளிக்கலாம். அத்தகைய எதுவேனும் கையளிப்பு இருப்பினும்கூட, அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், அரச அலுவலர்க்கு அவ்விதம் கையளிக்கப்பட்ட எதுவேனும் விடயம் தொடர்பில் அவ் அமைச்சர் செயலாற்றலாம்.

(4) " இடம்மாற்றம் " என்பது இப்பிரிவின் நோக்கங்களுக்கென அதே அமைச்சில் அல்லது திணைக்களத்தில் அதே சேவையிலுள்ள அல்லது அதே தரத்திலுள்ள ஒரு பதவியிலிருந்து வேறொரு பதவிக்கு, சம்பளத்தில் மாற்றமின்றி அரச அலுவலர் ஒருவரை இடம்பெயர்த்தல் எனப் பொருள்படுதல் வேண்டும்.

# அத்தியாயம் 14

## நீதி நிருவாகம்

### நீதிமன்றங்களை உருவாக்கல்

தேசிய அரசுப் பேரவை நீதிமன்றங்களை உருவாக்கல்.

**121.** (1) நீதிநிருவாகத்துக்கெனவும், கைத்தொழில் பிணக்குகளையும் ஏனைய பிணக்குகளையும் விளங்கித் தீர்ப்பதற்கெனவும் அவற்றில் இணக்கம் ஏற்படுத்துவதற்கெனவும், உள்ள நிறுவனங்களையும் நீதிமுறையான அல்லது நீதிமருவிய தன்மையான முடிவுகளைச் செய்வதற்கெனத் தத்துவம் உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய சட்டத்தின் மூலம் தேசிய அரசுப்பேரவை உருவாக்கித் தாபிக்கலாம்.

(2) தேசிய அரசுப்பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க மேல்முறையீட்டு நீதிமன்றச் சட்டத்தினாலும் குற்ற வழக்கு மேல் முறையீட்டு நீதிமன்றக் கட்டளைச்சட்டத்தினாலும், நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தினாலும், கிராம நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தினாலும், தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கென இப்போதுள்ள எழுத்திலான சட்டங்களினால் உருவாக்கித் தாபிக்கப்பட்ட ஏனைய எல்லா நீதிமன்றங்கள், நிறுவனங்கள் என்பனவும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையத் தொடர்ந்து பணியாற்றி வருதல் வேண்டும். அத்தகைய நீதிமன்றங்களும் நிறுவனங்களும் ஏற்ற மாற்றங்களுடன், இவ்வரசியலமைப்பின் கீழ் அவற்றின் நியாயாதிக்கத்தையும் தத்துவங்களையும் பெறுவனவாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) நீதியை நிருவகிப்பதற்கென சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, முதனிலை நியாயாதிக்கம்கொண்ட மிகவுயர்ந்த நீதிமன்றத்தின் தத்துவங்களானவை, இப்போதுள்ள சட்டங்களினால் அல்லது தேசிய அரசுப் பேரவையினால் ஆக்கப்படும் சட்டங்களினால் வெளிப்படையாக விலக்கப்பட்டுள்ள காரியங்களில் தவிர, இப்போதுள்ள சட்டத்தின் கீழ் உயர்நீதிமன்றம் வழங்கத் தத்துவம் உள்ள அத்தகைய எழுத்தாணை வகையிலான விதிப்பாணைகளை வழங்குவதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும். தேசிய அரசுப்பேரவை சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் பெரும்பான்மையோடு அத்தகைய சட்டங்களை யாக்கத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(4) தேசிய அரசுப்பேரவை வேறுவிதமாக ஏற்பாடு செய்தாலொழிய, இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், அரசிலயமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்களினதும், நிறுவனங்களினதும் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

### மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும், உயர்நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்

**122.** (1) மேல்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்பவற்றின் நீதிபதிகளும், அந்நீதிமன்றங்களினுல் பிரயோகிக்கப்படுவனவும் புரியப்படுவனவுமான தத்துவங்கள், பணிகள் என்பவற்றுக்கு நேரொத்த அல்லது பெருமளவில் அவை போன்ற தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கெனவும் புரிவதற்கெனவும் தேசிய அரசுப்பேரவையினுல் உருவாக்கப் படக்கூடிய நீதிமன்றங்களின் நீதிபதிகளும் சனுதிபதியினுல் நியமிக்கப்படல் வேண்டும்.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உயர் நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்.

(2) அத்தகைய நீதிபதி ஒவ்வொருவரும் அவர் நல்நடத்தையுடையவராய் இருக்கும் காலத்தின்போது பதவி வகித்தல் வேண்டும். அத்துடன் அவர் தேசிய அரசுப்பேரவையின் வேண்டுகோளின்மீது சனுதிபதி அகற்றினுலே தவிரப் பதவியிலிருந்து அகற்றப்படலாகார்.

(3) தேசிய அரசுப்பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரின் பதவிக் காலம் 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க மேல்முறையீட்டு நீதிமன்றச் சட்டத்திஞல் ஏற்பாடு செய்யப்பட்டவாறுதல் வேண்டும் என்பதோடு உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒய்வுபெறும் வயது அறுபத்திமூன்றுதல் வேண்டும்.

(4) அத்தகைய நீதிபதிகளின் சம்பளங்கள் தேசிய அரசுப்பேரவையினுல் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அவை திரட்டு நிதியிற் பொறுப்பாக்கப்படலும் வேண்டும்.

(5) அத்தகைய நீதிபதி எவருக்கேனும் கொடுபடுதற்குரிய சம்பளம் அல்லது அவர் ஒய்வுபெறுவதற்குள்ள வயது அவரின் பதவிக்காலத்தின் பொழுது குறைக்கப்படுதலாகாது.

**123.** நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழான பருவ நீதிமன்ற ஆணையாளர்கள் அல்லது பருவ நீதிமன்ற ஆணையாளர்களால் பிரயோகிக்கப்படும் அல்லது புரியப்படும் தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் நேரொத்த அல்லது பெருமளவில் அவற்றைப்போன்ற தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கென அல்லது புரிவதற்கெனத் தேசிய அரசுப்பேரவையினுல் சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யும் அத்தகைய ஆட்கள், சனுதிபதியினுல் நியமிக்கப்படல்வேண்டும்.

பருவ நீதிமன்ற ஆணையாளர்கள்.

### நீதிபதிகளதும் நீதிநிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம்

**124.** (1) 122 ஆம் பிரிவிலும் 123 ஆம் பிரிவிலும் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத்தவிர—

(அ) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளினதும், கிராம நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தலைவர்களதும் 121 ஆம் பிரிவின் கீழ்த் தேசிய அரசுப்பேரவையினுல் உருவாக்கித் தாபிக்கப்படக்கூடிய நீதிமன்றங்களின் நீதிபதிகளதும் ;

நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம், இடமாற்றம், வேலை நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன.

(ஆ) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழான தொழில் நியாயசபையாகப் பணியாற்றும் அரச அலுவலர்களதும், அத்தகைய தொழில் நியாய சபையினுல் பிரயோகிக்கவும் புரியவும்படும் தத்துவங்களையும் பணிகளையும் புரிவதற் கென சட்டத்தின் மூலம் தேசிய அரசுப்பேரவை தத்துவ மளிக்கும் அத்தகைய ஆட்களினதும்,

(இ) அவர்களின் பிரதான கடமை அல்லது கடமைகள் நீதிநெறி யியல்பான பணிகளைப் புரிவதாகவுள்ள எல்லா அரச அலு வலர்களினதும்,

நியமனம், இடமாற்றம், வேலைநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன இவ்வத்தியாயத்தின் பின்வரும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கிணங்கச் செய்யப்படல் வேண்டும் அல்லது பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(2) இவ் அத்தியாயத்தின் பின்வரும் பிரிவுகளின் ஏற்பாடுகள், முசுலிம் திருமண, மணநீக்கச் சட்டத்தின் கீழ் அல்லது முசுலிம் திருமண மணநீக்கந் தொடர்பாக அக்காலத்துக்கென உள்ள சட்டத்தின் கீழ் நியாயாதிக்கம் பிரயோகிக்கும் காதிமார் களினது நியமனம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**நீதிச் சேவைகள் ஆலோசனைச்சபை.**

**125.** (1) அரசியலமைப்பின் கீழ் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவும் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ள அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என நீதிச்சேவைகள் ஆணைக்குழு வொன்றிருத்தல் வேண்டும்.

(2) நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை ஐந்து உறுப்பினரைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினருள் ஒருவர் முதனிலை நியாயாதிக்கம் கொண்ட மிகவுயர்ந்த நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாயிருப்பவராதல் வேண்டும். அவரே தவிசாள ராதல் வேண்டும். முதனிலை நியாயாதிக்கம் கொண்ட மிகவு யர்ந்த நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி தவிசாளராகப் பணி யாற்றவியலாதிருக்குமிடத்து, அந்நீதிமன்றத்தின் அடுத்த சிரேட்ட நீதிபதி தவிசாளராதல் வேண்டும்.

(3) தவிசாளர் தவிர்ந்த நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப்பினர்கள் சனுதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். சனுதி பதியினுல் நியமிக்கப்படும் உறுப்பினர்களுள், ஒருவர் 124 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச அலுவலர்களுள் இருந்தும், மற்றொருவர் 124 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச அலுவலர்களுள் இருந்தும் நியமிக் கப்படல்வேண்டும்.

(4) ஆள் ஒருவர், தேசிய அரசுப்பேரவை உறுப்பினராக விருந்தால் அவர் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுதலாகாது அல்லது அவ்விதம் இருத்தலாகாது.

(5) தவிசாளர் தவிர்ந்த நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவரது நியமனத் தேதியிலிருந்து நாலு ஆண்டுகாலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) தவிசாளரது பதவி தவிர்ந்த, நீதிச்சேவை ஆலோசனைச்சபை உறுப்பினர் எவரதும் பதவி,—

(அ) அத்தகைய உறுப்பினர் இறக்குமிடத்து ;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்தொன்றன்மூலம் தமது பதவியிலிருந்து அத்தகைய உறுப்பினர் விலகுமிடத்து ;

(இ) சனாதிபதியால் அவ்வுறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து ; அல்லது

(ஈ) 124 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்ட அரச அலுவலர்களுளிருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினராயின், அவர் அத்தகைய அரச அலுவலராதல் ஒழியுமிடத்து,

வெற்றாதல் வேண்டும்.

(7) நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையுறுப்பினர் எவரதும் பதவி இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழ் வெற்றாகுமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்துக்குச் சனாதிபதி வேறொருவரை நியமித்தல் வேண்டும். அவ்விதம் நியமிக்கப்பட்ட ஆள் அவ்வுறுப்பினரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) தவிசாளர் தவிர்ந்த நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை உறுப்பினர் எவரும் எக்காரணத்தாலாயினும் அவரது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றவென வேறொராளைச் சனாதிபதி நியமிக்கலாம்.

(9) நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையுறுப்பினர்க்கு தேசிய அரசுப்பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய சம்பளம் அல்லது படிகள் கொடுக்கப்படலாம். அத்தகைய உறுப்பினர்க்குக் கொடுக்கப்படவேண்டிய எதேனும் சம்பளம் அல்லது படி திரட்டுநிதியில் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(10) நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் தவிசாளருடனான ஆலோசனையின் மீது அமைச்சரவையால் நியமிக்கப்படும் நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

(11) நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையினுடனான ஆலோசனையுடன் அமைச்சர் அவை—

(அ) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகள், ஏனைய அரச அலுவலர்கள் என்போரது ஆட்சேர்ப்புத் திட்டங்களும், நியமன நடவடிக்கை முறைகளும், சம்பந்தமான விதிகளையாக்கலாம் ; அத்துடன்

(ஆ) நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பனவற்றைப் பிரயோகிப்பதற்கு புரிவதற்கு, நிறைவேற்றுவதற்கு தேவையான அல்லது உகந்த அத்தகைய வேறு அலுவல்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

நீதிபதிகளதும் நீதிநிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம்.

**126.** (1) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகளதும், ஏனைய அரச அலுவலர்களதும் நியமனம், நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் விதப்புரையைப் பெற்ற பின்னர் அமைச்சரவையால் செய்யப்படல் வேண்டும்.

(2) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் நியமனங்களைச் செய்வதற்கான சந்தர்ப்பம் எழும்போதெல்லாம், நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை நியமனத்துக்கு விதப்புரை செய்யப்படும் ஆட்களின் நிரலொன்றை, விண்ணப்பஞ் செய்தவர்களின் நிரலொன்றையும் சேர்த்து, அமைச்சரவைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) விதப்புரை செய்யப்பட்ட நிரலிலிருந்து எவ் ஆளையும் அமைச்சர் அவை நியமிக்கலாம்.

(4) விதப்புரை செய்யப்பட்ட நிரலில் இல்லாத விண்ணப்பகாரர் ஒருவரை அமைச்சர் அவை நியமிக்கலாம் ; அத்தகைய நியமனம் ஒன்று செய்யப்படுமிடத்து, அமைச்சரவை, நியமனம் செய்யப்பட்ட ஆளின் பெயரையும், நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை செய்த விதப்புரையை ஏற்றுக்கொள்ளாததற்கான காரணங்களையும், நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை விதப்புரை செய்த ஆட்களின் நிரலையும், தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய மட்டுப்பாடுகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகளதும் ஏனைய அரச அலுவலர்களதும் பதில் நியமனங்கள் செய்வதற்கான தத்துவத்தை நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபைச் செயலாளருக்கு அமைச்சரவை கையளிக்கலாம்.

**நீதிபதிகளதும், நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் வேலை நீக்கமும் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடும்**

நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச்சபை.

**127.** (1) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகள், ஏனைய அரச அலுவலர் என்போரின் வேலை நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கென நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச்சபை ஒன்றிருத்தல் வேண்டும்.

(2) நீதிச் சேவைகள் ஒழுக்காற்றுச்சபை மூன்று உறுப்பினரைக் கொண்டதாயிருத்தல் வேண்டும். முதனிலை நியாயாதிக்கம் கொண்ட மிகவுயர்ந்த நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி சபையின் தவிசாளராதல் வேண்டும். சனாதிபதியினால் பெயர் குறிப்பிடப்படும் அந் நீதிமன்றத்தின் மற்றைய இரண்டு நீதிபதிகள் சபையின் மற்ற இரண்டு உறுப்பினருமாதல் வேண்டும்.

(3) தவிசாளர் தவிர்ந்த, நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச்சபையின் உறுப்பினர் எவராயினும் எக்காரணத்தாலாயினும் அவரது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரியவியலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென முதனிலை நியாயாதிக்கம் கொண்ட மிகவுயர்ந்த நீதிமன்றத்தின் மற்றொரு நீதிபதியைச் சனாதிபதி நியமிக்கலாம்.

(4) நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் செயலாளர் நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் செயலாளர் ஆதல் வேண்டும்.

(5) நீதிச் சேவைகள் ஒழுக்காற்றுச் சபையுடனான ஆலோசனையுடன் அமைச்சரவை—

(அ) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய நீதிபதிகள் ஏனைய அரச அலுவலர் என்போரது நடத்தை விதிகளையாக்கலாம் ;

(ஆ) ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கான நடவடிக்கை முறைவிதிகளையாக்கலாம் ; அத்துடன்,

(இ) நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் கடமைகளைப் புரிவதற்குத் தேவையான அல்லது உகந்த அத்தகைய வேறு காரியங்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

(6) நீதிச் சேவைகள் ஒழுக்காற்றுச்சபை, 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதி அல்லது வேறு அரச அலுவலர் மீது அதற்குள்ள வேலை நீக்கத் தத்துவங்களைப் பிரயோகிக்குமிடத்து, நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச்சபை, அதுபற்றிய அறிக்கையொன்றை நீதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் மூலம் அமைச்சரவைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையின் பிரதி ஒன்று தேசிய அரசுப்பேரவைச் சபாநாயகருக்கும் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*தீயொழுக்கத்துக்காகப் பதவியிலிருந்து அகற்றப்படுதல்.*

128. தீயொழுக்கத்துக்குக் குற்றவாளியாகக் காணப்படும் 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்படும் நீதிபதியொருவர் அல்லது அரச அலுவலர் ஒருவர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

*நீதிபதிகளையும் நீதிநிருவகிக்கும் அரச அலுவலர்களையும் பதவியிலிருந்து அகற்றுதல்.*

129. (1) 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட எவரேனும் நீதிபதி அல்லது அரச அலுவலர் அவரின் தீயொழுக்கத்துக்காகத் தேசிய அரசுப் பேரவையின் வேண்டுகோளின்மீது சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, 127 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் செயற்படுதல் வேண்டும்.

(3) அவ்விதம் அகற்றுவதற்கான பிரேரணை எதுவும், அப் பிரேரணை எந்த நீதிபதி அல்லது அரச அலுவலர் சம்பந்த மானதோ அவருக்கெதிராக அப்பிரேரணையில் காணப்பட்டுள்ள சாட்டுகளின் விவரங்கள் மீது சபாநாயகர் நீதிச் சேவைகள் ஒழுக்காற்றுச் சபையின் அறிக்கையொன்றைப் பெறும்வரை, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படலாகாது.

(4) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அதற்கு அனுப்பிவைக் கப்பட்ட சாட்டின் விவரங்கள் மீது நீதிச்சேவை ஒழுக்காற்றுச் சபை காணும் முடிவுகள் இறுதியானவையாதல் வேண்டும். அவை தேசிய அரசுப் பேரவையினுல் விவாதிக்கப்படலாகா.

(5) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச் சபைக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் சாட்டின் மீது விசாரணை செய்து சபாநாயகருக்கு அறிக்கை செய்யவேண்டியது அச்சபையின் கடமையாதல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய அறிக்கையானது, அத்தகைய எதுவேனும் குற்றச்சாட்டின் மீது ஏலவே நடத்தப்பட்டுள்ள அல்லது தொடங் கப்பட்டுள்ள விசாரணையில் நீதிச்சேவைகள் ஒழுக்காற்றுச் சபை கண்ட முடிவுகளைக் கொண்டதாயிருக்கலாம்.

**நீதிபதிகளையும், நீதிநிருவாகஞ் செய்யும் ஏனைய அரச அலுவலர் களையும் இடமாற்றஞ் செய்தல்**

நீதிபதிகளதும் நீதிநிருவகிக்கும் அரச அலுவலர் களதும் இடமாற் றங்கள்.

**130.** (1) நீதிச்சேவை ஆலோசனைச்சபை, 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகளதும் நீதி நிருவகிக்கும் ஏனைய அரச அலுவலர்களதும் இடமாற்றத்தைச் செயற்படுத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் இடமாற்றத்தைச் செயற்படுத்தும் கட்டளைக் கெதிராக, நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு, அமைச்சரவையால் தீர்மானிக்கப்படும் நடவடிக்கை முறைகளுக்கமைய, மேல் முறையீடு ஒன்று செய்யப்படலாம்.

(3) நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை, அமைச்சரவையின் ஒருப்பாட்டுடனும், விதிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக் கமையவும் நீதிச்சேவை ஆலோசனைச் சபைச் செயலாளருக்கு, 124 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நீதிபதிகள் ஏனைய அரச அலுவலர்கள் என்போரது இடமாற்றம் சம்பந்தமான இடைநேர் விளைவான கருமங்களைக் கையாள்வதற்குத் தேவையான அத்த கைய தத்துவங்களைக் கையளிக்கலாம்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்கென "இடமாற்றம்" என்பது சம்பளவுயர்வை உட்படுத்தாத இடமாற்றம் எனப் பொருள்படல் வேண்டும்.

### நீதியை நிருவகிக்கும் ஆட்களின் சுதந்திரம்

நீதிபதிகளினதும் நீதி நிருவகிக்கும் அரச அலுவலர்களினதும் சுதந்திரம்.

**131.** **(1)** நீதிமுறைத் தத்துவங்கள் அல்லது பணிகள் சட்டத்தினால் பொறுப்பிக்கப்பட்டுள்ளவரான ஒவ்வொரு நீதிபதியும், அரச அலுவலரும் அல்லது வேறு ஆளும் அத்தகைய நீதிமுறைத் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் அத்தகைய நீதிபதிக்கு, அரச அலுவலர்க்கு அல்லது ஆளுக்கு பணிப்பு விடுக்க அல்லது மேற்பார்வை செய்யச் சட்டத்தின் கீழ் உரிமை கொண்டுள்ள உயர்தர நீதிமன்றம் அல்லது நிறுவனம் தவிர, வேறு ஆள் எவரிடமேனுமிருந்துவரும் ஏதேனும் பணிப்பு அல்லது தலையீட்டுக்குப் பணியாது, சட்டத்தினால் அவருக்குத் தரப்பட்டுள்ள நீதிமுறைத் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

**(2)** அதற்கான சட்ட அதிகாரம் இல்லாது, இப்பிரிவின் (1)-ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட எவரேனும் நீதிபதி, அரச அலுவலர் அல்லது ஆள் என்போர் அவரது நீதிமுறைத் தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் தலையிடுகின்ற அல்லது தலையிட எத்தனிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், ஓராண்டுவரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்துக்கு இருவகையில் ஒரு வகை மறியல் விதித்து அல்லது குற்றப்பணம் விதித்து அல்லது குற்றப்பணமும் மறியலும் ஆகிய இரண்டும் விதித்துத் தண்டிக்கக் கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## அத்தியாயம் 15

### நீதிபதிகளும், பகிரங்க ஊழியரும் மற்றையோரும் சேவையில் தொடர்ந்திருந்துவரல்

நீதிபதிகளும், பகிரங்க ஊழியர்களும் ஏனையோர்களும் சேவையில் தொடர்ந்திருந்துவரல்.

**132.** தேசிய அரசுப்பேரவை வேறுவகையில் ஏற்பாடு செய்யும் வரையில், அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர்முன்னர்—

(அ) 121 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட எதுவேனும் நீதிமன்றத்தில் நீதிமுறைப் பதவிவகித்த ஆள் ஒவ்வொருவரும் ; அல்லது

(ஆ) இலங்கை அரசாங்கத்தின், எதுவேனும் உள்ளூர் அதிகாரசபையின் அல்லது எதுவேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்த ஆள் ஒவ்வொருவரும் ; அல்லது

(இ) எதுவேனும் உள்ளூரதிகார சபையில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் பதவி வகித்த ஆள் ஒவ்வொருவரும் ; அல்லது

(ஈ) எழுத்திலான எதுவேனும் சட்டத்தின் கீழ் எதுவேனும் நியமனம் வகித்த ஆள் ஒவ்வொருவரும்,

அவையேயான நியதி, நிபந்தனைகளின் கீழ் அத்தகைய சேவையில் தொடர்ந்திருந்துவரல் வேண்டும் அல்லது அத்தகைய பதவியை அல்லது நியமனத்தைத் தொடர்ந்து வகித்துவரல் வேண்டும்.

அரச அலுவலர்களும் ஏனையோர்களும் விசுவாசச் சத்தியம் செய்ய வேண்டுதல்.

**133.** (1) அரச அலுவலர் ஒவ்வொருவரும், அவரின் பதவியின் கடமைகளை மேற்கொள்ளும் பொழுது சத்தியம் செய்து கொள்ள வேண்டுமென அரசியலமைப்பினுல் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய வேறு ஆட்களும் இப்போதுள்ள சட்டத்தின் கீழ் பதவிச் சத்தியம் செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள பதவியை வகிக்கும் ஒவ்வொருவரும், ஒவ்வோருள்ளூரதிகாரசபையினதும், ஒவ்வோர் அரச கூட்டுத்தாபனத்தினதும் சேவையினுள்ள ஆள் ஒவ்வொருவரும் "ஆ" என்னும் அட்டவணையில் விதிக்கப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கொள்ளல் வேண்டும். அரசியலமைப்புத் தொடங்கியதிலிருந்து முதலமைச்சரால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துள் விசுவாசச் சத்தியத்தைச் செய்து கொள்ளாதுவிடும் அத்தகைய அரச அலுவலர், ஆள் அல்லது பதவி வகிப்பவர் எவரும் சேவையிலிருந்து ஒழிந்தவராதல் வேண்டும் அல்லது பதவி வகியாதொழிதல் வேண்டும்.

(2) பகிரங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அரச அலுவலர், ஆள் அல்லது பதவி வகிப்பவர் எவரையும், அவரவ்விதம் விதிக்கப்பட்ட காலத்தினுள் சத்தியம் செய்து கொள்ளாது விட்டமை சுகவீனத்தினுல் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்தினுலாகும் என திருப்திப்பட்டால், தமது தனித்தற்றுணிபின்படி விதிக்கப்பட்ட காலத்தின் பின்னர் விசுவாசச் சத்தியம் செய்து கொள்ள அனுமதிக்கலாம். அவரவ்விதம் சத்தியம் செய்துகொள்ளுமிடத்து, அவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறுன காலத்துள் குறித்த சத்தியத்தைச்செய்து கொண்டாற்போன்று சேவையில் தொடர்ந்திருந்துவருதல் வேண்டும் அல்லது பதவி வகித்துவரல் வேண்டும்.

# அத்தியாயம் 16

## பொதுமக்கள் பாதுகாப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு.

**134.** (1) தேசிய அரசுப்பேரவை வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, பொதுமக்கள் பாதுகாப்புக்கட்டளைச்சட்டம் ஏற்ற மாற்றங்களுடனும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கும் இப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கும் அமையவும் தேசிய அரசுப் பேரவையினாலாக்கப்பட்ட சட்டமொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) அவசர காலநிலை ஏற்பட்டுள்ளது என அல்லது ஏற்படப் போகின்றதென முதலமைச்சர் சனாதிபதிக்கு ஆலோசனையளிக்கு மிடத்து, சனாதிபதி அவசர காலநிலையை வெளிப்படுத்துதல் வேண்டும். அவசரகாலநிலை தொடர்பில் முதலமைச்சரினால் சட்டமுறை யாகப் புரியப்படும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள எல்லாக் காரியங்களிலும் முதலமைச் சரின் ஆலோசனை மீது சனாதிபதி செயலாற்றுதல் வேண்டும்.

**காலந் தன்னில் வானம் பொழிக**
**கூலச் சாலி பொலிக வென்று,**
**ஞாலம் மகிழ்க, மன்னன், என்றும்**
**சால நல்ல றத்தோன் ஆகுக.**

**மங்களம் உண்டாகுக.**

**அட்டவணை " அ "**

(1) இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும்) அரசப் பேரவைக் கட்டளைகள் 1946, 1947.

(2) அரச மகுடங்கள் சட்டம்.

(3) அரச நிறைவேற்றற்றத்துவங்களும் இலச்சினைகளும் சட்டம். பிரிவுகள் 1—10, 13அ, 14, 15 என்பன.

## அட்டவணை "ஆ"

..................................................................ஆகிய யான், இலங்கைக் குடியரசுக்கு நம்பிக்கையுள்ளவராகவும் உண்மையான விசுவாசம் கொண்டவராகவும் இருப்பேன் எனவும், இலங்கைக் குடியரசுக்கு நன்றாகவும் உண்மையாகவும் சேவை செய்வேன் எனவும்........................................ ஆகிய எனது பதவியின் கடமைகளை அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்க முறையாகவும் நம்பிக்கைக்குரியவகையிலும் நிறைவேற்றுவேன் எனவும் பயபக்தியுடன் உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்.